# சுதேச கீதங்கள்

(முதற்பாகம்)

சி. சுப்பிரமணிய பாரதி

பெற்ற தாயும் பிறந்த பொன் னாடும்
நற்றவ வானினும் நனி சிறந் தனவே.

"பாரதி பிரசுராலயம்"
திருவல்லிக்கேணி, சென்னை.

மூன்றாம் பதிப்பு] க்ரோதன ௵ [விலை ரூ ஒன்று



ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார்.

"ஹிந்தி பிரசார அச்சுக்கூடம்"
முதல் இரண்டு பதிப்பு 5000
மூன்றாம் பதிப்பு 2000 க்ரோதன ௵

வந்தே மாதரம்.

எனது ஸஹோதர, ஸஹோதரிகளே !

நான் விசேஷமாகப் படித்தவளல்ல இந்த நூலுக்கு முகவுரை எழுதும் பொருட்டு நான் முன்வரவில்லை. அதற்கு எனக்கு சக்தியுமில்லை. ஆனால் என்னைப்போல் இந்தத் தமிழ் நாட்டில் எனது அன்பான ஸஹோதர ஸஹோதரிகளுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன்.

எனது புருஷன் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதி இந்த நாட்டில் பிறந்தார் - வளர்ந்தார் - வாழ்ந்தார். இறந்தார். அவருடைய ஸ்தூல தேகத்திற்கு முடிவு நேரிட்டு, ஆத்மா விண்ணுலகம் சென்று விட்டது. கடவுளின் திருவிளையாடலில் இப்படி ஒரு ஆத்மா இவ்வுலகத்தில் ஜனித்து, சொற்ப காலந் தங்கி, சிற்சில காரியங்களைச் செய்துவிட்டு திரும்பப் போய்விட வேண்டுமென்ற கட்டளையின்படி என் புருஷனும் ஜனித்து, செய்யவேண்டிய காரியங்களை அவஸரம்அவஸரமாகச் செய்துவிட்டு, காலம் ஸமீபித்தவுடன், இறப்பதுவும் ஒரு அவஸரமான கடமையாகக்கொண்டு, அதனையும் செய்து முடித்தார். 1904-ம் வருஷத்தில் சுதேசமித்திரன் பத்திரிகையில் உப பத்திராதிபராக அமருமுன்பே, நம் நாட்டைப் பற்றிய கவலை அவருக்கு அதிகம் ஏற்பட்டுவிட்டது. எட்டையபுரம் ஸமஸ்தானாதிபதியின்கீழ் தான் ஏற்றுக்கொண்ட வேலை

யைத் திரணமாக நினைத்துத் தள்ளினார்; மதுரை சேதுபதி வித்யாசாலையில் தமிழ்ப்பண்டிதர் வேலையையும் அற்பமாக எண்ணித் தள்ளினார். சுதேசமித்திரன் பத்திரிகைக்கு உழைக்க ஆரம்பித்தவுடன் அவரது உள்ளம் மலர்ச்சியடைய ஆரம்பித்தது ஸுமார் இரண்டு வருஷம் கழிந்தபின் 'இந்தியா' என்னும் வாராந்தரப் பத்திரிகையை ஆரம்பித்தார். உடல், பொருள் ஆவி மூன்றையும் தேச கைங்கர்யத்திற்கு முழுமனதுடன் அர்ப்பணம் செய்தார். ஸரஸ்வதி தேவி அவர்வாக்கில் நர்த்தனஞ் செய்ய ஆரம்பித்தாள். "வந்தே மாதரம்" என்ற சப்தம் அவரது ஹிருதயத்திலிருந்து முழுத் தொனியுடன் கிளம்பிற்று-தமிழ்நாடெங்கும்பரவிற்று வீடு - வாசல் - மனைவி - பிள்ளை - குட்டி ஜாதிவித்தியாஸம் - அகந்தை - முதலியவை முற்றும் மனதினின்றுவிட்டு அகன்றது. தேசப்பிரஷ்டமானார். புதுவையில் தேசபக்தி விரதத்தைப் பலவிதமாக அநுஷ்டித்தார். திரும்ப வந்து தந் நாட்டை ஒரு முறை பார்க்கவேண்டுமென்ற அவா அதிகரித்தது. அதற்காகச் சில நிபந்தனைகளை ஒப்புக்கொண்டார். மறுபடியும் சுதேச மித்திரனில் ஒரு வருஷம் உழைத்தார். தான் வந்த காரியம் முடிவடையவே, விண்ணுலகஞ் சென்ற தேசபக்தர் கூட்டத்தில் தானும் போய்ச் சேர்ந்துகொண்டார்.

நமது நாடு இன்னது ; நமது ஜனங்கள் யாவர் நமது பூர்வோத்திரம் எத்தகையது ; இன்று நமது நிலை யென்ன ; நமது சக்தி எம்மட்டு ; நமது உணர்ச்சி எத்தன்மையது ; இவைகளைப் பற்றிய விவகாரங்

களும் சண்டைகளும், தீர்மானங்களும், அவருடைய ஜீவனுக்கு ஆதாரமாகவிருந்தன. எதுவும்யோசித்தாக வேண்டியதில்லை. திடீர் திடீர் என்று எண்ணங்கள்-புதிய புதிய கொள்கைகள்-புதிய புதிய பாட்டுக்கள்-அப பாட்டுக்களுக்குப் புதிய புதிய மெட்டுக்கள்-எனது இருகாது களும் மனமும் ஹிருதயமும் நிரம்பித்ததும்பும் - இந்த ஒரு பாக்கியம் நான் பெற்றேன். இம்மாதிரி பாக்கியம் பெற, எத்தனை கோடி ஜன்மம் வேண்டுமானாலும், திருப்பத் திரும்பப்பெறத் தயாராக இருக்கிறேன். அவரது தேகத்தின் ஜீவன்போய் விட்டது. அவரது ஜீவனுக் காதாரமாக விருந்த பாரத மாதாவின் ஜீவசக்தி என்றென்றும் அழியாதது. தமிழ்நாடு உள்ளளவும், தமிழ் நாட்டில் ஒரு மனிதனோ அல்லது ஒரு சிறு குழந்தையோ, தமிழ்பேசிக் கொண்டிருக்கு மளவும் பாரதியின் மூலமாக நமக்குக் கிடைதத ஜீவசக்தி நிலைத்திருக்குமென்று என் ஹிருதயம் சொல்லுகிறது. இதனை நீங்களும் உணர்ந்திருக்கிறீர்கள், இல்லையென்று தான் நான் உங்களுக்குச் சொல்ல முன்வந்தேன்.

செல்லம்மா.

## ஓர் விண்ணப்பம்.

தமிழ் மக்களே!

தங்களில் சிலர் புகழ்தற்குரிய விசேஷ உதவி புரிந்தும், பெரும்பாலர் இன்னும் தாய் பாஷை முன்னேற்றத்தைக் கவனிக்காமலிருப்பதால் தான் தமிழ் பாஷை இம்மாதிரி நிலையிருக்கிறது.

திருநெல்வேலி தாலுகா போர்டு கமிட்டியார் இப்புஸ்தகத்தின் மூலமாய் மாணவர்களுக்கு தேசபக்தி யூட்டும் பொருட்டு தங்கள் ஆதரவிலுள்ள பள்ளிகளில் இதை வைக்க முயன்றும் ஸர்க்கார் கல்வி இலாகா இதைச் சட்ட விரோதமாக எடுத்துவிடச் செய்த அவமானத்தை தமிழ் நாட்டாராகிய நாம் எவ்வாறு நீக்கப் போகிறோமென்பது முக்கியமான கேள்வி. எமக்கு ஒருவழியே தோன்றுகின்றது. பள்ளிகளில் திரும்பவைக்க முயற்சிசெய்ய வேண்டியதும் நம் கடமையாகும். பள்ளிக்கூடங்களில் வைக்காமற் போனாலும் தாய் தந்தையர் தங்கள் குழந்தைகளுக்கு வீடுகளிலாவது அவசியம் கற்றுக்கொடுக்கவேண்டுவது தங்கள் கடமையாக உணர்ந்து அவ்வாறு செய்ய வேண்டும்.

இதிலுள்ள முக்கியமான பாடல்களை மாணவர்களுக்கு உபயோகமாகும்படி தனியாக குறைந்த விலை வைத்து வெளியிட்டிருக்கும் மூன்றணா புஸ்தகத்தையும்வாங்கி கனவான்கள் மாணவர்களுக்கு இனாமாகக் கொடுக்கலாம்.

க்ரோதன ௵
கார்த்திகை ௴
௧௫ ௳ } பாரதி பிரசுராலயத்தார்.

ஸமர்ப்பணம். (ஸ்வதேசகீதங்கள்)

ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டி ஆத்தும நிலை விளககியதொப்ப, எனக்குப் பாரத தேவியின் ஸம்பூர்ண ரூபத்தைக்காட்டி, ஸ்வதேச *பக்தி யுபதேசம்* புரிந்தருளிய *குருவின்சரண மலர்களில்* இச்சிறு நூலை ஸமர்ப்பிக்கிறேன்

ஸமர்ப்பணம். (ஜன்மபூமி)

எனக்கு ஒரு கடிகையிலே, மாதாவினது மெய்த் தொண்டின் தன்மையையும், துறவுப்பெருமையையும், சொல்லாம லுணர்த்திய குருமணியும், பகவான் விவே காநந்தருடைய தர்மபுத்திரியும் ஆகிய *ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு* இந்நூலை ஸமர்ப்பிக்கிறேன்.

"ஸ்வதேச கீதங்கள்" (1908) முகவுரை

*ஒருமையும் யௌவனத்தன்மையும் பெற்று விளங்கும் பாரததேவியின் சரணங்களிலே யான் பின் வரும் மலர்கள் கொண்டு சூட்டத்துணிந்தது எனக் குப் பிழையென்று தோன்றவில்லை. யான்சூட்டி யிருக் கும் மலர்கள் மணமற்றன வென்பதை நன்கறிவேன். தேவலோகத்துப் பாரிஜாதமலர்கள் சூட்டத்தகுதி கொண்ட திருவடிகளுக்கு எனது மணமற்ற முருக்கம் பூக்கள் அணிக்குறைவை விளைக்குமென்பதையும் நான் தெரிந்துள்ளேன். ஆயினும் உள்ளன்பு மிகுதி யால் இச்செய்கையிலே துணிவுகொண்டு விட்டேன். சாக்கியன் எறிந்த கற்களையும் சிவபிரான் மலர்களா கக்கருதி அங்கீகரிக்கவில்லையா? அதனை யொப்ப எனது குணமற்ற பூக்களையும் பாரதமாதா கருணை யுடன் எற்றருளுக!*

## "ஜன்ம பூமி" (1909) முகவுரை.

இனிய நிலவின் ஒளியால் விழுங்கப்பட்டு உலகம்
அவாங்மன கோசரமாகிய ஸௌந்தர்யத்தையும் பெற்
றிருக்கும் ஸமயத்தில், ஒவ்வொரு கவிஞனுடைய உள்
ளமும் தன்னையறியாது குதூஹல மடைகின்றது.
சூரியன் உதித்தவுடனே சேதனப் பிரக்ருதி மட்டு
மேயன்றி அசேதனப் பிரக்ருதியும், புதிய ஜீவனை
யும், உற்சாகத்தையும் பெற்றுத் திகழ்கின்றது. இவற்
றினை யொப்பவே, நாட்டில் ஓர் புதிய ஆதர்சம் - ஓர்
கிளர்ச்சி - ஓர் தர்மம் - ஓர் மார்க்கம் - தோன்றுமே
யானால், மேல்மக்களின் நெஞ்சமனைத்தும், இரவி
யை நோக்கித் திரும்பும் சூரியகாந்த மலர்போல,
அவ்வாதர்சத்தை நோக்கித் திரும்புகின்றன. சென்ற
சுபகிருது வருஷத்திலே பாரதநாட்டில் ஸர்வ லோகங்
களுக்கும் மூலாதார மாகிய "தேசபக்தி" என்ற நவீ
னமார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தை
யெல்லாம் உடனே புளகித மாயின. நல்லோ
ருடைய குணங்களிலே குறைவுடையவனாகிய யானும்
தேவியினது கிருபையால அப்புதிய சுடரினிடத்து
அன்பு பூண்டேன். அவ்வன்பு காரணமாகச் சென்ற
வருஷம் சில கவிதை மலர் புனைந்து மாதாவின் திரு
வடிக்குப் புனைந்தேன். நான் எதிர்பார்த்திராத வண்
ணமாக மெய்த் தொண்டர்கள் பலர் "இம்மலர்கள்
மிக நல்லன" என்று பாராட்டி மகிழ்ச்சி யறிவித்தார்
கள். மாதாவும் அதனை அங்கீகாரம் செய்துகொண்
டாள். இதனால் துணிவு மிகுதியுறப் பெற்றேனாகி,
மறுபடியும் தாயின் பாத மலர்க்குச் சில புதிய மலர்

கள் கொணர்ந்திருக்கின்றேன். இவை மாதாவின் திருவுள்ளத்திற்கு மகிழ்ச்சியளிக்குமென்றே நினைக்கின்றேன்; "குழலினிது யாழினி தென்ப தம்மக்கள் மழலைச் சொற கேளாதவர்" என்பது வேதமாதலின்.

இங்ஙனம்,

சுப்பிரமணிய பாரதி.

---

## "நாட்டுப் பாட்டு"

## (1919)

### முகவுரை.

பாரதியாரின் பாடல்களைப் பற்றி ஒரு சிறிய ஆராய்ச்சி எழுதுவதென்றாலும் அது பெரிதாக விரியும். எனவே, அந்தக் கடமையை இங்கு நான் செய்யவில்லை.

பாரதியாரின் பாடல்கள் தமிழர்களுக்குப் புதிய உயிர் அளிப்பன. அவரது பாடல்களெல்லாம் மேலான தேசபக்தியையும், தெய்வ பக்தியையும் உண்மையான கவிகள் விளக்கும் ஒப்பற்ற இன்பத்தையும் விளக்கின்றன. அவர் பாடல்களைப் படித்த காசிவாஸியான எனது நண்பர் ஒருவர் "அவரது அரிய கவிகளைப் படித்து உடம்பு சிலிர்த்தேன். இத்தகைய சிறந்த கவி வல்லோர்கள் இன்னும் இருந்து பாரதநாட்டைச் சிறப்பித்து வருவதால்தான் தமிழ் மாது விருத்தாப்பிய தசை அடையவில்லை; அடைய

மாட்டாள் என மகிழ்ந்தேன்" என்று எழுதினர். ஆயினும், இத்தகைய புலவர்களின் பெருமையை அறிந்து, அவர்களை ஆதரித்து, அவர்கள் அறிவும் திறமையும் தமிழ் நாட்டாருக்கு மிகவும் பயன்படும் வண்ணம் செய்யக்கூடிய தமிழர்கள் மிகச் சிலர் கூட இல்லாதிருப்பதை நோக்கும்பொழுது எனக்கு அள வற்ற விசனம் உண்டாகிறது.

இந்த 'நாட்டுப்பாட்'டின் பெருமையைத் தமி ழர்கள் நன்குய் அறிவார்கள் எனது தாய்த் திரு நாட்டைப் புகழும் இத்தகைய பாடல்களைப் பாடி மகிழுமாறு, யான் இந்த நாட்டிலே கோடி கோடி பிறப்பு பிறக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அண்ட சராசரங்கள் அனைத்தையும் ஆக்கியும், காத் தும், மாய்த்தும் வரும் பரம்பொருளின் பெரும் புகழை ஒருவன் எவ்வளவு காலந்தான் புகழ்ந்து போற்றினும் ஆவல் தீருமா? அதுபோல, இந்தத் தெய்விகத் திருநாட்டின் பெருமைகளை ஒருவன் எவ் வளவு காலந்தான் புகழ்ந்து பாடினும் ஆவல் தீராது.

பரலி.சு. நெல்லையப்ப பிள்ளை.

# அட்டவணை.


| | | பக்கம் |
|---|---|---|
| வந்தே மாதரம் | ... | க. |
| வந்தே மாதரம் | ... | உ. |
| பாரத நாடு | ... | ச. |
| நாட்டு வணக்கம் | ... | சு. |
| புது வருஷம் | ... | எ. |
| பாரத தேசம் | .... | அ. |
| ஜய பாரத | ... | கக. |
| செந்தமிழ் நாடு | ... | கங. |
| எங்கள் நாடு | ... | கரு. |
| ஜாதீய கீதம் (வங்காளி) | ... | கசு. |
| ஜாதீய கீதம் (மொழி பெயர்ப்பு) | .... | கஎ. |
| ஜாதீய கீதம் (புது மொழி பெயர்ப்பு) | ... | கஅ. |
| எங்கள் தாய் | ... | உ0. |
| மாதாவின் துவஜம் | .... | உஉ. |
| பாரத மாதா திருப்பள்ளி யெழுச்சி | .... | உரு. |
| பாரத தேவியின் திருத் தசாங்கம் | ... | உஎ. |
| ஸ்வாதந்திரப் பெருமை | ... | ங0. |
| ஸ்வாதந்திர தாகம் | ... | ஙக. |
| ஸ்வாதந்திர தேவியின் ஸ்துதி | .... | ஙச. |
| ஸ்வாதந்திரப் பள்ளு | ... | ஙசு. |
| தமிழ் மொழி வாழ்த்து | .... | ஙஅ. |
| தமிழ் | ... | ஙகூ. |

| | | |
|---|---|---|
| நவராத்திரிப்பாட்டு (க) | .... | ச0. |
| தமிழ்த் தாய் | ... | சக. |
| வெற்றி | ... | சங. |
| நவராத்திரிப்பாட்டு (உ) | ... | சச. |
| ஸரஸ்வதி ஸ்தோத்திரம் | ... | சரு. |
| ஸரஸ்வதி தேவியின் புகழ் | ... | சஎ. |
| லக்ஷ்மி தேவி—சரண் புகுதல் | ... | ரு0 |
| லக்ஷ்மி பிரார்த்தனை | ... | ருங. |
| ஸ்ரீ தேவி ஸ்துதி | .... | ருரு. |
| ஸ்ரீ கிருஷ்ணன் மீது ஸ்துதி | ... | ருஎ. |
| ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம் | ... | ருஎ. |
| பாரத ஸமுதாயம் | .... | சா0. |
| தொழில் | ... | சாஉ. |
| வெற்றிகொண்ட தாய் | ... | சாங. |
| அல்லா | .... | சாச. |
| யேசுகிறிஸ்து | .... | சாரு. |
| வேண்டும் | ... | சாசா. |
| நடிப்புச் சுதேசிகள் (கிளிக் கண்ணி) | ... | சாஎ. |
| தொண்டு செய்யும் அடிமை | ... | எ0. |
| மேத்தா திலகருக்குச் சொல்வது | ... | எஉ. |
| நிதானக் கட்சியார்—சுதேசியத்தைப் பழித்தல். | | எங. |
| பாரத தேவியின் அடிமை | ... | எரு. |
| ஆங்கிலேயன் ஒரு தேசபக்தனுக்குக் கூறுவது. | | எசா. |
| தேசபக்தன் ஆங்கிலேயனுக்கு மறுமொழி | | எஎ. |
| லாஜபத்ராய் ஸ்துதி | ... | எகூ. |
| லாஜபத்ராய் பிரலாபம் | ... | அ0. |
| தாதாபாய் நவுரோஜி | .... | அஉ. |

| | | |
|---|---|---|
| பூபேந்திர விஜயம் | ... | ௮௪. |
| அபேதாநந்த ஸ்வாமிகள் மீது ஸ்தோத்திரம் | ... | ௮௬. |
| ஸ்ரீ ரவிவர்மா | ... | ௮௭. |
| மாஜினி | ... | ௮௯. |
| ஆரிய தரிசனம் | .... | ௯௪. |
| புத்த தரிசனம் | .... | ௯௫. |
| கிருஷ்ணார்ஜுன தரிசனம் | .... | ௯௬. |
| மாயையைப் பழித்தல் | ... | ௯௯. |
| அச்சமில்லை | ... | ௧௦௧. |
| சங்கு | ... | ௧௦௩. |
| அறிவே தெய்வம் | ... | ௧௦௪. |
| அழகுக் தெய்வம் | ... | ௧௦௬. |
| பக்தி | ... | ௧௦௮. |
| ஜீவன் முக்தி | ... | ௧௧௧. |
| ஜய பேரிகை | ... | ௧௧௨. |
| முருகன் பாட்டு | ... | ௧௧௩. |
| முருகன் பாட்டு | .... | ௧௧௪. |
| வேலன் பாட்டு | ... | ௧௧௬. |
| முருகக் கடவுள் மீது கிளித்தூது | ... | ௧௧௮. |
| புதிய ருஷியா | ... | ௧௧௯. |
| பெல்ஜிய நாட்டிற்கு வாழ்த்து | ... | ௧௨௧. |
| சொல் | .... | ௧௨௪. |
| இறைவனை வேண்டுதல் | ... | ௧௨௬. |
| மனைத்தலைவிக்கு வாழ்த்து | ... | ௧௨௭. |
| ஆத்ம ஜயம் | ... | ௧௨௮. |
| மூன்று காதல் | ... | ௧௨௯. |
| லக்ஷ்மி காதல் | ... | ௧௩௦. |

| | | |
|---|---|---|
| காளி காதல் | ... | ௧௩௧. |
| கடமை | ... | ௧௩௨. |
| மணப் பெண் | ... | ௧௩௩. |
| நெஞ்சோடு சொல்வது | ... | ௧௩௫ |
| பகைவனுக் கருள்வாய் | ... | ௧௩௭. |
| மனமே | ... | ௧௩௮. |
| நிலாவும், வான்மீனும், காற்றும் | ... | ௧௩௯. |
| விடுதலை வெண்பா | ... | ௧௪௧. |
| விடுதலை | ... | ௧௪௨. |
| விடுதலை | ... | ௧௪௩. |
| விடுதலை | ... | ௧௪௪. |
| விடுதலை | ... | ௧௪௫. |
| பெண்கள் விடுதலைக் கும்மி | ... | ௧௪௬. |
| ஸூர்ய தரிசனம் | ... | ௧௪௮. |
| ஞாயிறு : ஸூர்ய ஸ்துதி | ... | ௧௪௯. |
| வெண்ணிலா | ... | ௧௫0. |
| பரசிவ வெள்ளம் | ... | ௧௫௩. |
| பொய்யோ ? மெய்யோ ? | ... | ௧௫௮. |

# ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதியார்.

## சரித்திரச் சுருக்கம்.

ஸமீபத்தில் காலஞ்சென்ற புலவர் திலகர் ஸ்ரீசுப்பிரமணிய பாரதியாரைத் தமிழகமே யன்றிப் பிறிதுலகும் சிறிதறியும். இவர் புகழ் எம்மனோர் போற்றப் பெருகுஞ் சிறுமை யுடைத்தன்று. புகழிற்போலவே வயதிலும் இவர் நண்பக லெய்தாக் காலை ஞாயிறேயாவர். நாடு மூடிய கால மேகங்களிலும், நடு நிலை யிறந்த ஓர் வுணர்ச்சி யிருளிலும் மறைந்து யாசற்ற விண்பெறாத் தற்காலத் தமிழ் நாட்டில் வெயில் செய வெள்கி இவர் பெரிதும் ஒளிந் தொளிர்ந்தார்.

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் மதித்தற்குரியவும் அரியவுமாம் குணம் பல வுடையார். இவரை நயப்பார் பலர்; வெறுப்பவர் சிலர்: இவர் மாட்டு இவ்விரு திறத்தாரும் வியக்குங் குணமும் பலவாம். இவரைத் தமிழ்நாடுசெய்த தவமென்பார் உளர்: வாணாளை வீணாக்கி, பல கற்றும் உலகத்தோ டொட்ட வொழுகும் நலங் கல்லாராகக் கருதும் பிறரும் உளர். பலர் இவரைத் தமிழகத்தே தலைநின்ற தேச பக்தராக வந்திப்பர்: தன்னலம் பேணாதார், பிறர் நலமும் அறியவொண்ணாரென்று இவரை நிந்திப்பாரு முண்டு. அறிவை அடிமைப் படுத்தி, உணர்வைக் கொள்ளைகொண்டு, 'நெஞ்சை அள்ளும்' அருங்கவி விரைந்தியற்றவல்ல அமுதவாய்ப் புலவர் இவரெனப் பலர் பாராட்டுவர்.

இப்பெரியார், ஜீவியத்தில் ஒரு பகுதி எழுதுவதற்கு நான் உரியனென்று இவர் மனைவியார் விரும்பியது ஒருவாறு பொருந்துவதாகும். உற்ற சுற்றத்தின் புறம்பே, இளமைப் பருவத்து இவரோடு நெருங்கிப் பழகிய பலருள்ளும், விரும்பத்தகும் இவர் இனிய குணங்கள் பலவற்றை அறிதற்குதவுங் காலத்தாலும் அணிமையாலும் நான் சிறிது அதிக உரிமை பாராட்டற் கிடமுண்டு. சென்ற பதினைந்தாண்டுகளாகச் சிறிதுஞ் சல்லாபத்திற் கிடமின்றி அறப்பிரிந்தேமாயினும், அதற்குமுன் இளமையில் தொடர்ந்த நெருக்கமும், சிறிதிடைப் பிரிந்து பின்னிடையருதுடன்பயின்று சோராது வளர்ந்த நேசமும் எனக்கு இவரிடத்துண்டு. இவர் சென்னையில் வஸிக்கச்சென்ற காலமுதற்றான் இவர் வாழ்க்கை அத்துணையாக நான் நேரில் அறியாததாம். இவ்வாறு பிரிந்த இப் பின் காலத்தும் வெளிவந்த இவர் பாடல்களும் பத்திரிகை வியாஸங்களும் பெரும்பாலும் நான் படியாதன இரா. இவர் ஸமுதாய வாழ்வை (Public life) யும் இயன்ற வரை கவனித்து வந்துளேன். உழுவலன்பு காரணமாக இவர் தம் விழுமிய நூல்கள் பற்றி இடையிடையே எனக்கெழுதுவதும் உண்டு. இவைகளிலிருந்து முன் இவர் பால் நான் நேரி லறிந்த பெருங்குணங்களொன்றேனும் மாறுபட்ட சான்று கிடைத்ததில்லை. ஒருவர்க்குரிய குணங்கள் மாறுது வேறொன்றும் பருவங் கழிந்தபின்னரே, இவர் தம்மூரையும் உற்றோரையும் விட்டுச் சென்னை சென்றார். ஆகவே இவை கொண்டு ஒருவாறு இப் புலவர் திலகர் ஜீவியத்தில்

பிறரறிய விரும்புவனவும் தகுவனவுமாய சிலவற்றை யீண்டு விளக்க விடைகொள்வேன.

இவர் தந்தையாரை யான் அறிவேன். முயற்சி திருவினை யாக்கும் என்ற முதுமொழிக்கு இலக்கிய மானவர். எட்டையபுரம் ஸமஸ்தானத்தில் உத்தியோகஸ்தரும் வித்வானுமாயிருந்து சிறந்த ஸ்ரீசின்னஸாமி அய்யரவர்களை அவர் காலத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் அறியாதவரில்லை. இவர் பிரஹசரண பிராமணோத்தமர். அக்காலத்திலேயே இவர் கலாசாலையுதவியின்றி ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருந்தார். தமிழில் அதி பண்டிதர். மேல் நாட்டுக் கணித முறைகளில் கைகண்ட நிபுணர். தர்க்கத்தில் தன்னிகரற்றவர். இவரது கூறிய மதிநுட்பமும், நாவன்மையும் இவரன்பை விரும்பாப் பண்டிதர் யாவருக்கும் அச்சம் விளைத்ததுபோலவே, இவரது பெருங்குணமும் விரிந்த உள்ளமும் இவர்பால் அழுக்காறு கொள்ளாத யாவருடைய மதிப்பையும், நேசத்தையும் உரிமை யாக்கின. முப்பது வருடங்களுக்கு முன்னரே, ஏழைகள்மீது இரக்கத்தாலும் நம்மவர் நலங்கருதியும் இவர் எட்டையபுரத்தில் யந்திரமணைச்சாலை யேற்படுத்த முன்னின்று முயன்று முடித்தார். இந்தப் பிரதேசத்தில் பருத்தி யந்திர மணைச்சாலை முதலில் ஏற்படுத்தத் துணிந்தவர் இவரே. தற்காலம் எட்டையபுரம் ஸமஸ்தானாதிபதியா யிருக்கும் பண்டித அரசருக்கு இவர் ஆப்த நட்பாளர். தனிகரும் பொதுநலப் பிரியரும் அருகிய ஊரில் இவர் முயன்று ஸ்தாபித்த

பருத்தி யறவைச்சாலை தற்காலம் பராதீனப்பட்டு
நடப்பதன் சரிதமும், தொழிலபிவிருத்தி முதலிய
நம்மவர் முன்னேற்ற முயற்சிகளால் இவர் கைப்பண
மிழந்து வறுமையுற்று வருந்திய விருத்தாந்தங்களும்
இக்கதைக்கு அவசிய மற்றவை. இத்தகைய அருள்,
அறிவு, ஆற்றல் நிறைந்திருந்த ஸ்ரீ சின்னஸாமி அய்யர்
அவர்களுக்கு அவர்களின் முதன் மனைவி பார்வயிற்று
தித்த ஔரஸபுத்திரரே நம் வரகவி.பாரதியாரின் அன்
னையாரை நான் நேரில் அறியேன். அந்த அம்மையா
ரை அறிந்த அனைவரும் அவர் அழகிலும் அருளிலும்
அவர் இயற்பெய ரொப்ப லக்ஷ்மியே யென்பர். இந்த
தம்பதிகளின் தவப்பயனாப் பாரதியார் 1882-வது
வருஷம் கார்த்திகை மாதத்தில், சுபதினத்தில், நல்ல
வேளையில், எட்டையபுரத்தில் அவதரித்தார். பெற்று
மகிழ்ந்த தாயார் இவர் புகழ் கேட்டுப் பின்னும் மகி
ழப்பெறுமுன்னே நமது கவியின் ஐந்தாவதாண்டிலே
யே பரமபதம் எய்தினர். அது முதல் இவர் தந்தை
யாரே தாயுமாயிருந்து பாந்திப் பரிந்து பராமரிக்க,
பாரதியார் அறிவிலும், உருவிலும் ஒப்புயர்வற்று
வளந்து ஊர் உவலை சொல்ல யாவரும் அதிசயிக்கத்
திகழ்வ தானார்.

நமது மஹாகவியின் தந்தையார் தமது குலாசா
ரத்தை அநுஷ்டித்து, சௌளம், உபனயனமாதி
ஸம்ஸ்காராதிகளைக் காலக்ரமத்தில் செய்து வைத்து
ஐந்தாவதாண்டில் அக்ஷராப்பியாஸமும் செய்துவைத்
தார். பள்ளிக்கூடங்களில் சென்று பயின்றதன் பிர

யோஜனத்தை இக்காலப் பள்ளிக் கூடங்களின் அநு பவமுள்ளவர்கள் அறிந்து கொள்ளலாம். பாரதியார் தமது ஏழாவது பிராய முதலே அருமையான தமிழ்க்கவிகளை விளையாட்டாக விரைந்து கவனஞ் செய்வதைக் கண்ட வித்வான்கள் நமது கவியின் தந்தையாரைப் புகழ்ந்திருப்பதை நான் நேரில் அறிவேன். எட்டு, ஒன்பதாவது ஆண்டுகளில் ஸர்வ ஸாதாரணமாய் கொடுத்த ஸமஸ்யைகளை வைத்து அற்புதமான கவிகளைப் பூர்த்தி செய்து பெரிய புலவர் கூட்டங்களைப் பிரமிக்கச் செய்த பல காலங்களிலும் நான் கூட இருந்திருக்கிறேன். காளிதாஸன், கம்பன் முதலிய வரகவிகளுக்குக் காளி வாக்கில் எழுதிய கால முதல், அநாயாஸமாய்க் கவி சொல்ல வாய்ந்ததென்று நாம் கேட்கும் கதைகளையும், குமரகுரு பரர் ஐந்தாவதாண்டில் அரும்பாக்கள் இயற்றினர் என்ற கதையினையும், அபூர்வ கற்பனைகளென்று புறக்கணித்த நான் பாரதியார் ஏழாவது வயது முதல் எளிதில் பாடலியற்றித் தமிழ்வாணர்கள் மெச்சும்படி காட்டிய திறமையை நேரில் கண்டபொழுது தான் கேவலம் படிப்பினால் பாவன்மை வராது, கவிகள் பிறப்பிலேயே அமையவேண்டு மென்று அறிந்தேன். பாரதியார் பதினோராவது ஆண்டில், புலவர்கள் கூடியதோர் பெருஞ் சபையில், புதிது புதிதாகக் கொடுத்த அடிகளைக் கொண்டே பூர்ண கவிகளை விரைந்தியற்றிச் சபையோரை வியப்பித்த போது, அவருடைய கவித்திறமையையும், அமிர்த வாக்கையும் கண்டு ஸந்தோஷப்பட்ட புலவர்களால் முதல்முதல் "பாரதியார்"

என்ற பட்டமும் கொடுக்கப் பெற்றார். அன்றுமுதல், இவரை யாவரும் பாரதியாரென்றே அழைக்க ஆரம் பித்தார்கள். தற்கால முறைப்படி, இவர் ஆரம்ப முதல் ஆங்கில கலாசாலைகளிலேயே படிப்பிக்கப் பெற்றாரே யன்றித் தனித் தமிழ் ஆசிரியர்களிடத்தில் தமிழ்ப்பாடம் கேட்கவில்லை. இவர் தந்தையார் இவரு டைய கல்வியில் விசேஷகவனஞ் செலுத்திய தூண்டு. இளம் பருவத்திலேயே பாஷையிலும் கணித முதலிய சாஸ்திர பாடங்களிலும், ஸமமாகச் சிறந்து விளங்கி னார். அதிகமாகப் பேசுகிறதில்லை. குழந்தைகள் எல் லோரோடும் சேர்ந்து விளையாடுவதிலும்பிரியப்படார். தனக்குற்ற தோழராகிய இரண்டொரு ஸஹபாடிக ளோடு மட்டும் பூராக்காலத்தையும் போக்கி வருவார். தேகப்பயிற்சியில் இவர் குழந்தை முதலே லக்ஷியமில்லாதவர். ஒழிந்த நேரமெல்லாம், ஜனப் பழக்கங் குறைந்த கோவில் மூலைகளிலும், தோட்டங் களிலும், குளக்கரைகளிலுமே தனித்தும், தம் உற்ற தோழரோடும் கழித்து வந்தார். ராமாயணம், பார தம் முதலிய இதிஹாஸக் கதைகளில் அதிகம் பிரே மையுள்ளவர். இவ்விதம், பதினைந்தா மாண்டளவில் இவர் காலம் எட்டையபுரத்தில் கழிந்தது.

1897-ம் வருஷம் ஆனி பதினைந்தில் பாரதியா ருக்குக் கடையத்தில் ஸ்ரீ செல்லப்பா ஐயரவர்கள் குமாரத்தி ஸ்ரீமதி செல்லம்மாளுடன் விவாஹம் நடந் தது. அங்கு வந்திருந்த ஹரிகேசவ நல்லூர் முதலிய பலவூர்த் தமிழ் வித்துவான்களும் இவர் புலமை

கண்டு, அளவற்ற ஸந்தோஷ மடைந்தார்கள். விவாஹ மான மறு வருஷமே இவர் தந்தையார் தேஹவியோக மானார். அதன பயனாக, பாரதியார் 1898-ம் வருஷம் காசிவாஸியாக நேர்ந்தது. இடையில், திருநெல்வேலி யில் ஹிந்து கலாசாலையில் சுமார் மூன்று வருஷம் மாணாக்கராக இருந்தார். அப்பொழுது ஏற்பட்டிருந்த வகுப்பு முறைபபடி மூன்று முதல் ஐந்துபாரம் வரையும் அக்கலாசாலையில் படித்தார். அக்காலத்தில் காலாசாலைத் தமிழாசிரியருடனும் காலஞ்சென்ற ஸ்ரீ நெல்லையப்பன் கவிராயரவர்கள் வீட்டில் ஓயாது கூடும வித்வான் களுடனும் இவர் இட்ட தமிழ்ப் போர்களின் தொகைக்கு அளவில்லை. இவர் ஸல்லாபத்தை மிகவும விரும்பிய கவிராயரவர்கள் இவரை மிகவும் பரிவாக ஆதரித்து வந்தார்கள். அந்தக் காலங்களில் இவருடைய அருமையான கவிதாசக்தி யையும், மாற்றலரை வாயடக்கும் புத்திக் கூர்மையை யும், பேசசுவன்மையையும் காட்டக் கூடிய கதைகள் பல உணடு. அவற்றையெல்லாம் விரிக்கில் பெருகு மென்றஞ்சி விடுக்கின்றேன். இரண்டு ஸந்தர்ப்பங் களில், எதிர்பாராத வண்ணம் இவர் தன்னை ஏழனம் பண்ணிய வயது முதிர்ந்த இரண்டு தமிழ் வாணர் களைத் தலை குனியச் செய்தார். அப்போது, எப். ஏ. பிரதம (ஸீனியர்) வகுப்பில் படித்துக் கொண்டிருந்த வரும், தமிழ்ப் பழக்க முள்ள சோணாசலம் பிள்ளை யவர்களின குமாரருமாகிய காந்திமதி நாத பிள்ளை யென்றவர்கள் முருகதாஸ ஸ்வாமிகளின் பழக்க முள்ளவர்களும், விசேஷமாகத் தமிழ்ப்பயிற்சி யுள்ள

வர்களுமா யிருந்தார்கள். அது பற்றி அடிக்கடி, பாரதியாரும் நானும், அவர்கள் வீட்டிற்குப் போவதுண்டு. ஒரு ஸமயம், பலர் கூடியிருக்கும் பொழுது, கூடியவர்கள் எல்லாருள்ளும் இளைஞரான பாரதியாரை அடக்க நினைத்துக் காந்திமதி நாத பிள்ளை யவர்கள், 'பாரதி சின்னப் பயல்' என்ற கடையடியைக் கொடுத்து, அதை வைத்து ஒரு வெண்பாவைப் பூர்த்திசெய்யுமபடி நமது புலவரைக்கேட்டார். அவர் சொல்லிவாய் மூடு முன், கேட்டவர் வியக்க, காந்திமதி நாத பிள்ளை தலைகுனிய, அங்குளள யாவரும் இவர் என்ன சொல்லப்போகிறு ரென்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே தனக்குக் கொடுத்த அடியைக்கடையடியாக வைத்து வெண்பாவைப் பூர்த்தி பண்ணினர். அதன் மூன்றுமடியின் இறுதி "காந்திமதி நாதனை" என்று வைத்து,

——————காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்

என்று பாட்டை முடித்தார். அனைவரும் அதிக ஆச்சரியமடைந்தார்கள். மற்றொரு நாள் கலாசாலையில் இவர் பால் அஸூயை கொண்ட தமிழ்ப்பண்டிதர் வகுப்பில் 'காலரி'யில் உயர்ந்த இடத்தில் உட்கார்ந்திருந்த நமது பாரதியார் தம் கேள்விக்கு விடைசொல்லாததற்காக 'மேகம்போல் கவிகள் பொழிவதாக, ஊரிலே புகழப்படுகிறீர், நேரான இடத்திலும் இருக்கின்றீர். காளமேகம்போல் பொழியாமல் சும்மா இருப்பதேன் ?" என்று கேலிபண்ணினர். உடனே நமது கவி, உட்கார்ந்த

படியே "பண்டிதரவர்களுக்கு மேகத்தின் ஸாமான்ய குணம் கூடத்தெரியாமல் இருக்கிறதே? காளமேகம் தனக்குத் தோன்றியபொழுது மழைபொழிவதன்றிப் பண்டிதர் உத்தரவுக்குப் பயந்து பெய்வதில்லையே. இஃ தறியாமல், தன்னைப் பேசும்படி கட்டாயப்படுத்தும் பண்டிதரிடத்தில் பரிவு காட்டுவ தெப்படி?" என்று விடை கூறினர். அது கேட்ட வகுப்பு மாணுக்கர் அனைவரும் கை கொட்டி நகைக்கப் பண்டிதர் வெட்க மடைந்தார். இப்படியே பல ஸமயங்களிலும் தன்னோடெதிர்த்த புலவர்களை இவர் அதிஸமர்த்தாய் அடக்கிய ஸந்தர்ப்பங்களெல்லாம் இவருடைய ஆச்சரிய புத்தியையும், தமிழ்த்திறத்தையும் நன்கு விளக்கக் கூடியவை.

தந்தையார் இறந்த பிறகு தனக்கு ஆதரவும் துணையும் இல்லாமல் தன் தகப்பனுடன் பிறந்த அத்தையார் அழைக்க 1901-ம் வருஷம் காசிக்குப் போனர். அங்கே ஒரே வருஷம் இருந்தார். அலகாபாத் ஸர்வகலாசாலையில் தமிழ்ப்பாடம் இல்லாமை பற்றி அங்கே இவர் ஸமஸ்கிருதம் புதிதாக எடுத்துப் படிக்க நேர்ந்தும், அந்த ஒரு வருஷத்திலேயே மேற்படி ஸர்வகலாசாலையில் பிரவேசப் பரீக்ஷைக்கு ஆஜராய், முதல் வகுப்பில் தேறினர், சில அஸௌகரியங்களால், அங்கிருந்து மேற்படிக்க முடியாமல், திரும்ப எட்டையபுரத்திற்குவர நேர்ந்தது. வந்தபிறகு 1904ம் வருஷம் வரை, கலாசாலையில் சென்று படிக்க மார்க்கமின்றியில், அப்பொழுது, எட்டைய புரத்தில் யுவ

ராஜாவாயிருந்த அரசவித்வானிடம் தமிழ்ச்சல்லாபம் செய்தும், அரண்மனையில் அபிமானித்துக் கொடுத்து வந்த சொற்பப் பணத்தைக் கொண்டு காலங் கழித்தும் வந்தார். அக்காலங்களில் எட்டையபுரம் ஸமஸ்தானாதிபதியின் மேலும் அவர்கள் முற்கூடும் புலவர் ஸபைகளில் எழும் போட்டி காரணமாக பல வேறு விஷயங்களைப் பற்றியும், பாரதியார் பாடிய பாடல்களுக்கு அளவில்லை. முக்கியமாக ஒரு ஸந்தர்ப்பத்தை நான் மறக்க முடியவில்லை. ஒரு நாள் காலையில் சில புலவர்கள் "பாரதியார் விழுமிய கருத்துக்களடங்கிய தமிழ்க்கவிகளைப் புலவர்கள் மெச்ச விரைவாக இயற்றினாலும் அண்ணாமலை ரெட்டியாரைப் போலப் பாமரரும் ரஸிக்கும்படியாக ஸங்கீத அமைப்புடன், சிந்துகள் முதலிய இசைத் தமிழ்ப்பாக்களை இயற்ற முடியா" தென்று சொன்னார்கள். அப்போது அரசரும் அதை ஆமோதித்து, தமிழுலகத்திலேயே அண்ணாமலை ரெட்டியாரைப் போல இனியாரும் கவிசொல்ல முடியாது என்று கூறினார்கள். அதைக் கேட்ட நமது வரகவி சிரித்தார். உடனே அந்தச் ஸபையார் இவர் ரெட்டியாரைப் போல் கவிசொல்ல முடியுமானால், செய்து காட்ட வேண்டுவதன்றி, வீணாகச்சிரிப்பது பெருமையில்லை யென்று ஏளனம் பண்ணினார்கள். பாரதியார் அன்றே ஒரு சிந்தியற்றிக்கொண்டு வருவதாகச் சொல்லி விடை யேற்று வீடுசென்றார். அன்று மாலை அரண்மனைக்கு பாரதியார் போன பொழுது, வித்வான்கள் ஒருவரும் வரவில்லை. ஆனால் இவர் தான் பாடிக்கொண்டு வந்த பாடலை அரசர்

முன் ஸமர்ப்பித்தார். உடனே ஆளனுப்பிப் புலவர்கள் அழைக்கப்பட்டார்கள். வந்தவர்கள், பாரதியார் காலையில் சொன்னபோது விளையாட்டுப் பேச்சாக நினைத்ததுமன்றி, குறைந்தது ஒரு வாரத்திற்குள் யாராலும் எவ்வித நூலும் செய்ய இயலாதென்றுநினைத்ததனால் திரும்பத் தாங்கள் வரவில்லை யென்று சொன்னார்கள். அப்போது நமது பாரதியாரின் சிந்து படிக்கப்பட்டது. அதுஅச்சாகாததால், அநேகர் அதனைக் கேட்டிருக்க மாட்டார்கள். அந்தச் சிந்தைப் படிக்கக் கேட்டவர்கள் ஒரே அபிப்பிராயந்தான் சொன்னார்கள். ரெட்டியார் காவடிச்சிந்து பாமரர் பாட்டுத்தான். ஆனால் பாரதியார் சிந்தோ அதன் சுவைகள் ஒன்றும் குறையாமல், மிக மேன்மையான ஒரு தமிழ்ப் புலவரின் பாட்டு என்று எல்லோரும் நமது பாரதியாரை மெச்சி வாயாரப் புகழ்ந்தார்கள்.

1904-ம் வருஷத்தில் பாரதியார் எட்டையபுரம் அரசருடன் சிறிது ஒற்றுமை குறைந்து, ஊரையும் உற்றாரையும் விட்டு வெளியேறக் கருதி மதுரைக்குச் சென்றார். அங்கே ஸுமார் மூன்று மாதகாலம் ஸேதுபதி உயர்தர வித்யாசாலையில் தமிழ்ப் பண்டிதராயிருந்தார். பின் சென்னைக்குச் சென்றார். அங்கே 'சுதேசமித்திரன்' உதவிப் பத்திராசிரிய ராயிருந்ததும், 'பால பாரதம்' "இந்தியா" முதலிய தேசியப்பத்திரிகைகளுக்குத் தானே அதிபரும் ஆசிரியருமாயிருந்து மிகவும் செவ்வைபெற நடத்தித் தமிழ் நாட்டில், தேச உணர்ச்சியையும் ஒரு புது ஆதர்சத்தையும்

முதன் முதல் உண்டுபண்ணித் தேசபக்தராய் விளங்கியதும், அதியற்புதமான தேசப்பாட்டுகளை இயற்றி வெளியிட்டுப்புகழ் நிரப்பியதும் யாவரும் அறிந்த விஷயம்.'' ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்கள் சிறையிடப் பட்டபோது அவர்களுக்கும் கலெக்டருக்கும் நடந்த ஸம்வாதமாகச் சில புதிய கருத்துக்களுடன் கீர்த்தனைகள் இயற்றித் தமிழ் மக்கள் மனதில் தூங்கிய ஒற்றுமை யுணர்ச்சியையும், தேசநேசத்தையும் உயிர்ப்பித்தெழுப்பி உலவச் செய்தது உலகம் அறியும்.

"ஜன்மபூமி" முதலிய வெளியில் வந்த சில பாட்டுக்களேயன்று, அச்சேறாமல், இவர்பாடிப்பயின்றுபரவப்பெற்ற பல தேசப்பாட்டுகளும், தமிழில் ஒரு புது நடையும், புதிய ஆவேசமும், உருவெடுக்கச் செய்தன. ஆயிரக்கணக்கான இளைஞரும், மாணாக்கரும் இவர் பாட்டுக்களையே பாடத் தலைப்பட்டனர். இவரது தேசாவேச ஓசை தமிழ் நாட்டில் பரவ ஆரம்பித்தபோது, தேசபக்தி தமிழ் மக்களாலேயே அவமதிக்கப்பட்டதாயிருந்தது. 1908ம் வருஷம் பிறந்ததும் அரசாங்கத்தாரின் வெறியாட்டின் பயனாக, அநேகர் சிறைப்பட நேர்ந்தது கண்டு பாரதியார் தனக்கும் சிறைவாஸம் நேருமென் றஞ்சிப் புதுச்சேரிக்குப்போயினர். அங்கே பத்துவருஷம்,அரணில்லாதுதானே சுமத்திக்கொண்ட சிறையில், விலங்கற்ற கைதியாய், வறுமை, நோய், முதலிய துன்பங்களுக்காளாய் வெளியில் புகழ்பவரன்றி, நெஞ்சில் நேசிப்பாரும் ஆதரத்

துடன் ஆதரிப்பாரும் இன்றிப் பலவாறு வருந்தினர். துன்பம் நிறைந்த இக்காலத்தில் தான் இவர் அளவற்ற நூல்களை இயற்றிக் குவித்துவைத்தார். அவைகளெல்லாம் கையெழுத்துப் பிரதியாகவே யிருந்து வருகின்றன. அவைகளையன்றி, அழகிய வசன நூல்களும், சிறு கதைகளும் பல செய்துள்ளார். இவர் வசனநடை எளிதில் யாரும் உணர ஒழுகுவதுடன், இனிய, எளிய நடையும், வடித்த சுவை நிறைந்தும், யாப்பற்ற கவிகளென்று சொல்லும்படி அதிமாதுர்யமாயிருக்கும். ரவீந்திர நாதரின் சிறுகதைகளுக்கு இவர் செய்துள்ள தமிழ் மொழிபெயர்ப்பு படிக்கும்போது, மொழி பெயர்ப்பாய்க் காணாமல், தாமே முதனூலும், ரவீந்திரர் ஆங்கிலமே மொழிபெயர்ப்பாயும் தோற்றும்படி அத்தனை அழகு பெற அமைந்துள்ளது. இவரது "ஞானரத"த்தைப் படிப்பவர்களுக்குத் தமிழ் நடையில் இவருக்குள்ள ஆதிக்கமும், நடைச்சிறப்பும் இனிது விளங்கும். கடைசியாக, 1918-ம் வருஷம், இவர் தாயகம் புதுச்சேரிக்குப் போனதுபோலவே, அங்கிருந்து தாமே வெளியேறினர். எல்லை கடந்ததும், இவரைப் போலீஸார் கடலூரில் பிடித்துக் கைதியாக்கினர். ஆனல், யாதொரு குற்றமும், இவர் மேல் வெளியாகாத நிலையில் விரைவில் விடுதலை செய்யப்பட்டு மனைவி மக்களுடன் கடையம் சென்றார். கடையத்திற்கு வந்தது முதலே இவரது உடல் நிலை இவரது நண்பர்களுக்கு மிகுந்த வருத்தத்தை விளைத்தது. இவர் மிகமெலிந்து வலிகுறைந்து நைந்த உருவத்தோடு மனவலி[illegible]த்து

வருவது நாள்தோறும் ஸ்நேஹிதர்களுக்குக் கவலை தந்தது.

இறுதியாக, மறுபடியும், இவர் 1920-ம் வருஷத்தில் சென்னைக்குச் சென்று 'சுதேச மித்திரன்' பத்திரிகைக்கு மீண்டும் துணையாசிரியராய் அமர்ந்தார். பத்திரிகைகளில் இவர் பாக்களும், தேசீய வியாஸங்களும் அடிக்கடி வெளி வந்ததை அனைவரும் அறிவர். ஆனால், நாள்தோறும் இவர் தேஹபலம் குறைந்து கொண்டே வந்து, கடைசியாக, 1921-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 11வ சென்னை, திருவல்லிக்கேணியில் இவர் உயிர் துறந்தார். இனி, எவ்விதத்திலும், இவர் உதவி வேண்டாதாராயினவுடன் அவர் இருக்கும் வரை, அவரை அலக்ஷியஞ் செய்த தமிழுலகம் திடீரென்று அவர் புகழில் மோஹமுற்று மூழ்கியிருக்கிறது.

பாரதியாரின் கவித்திறமும், நடைநலனும் நான் எடுத்து விரிப்பது அநாவசியம். இத்தோடு வெளியாகும் அவரது இனிய பாக்களே அவர் திறமைக்கு இறவாத சான்றாகும். இவருடன் நெருங்கிப் பழகாதவர்கள் இவர் இயற்பெருமையை அறிவது அருமை. இவர் இயற்கையழகிலும் பௌதிக அமைப்புகளிலும் மிகவும் ஈடுபட்ட மனமுடையவர். சிவந்து மலர்ந்த பொன்பொதிந்த மாலை ஞாயிற்றைக்கண்டு மகிழ்வதிலும், அழகிய மனோஹரமான மலைத்தோற்றங்களில் நெடிது நேரம் தமது பனசை இழந்து அவசமாகி அநுபவித்து நிற்பதைக் கண்டிருக்கிறேன். எல்லா உயிர்களிடத்திலும ஒப்ப நிரம்பிய இரக்க முடையவர். ஸர்வ ஜந்துக்களுக்கும் ஸ்நேஹிதர். ஸமீபத்தில்,

சென்னையில் யானைக்குப் பழமருத்தப் போய், மிதியுண்டு, பல நாள் வருந்தியது பத்திரிகை படிக்கும் பலருக்கும் தெரியும். இவர் தமக்கு ஸர்வ ஜீவராசிகளோடும், பகையற்ற நேச முண்டென்று வற்புறுத்தி வாதிக்கக் கேட்டிருக்கிறேன். பாம்பும் புலியும், தன்னொத்த விரிந்த மனஸுடன், நேசிப்பவரைப் பகையாதென்றும், எல்லோரும் இறவாதிருக்க முடியுமென்றும், தேசகால வர்த்தமானங்களால், வேறுபாடு கிடையாதென்றும், உலக முழுவதும், ஒரு குலமேயென்றும், இக்கருத்துக்கள் கேவலம் வ்யவஹார திசையில் விசாரிக்கப்படுவது பிரயோஜனமில்லை யென்றும் தற்போதத்தால் அவைகளின் உண்மையை அறிந்து அநுபவிப்பதே அறிவுடைமைக்கு அழகென்றும், தன் உற்ற தோழருக்கு ஓயாது உபதேசிப்பார். நமது உபநிஷதங்களில் ஒப்பற்ற நம்பிக்கையும், வியப்பும் கொண்ட இவர் உலகத்திலுள்ள ஸகல மதங்களிலும், ஸமதிருஷ்டியும் ஒத்த மதிப்பும் உடையவராயுமிருந்தார். ஜாதி மத பேதங்கள் இவர் அகராதியில் அர்த்தமற்ற சொற்கள். மற்றவர்களைப்போல், ஆசார சீர்திருத்தங்கள் ஸம்புந்தமாய், கேவலம் புகழுக்காகப் பிரஸங்கம்பண்ணித் திரிகிறவரல்ல. எப்போதும் எந்த விஷயத்தையும் ஆழச் சிந்திப்பார். சிந்தித்துக் கண்ட முடிவில் துணிவுகொள்வர். 'துணிந்தவழி என்றும், யாண்டும், ஒழுக முயல்வார். இதுவே இவரது இயல்பு. சாந்தமும் மோனமும் பெரும்பாலும், இவர் விரும்பிக் கையாண்ட குணங்கள்.

ஸங்கீதத்திலும் நல்ல ஞானமுள்ளவர். அதனால் இவர் கவிகள் இனிய இசையில் பாட அமைக்கப்பட்டன. இவரது குணங்களில் பலமுறை இவர் அன்பர்களை அலமறச் செய்தது இவர் தன்னல மறதி. பிறர்க்கன்றித் தனக்குழையாத் துறவி இவர். பத்துநாள் பட்டினிக்குப் பின் பத்து ரூபாய் கிடைத்தாலும், பணம் கையில் இருக்கும்பொழுது, குறை சொல்லி இரப்பாரைக் கண்டால், உள்ளதை அப்படியே கொடுத்துவிட்டு, பழம்பட்டினி விரதத்தை சிரமமின்றி மேற்கொள்வர். பெரியோர் சிறியோர் என்ற வேறுபாடின்றி வருத்தமுறும் யாரிடத்தும், அளவற்ற அநுதாபம் காட்டுவர். கடன் வாங்கியும் பிறர் நோயகற்ற விரைவார். உள்ள உடைகளையும் கொடுத்துவிட்டு, உடுத்த வழியின்றிப் பல்காலும் இடர்ப்படுவார். பைஸாக்கள் முப்பற்கொம்பா யிருக்கும்பொழுது நூற்றுக்கணக்காகப் பிறர்க்களிக்கப் பரபரப்பார். தன் மனைவி மக்கள் மற்றவர்களைவிடத் தன் ஆதரவுக்கு அதிக உரிமை யுடையவர்களென்பது இவர் அறியாத பாடம். இந்தக் குண மேலீட்டால் பல அவஸரங்களில் இவர் பட்டபாடுகளை அறிந்த பலரும் இவரைப் பித்தனென்று கூசாமல் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால் இவர் தனக்கு மிக அவசியமான ஸமயத்தில் இவருக்கு உதவக்கடமைப்பட்ட சிலரும் இவர் உதவியால் நலமடைந்த சிலரும் இவரைப்புறக்கணித்து இவர் வருத்த முற்றபோதும் கூட இவர் தன் ஔதாரியத்தையும், தன்னல மறுப்பையும் ஒரு காலும் வெறுத்ததில்லை.

தமிழர் பறந்தாலும், தமிழ் மறவாத இப்புலவர் பெருமான் பாடல்கள் என்றும் இறவாது நின்று நிலவும். இவர் மூட்டிய தேசநேச நெருப்பு அவி யாது வளர்ந்து, தமிழக முழுதும், இருளகற்றி, ஒளி ரச் செய்து நிற்கும் ஜோதியாய் விட்டது. மஹா மஹோபாத்யாய ஸ்வாமிநாத ஐயரவர்களுக்குஅப்பட் டம் கிடைத்ததற்காக விழவெடுத்த சென்னைச்சபை யொன்றில் என் வேண்டுகோளுக்காக, இவர் உடன் பாடிப்படித்த மறக்கொணுக் கவிகளின் கருத்துக்க ளைக் கொண்டே இவரைத் தமிழகம் அநாதரவு செய் தது இவருக்குக் குறையுமில்லை; தமிழர்க்குப் புதுமை யுமில்லையென்று ஸமாதானப்படுத்திக் கொள்கிறேன். புதுச் சிறு விளக்குகளைக் கண்டு அதிசயிக்கும் மாந் தர் செம்பரிதி யொளி கண்டுபுகழ்வதில்லை. சிற் றுண்டிச் சுவைக்கு மகிழ்பவர் அமிர்தம் சிறந்த ருசி யுடையதென்று அதிசயிப்பதில்லை. வெயிலிலேவது பரிதிக்கும், சுவையினுல் உயர்வது அமிர்தத்துக்கும் இயற்கையாகி, அவைகள் அந்தந்தக் குணத்தில் ஒப் பற்றுயர்ந்திருப்பதால் ஒருவரும் அதுகண்டு வியப் பதில்லை. சிறிது குறைந்த உயர்வளவில் மட்டே மாந்தர் கண்டு வியந்து, நயப்பது வழக்கம். ஸாமான் யமாக, பரிசுக்குப் பாடாமலும், பணமுடையோர் குற்றங்களை மறைத்துப் பொய்யாகப் புகழாமலும் உண்மையில் வாழ்ந்த *இவ்வுயர் புலவரை, அளப் பரிய அவர் தலைமைப் புலமைப் பெருமிதமிகுதி யால் மட்டுமே நமதுலகம் அறிய முடியாதாயிற்று போலும்.

பாரதியார் ஏனைப்புலவர் போலாது, புது முறைகளையே சிருஷ்டித்தார். தமிழ் மொழியில் பாக்களும் பாவினங்களும் மலிந்து கிடந்தும், அவைகளை விட்டுப் புதுக்கருத்துக்களும், புதிய உணர்ச்சிகளும், மலிந்து விளங்க, அவைகளுக்குப் பொருத்தமான புதிய நடைகளையும் புதிய யாப்புக்களையும், உண்டு பண்ணியிருக்கிறார். அநாயாஸமாய், இயற்கை யியல்புகளிலிருந்து, உருவகங்கள் உண்டு பண்ணிக் கையாளுவதும், எளிய உவமைகளால், பெரிய விஷயங்களை விளக்கத்துணியும், தனித்திறலும், முன்னைய புலவரிடத்தில்லாத இவரது அரிய குணங்கள். வாய்மை, வீரம், பெண்களைப் பேணல், எளியாரை ஏற்றல், ஓரமில்லா ஒற்றுமை யுணர்ச்சி, ஸ்வதந்திரம் முதலிய இவர் பாராட்டிப் பாடிய பலகுணங்களும், இவர்க்கு இயல்பானவை. இவையெல்லாம் இவர் பாக்களில் இனிது காணலாம். இவரது "கண்ணன்பாட்"டையும் "பாஞ்சாலி சபத"த்தையும் படித்தவர்களுக்கு, இவரது குணங்களும் திறமையும் விசதமாகும். இவரை உள்ளபடி அறிய விரும்புவோர்க்கு இவர் கவிகளைவிடச் சிறந்த கருவி கிடையாது. ஆதலால், இவர் நூல்களைப் படித்து, நடு நிலையில் சிந்திப்பார்க்கு உள்ளத்தனையதிவர் உயர்வு என்பது தெளிவாகும்.

தூத்துக்குடி,
துன்மதி—
மார்கழி.

ச. சோமசுந்தர பாரதி
எம். ஏ; பி. எல்.

ஓம் சக்தி.

# வந்தே மாதரம்.

---

தாயுமானவர் ஆனந்தக்களிப்பு மெட்டு.

ராகம்—நாதநாமக் கிரியை. தாளம்—ஆதி.

## பல்லவி.

வந்தே மாதர மென்போம்—எங்கள்
  மாநிலத் தாயை வணங்குது மென்போம்.
(வந்தே)

## சரணங்கள்.

௧. ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
  ஜன்ம மித்தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினு மொன்றே—அன்றி
  வேறு குலத்தின ராயினு மொன்றே.
(வந்தே)

௨. ஈனப் பறையர்க ளேனும்—அவர்
  எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவ ரன்றோ?
சீனத்த ராய்விடு வாரோ?—பிற
  தேசத்தர் போற்பல தீங்கிழைப் பாரோ?
(வந்தே)

௩. ஆயிர முண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி?—ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முட்
சண்டை செய்தாலும் சகோதர ரன்றோ?
(வந்தே)

௪. ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?
(வந்தே)

௫. எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கு மந்த நிலை பொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்.
(வந்தே)

௬. புல்லடிமைத் தொழில் பேணிப்—பண்டு
போயின நாட்களுக் கினி மனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி.
(வந்தே)

# வந்தே மாதரம்.

ராகம்—ஹிந்துஸ்தானி பியாக்—தாளம்—ஆதி.

## பல்லவி.

வந்தே—மாதரம்—ஜய
வந்தே மாதரம். (வந்தே)

## சரணங்கள்.

க. ஜய ஜய பாரத
ஜய ஜய பாரத
ஜய ஜய பாரத
ஜய ஜய ஜய ஜய (வந்தே)

உ. ஆரிய பூமியில்
நாரிய ரும் நர
சூரிய ரும் சொலும்
வீரிய வாசகம். (வந்தே)

௩. நொந்தே போயினும்
வெந்தே மாயினும்
நந்தே சத்தர்—உ
வந்தே சொல்வது. (வந்தே)

௪. ஒன்றாய நின்றினி
வென்றா யினுமுயிர்
சென்றாயினும் வலி
குன்றா தோதுவம். (வந்தே)

# பாரத நாடு.

ராகம்—ஹிந்துஸ்தானி தோடி.

## பல்லவி.

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.

## சரணங்கள்.

௧. ஞானத்திலே பர மோனத்திலே—உயர்
மானத்திலே அன்ன தானத்திலே,
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

௨. தீரத்திலே படை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே யுப காரத்திலே,
சாரத்திலே மிகு சாத்திரங் கண்டு
தருவதிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

௩. நன்மையிலே யுடல் வன்மையிலே—செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே,
பொன்மயி லொத்திடு மாதர்தங் கற்பின்
புகழினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

௪. ஆக்கத்திலே தொழி லூக்கத்திலே—புய
வீக்கத்திலே யுயர் நோக்கத்திலே,
காக்கத் திறல் கொண்ட மல்லர்தஞ் சேனைக்
கடலினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

௫. வண்மையிலே யுளத் திண்மையிலே—மனத்
தண்மையிலே மதி நுண்மையிலே,
உண்மையிலே தவறாத புலவர்
உணர்வினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

௬. யாகத்திலே தவ வேகத்திலே—தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்தி கொண்டார் தம்
அருளினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

௭. ஆற்றினிலே சுனை யூற்றினிலே—தென்றற்
காற்றினிலே மலைப் பேற்றினிலே
ஏற்றினிலே பய னீந்திடுங் காலி
யினத்தினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

௮. தோட்டத்திலே மரக் கூட்டத்திலே—கனி
யீட்டத்திலே பயி ரூட்டத்திலே
தேட்டத்திலே யடங்காத நிதியின்
சிறப்பினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

# நாட்டு வணக்கம்.

---

## சுதேச வந்தனம்.

ராகம்—காம்போதி. தாளம்—ஆதி.

க. எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தி யென்
வாயுற வாழ்த்தேனோ—இதை
(பல்லவி) வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கே(

உ. இன்னுயிர் தந்தெமை யீன்று வளர்த் தரு
ளீந்தது மிந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
யறிந்தது மிந்நாடே—அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்தது மிந்நாடே—தங்கள்
பொன்னுட லின்புற நீர்விளை யாடி யில்
போந்தது மிந்நாடே—இதை
(பல்லவி) வந்தே மாதரம், வந்தே மாதம்
என்று வணங்கேனோ

௫. மங்கைய ராயவர் இல்லற நன்கு
வளர்த்தது மிந்நாடே—அவர்
தங்க மதலைக ளீன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே—மக்கள்
துங்க முயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்தது மிந்நாடே—பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்தது மிந்நாடே—இதை
(பல்லவி) வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?

---

## புது வருஷம்.

ஆசிரியப்பா.

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித் திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம் வளர்ந்திடுக! மறம் மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தே யத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

---

# பாரத தேசம்.

ராகம்—புன்னாகவராளி.

### பல்லவி.

பாரத தேச மென்று பெயர் சொல்லுவார்—மிடிப்
பயங் கொல்லுவார் துயர்ப்பகை வெல்லுவார்.

### சரணங்கள்.

க. வெள்ளிப் பனி மலையின் மீதுலவு வோம்—அடி
மேலைக் கடல் முழுதுங் சப்பல் விடுவோம்,
பள்ளித் தல மனைத்துங் கோயில் செய்குவோம் எங்கள்
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்.

உ. சிங்களத் தீவினுக் கோர் பால மமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்,
வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம்.

ங. வெட்டுக் கனிகள் செய்து தங்க முதலாம்
வேறு பல பொருளுங் குடைந் தெடுப்போம்
எட்டுத் திசை களினுஞ் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்துங் கொண்டுவருவோம்.

ச. முத்துக் குளிப்ப தொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற் கரையிலே.

௫. சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன் னாட்டிளம் பெண்க ளுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டி சைத்துத்
தோணி களோட்டிவிளை யாடி வருவோம்.

௬. கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.

௭. காசி நகர்ப்புலவர் பேசு முரைதான்
காஞ்சியிற் கேட்பதற் கோர் கருவி செய்வோம்
ராசபுத் தானத்து வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்க மளிப்போம்.

௮. பட்டினி லாடையும் பஞ்சி லுடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக் கவை கொடுப்போம்.

௯. ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம்.

க0. குடைகள் செய்வோம் உழு படைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இரும் பாணிகள் செய்வோம்
நடையும் பறப்பு முணர் வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்வோம்.

கக. மந்திரங் கற்போம் வினைத் தந்திரங் கற்போம்
வானை யளப்போம் கடல் மீனை யளப்போம்
சந்திர மண்டலத் தியல் கண்டு தெளிவோம்
சந்தி தெருப் பெருக்கும் சாத்திரங் கற்போம்.

க௨. காவியஞ் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத் தொழி லனைத்தும் உவந்து செய்வோம்.

க௩. சாதி இரண் டொழிய வேறில்லை யென்றே
தமிழ்மகள் சொல்லிய' சொல் அமிழ்த மென்
[போம்
நீதி நெறியி னின்று பிறர்க் குதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர். (பாரத)

## ஜய பாரத!

௧. சிறந்து நின்ற சிந்தை யோடு
தேய நூறு வென்றிவள்
மறந்த விர்ந்த நாடர் வந்து
வாழி சொன்ன போழ்தினும்,
இறந்து மாண்பு தீர மிக்க
ஏழ்மை கொண்ட போழ்தினும்
அறந்த விர்க்கி லாது நிற்கும்
அன்னை வெற்றி கொள்கவே!

௨. நூறு கோடி நூல்கள் செய்து
நூறு தேய வாணர்கள்
தேறு முண்மை கொள்ள விங்கு
தேடி வந்த நாளினும்,
மாறு கொண்டு கல்வி தேய
வண்மை தீர்ந்த நாளினும்,
ஈறு நிற்கு முண்மை யொன்
றிறைஞ்சி நிற்பள் வாழ்கவே!

௩. வில்லர் வாழ்வு குன்றி யோய
வீர வாளு மாயவே
வெல்லு ஞானம் விஞ்சி யோர்செய்
மெய்ம்மை நூல்கள் தேயவும்
சொல்லு மிவ் வனைத்தும் வேறு
சூழு நன்மை யுந்தர
வல்ல நூல் கெடாது காப்பள்
வாழி யன்னை வாழியே!

௪. தேவ ருண் ணு நன்ம ருந்து
சேர்ந்த கும்ப மென்னவும்
மேவு வார் கடற்க ணுள்ள
வெள்ள நீரை யொப்பவும்
பாவ நெஞ்சி னோர் நிதம்
பறித்தல் செய்வ ராயினும்
ஓவிலாத செல்வ மின்னும்
ஓங்கு மன்னை வாழ்கவே !

௫. இதந் தருந் தொழில்கள் செய்
திரும்பு விக்கு நல்கினள்
பதந் தாற் குரிய வாய
பன்ம தங்கள் காட்டினள்
விதம் பெறும்ப னட்டி னர்க்கு
வேறொ ருண்மை தோற்றவே
சுதந்தரத்தி லாசை யின்று
தோற்றி னள்மன் வாழ்கவே .

## செந்தமிழ் நாடு.

க. செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே-எங்கள் (செந்தமிழ்)

உ. வேதம் நிறைந்த தமிழ் நாடு—உயர்
வீரம் செறிந்த தமிழ் நாடு—நல்ல
காதல் புரியும் அரம்பையர் போலிளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

ந. காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி—யென
மேவிய யாறு பல வோடத்—திரு
மேனி செழித்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

ச. முத்தமிழ் மாமுனி நீள் வரையே—நின்று
மொய்ம்புறக் காக்குந் தமிழ் நாடு—செல்வம்
எத்தனை யுண்டு புவி மீதே—அவை
யாவும் படைத்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

ரு. நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தந் தவஞ்செய் குமரி யெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ் நாடு. (செந்தமிழ்)

சு. கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல

பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ் நாடு. (செந்தமிழ்)

எ. வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி கார மென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

அ. சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக் கொடி மீன் கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய் நாடு. (செந்தமிழ்)

கூ. விண்ணை யிடிக்கும் தலை யிமயம்—எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத் திருள் கெடுத்தார் தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ் நாடு. (செந்தமிழ்)

க0. சீன மிசிரம் யவன ரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ் வீசிக்—கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

## எங்கள் நாடு.

(பூபாள ராகம்)

க. மன்னு மிமய மலை யெங்கள் மலையே
மாநில மீதது போற்பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?
பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே?
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவ மிஃதை யெமக்கில்லை யீடே.

உ. மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையு நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவ மிஃதை யெமக்கில்லை யீடே.

ங. இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழையராகி யினி மண்ணிற் றுஞ்சோம்
தன்னலம் பேணி யிழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனி லினிக்கையை விரியோம்.
கன்னலுந் தேனும் கனியு மின்பாலும்
கதலியும் செந்நெலும் நல்கு மெக் காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே!
ஓதுவ மிஃதை யெமக்கில்லை யீடே!

# ஜாதீய கீதம்.

(பங்கிம் சந்திர சட்டோபாத்யாயர்
வங்காளியில் இயற்றிய "வந்தே மாதரம்" கீதம்)

---

சுஜலாம், ஸுபலாம், மலயஜ சீதலாம்
ஸஸ்ய ஸ்யாமளாம் மாதரம் (வந்தே)

க. சுப்ர ஜ்யோத்ஸ்நா புளகித யாமினீம்
புல்ல குஸுமித த்ரும தள சோபினீம்
ஸுஹாஸினீம், ஸுமதுர பாஷிணீம்
ஸுகதாம், வரதாம், மாதரம் (வந்தே)

உ. த்ரிம்சத் கோடி கண்ட கலகல நிநாதக ராலே
த்வித்ரிம்சத் கோடி புஜைர் த்ருத கரகர வாலே
கேபோலே, மா துமி அபலே
பஹுபல தாரிணீம், நமாமி தாரிணீம்
ரிபுதள வாரிணீம், மாதரம் (வந்தே)

ந. துமி வித்யா துமி தர்ம,
துமி ஹ்ருதி: துமி மர்ம
த்வம்ஹி ப்ராணு, சரீரே
பாஹுதே துமி மா சக்தி
ஹ்ருதயே துமி மா பக்தி
தொமா ரேயி ப்ரதிமா கடிமந்திரே மந்திரே
(வந்தே)

ச. த்வம்ஹி துர்கா தசப்ரஹரண தாரிணீ
கமலா கமலதள விஹாரிணீ
வாணீ வித்யா தாயினீ, நமாமித்வாம். (வந்தே)

ரு. நமாமி, கமலாம், அமலாம் அதுலாம்
ஸுஜலாம், ஸுபலாம் மாதரம்
சயாமளாம், ஸரளாம், ஸுஸ்மிதாம் பூஷிதாம்
பரணீம், தரணீம், மாதரம். (வந்தே மாதரம்)

---

## "வந்தே மாதரம்" கீதத்தின் மொழி பெயர்ப்பு.

க. இனிய நீர்ப்பெருக்கினை ! இன்கனி வளத்தினை !
தனி நறு மலயத் தண்காற் சிறப்பினை !
பைந்நிறப் பழனம் பரவிய வடிவினை ! (வந்தே)

உ. வெண்ணிலாக் கதிர் மகிழ் விரித்திடு மிரவினை!
மலர் மணிப் பூத்திகழ் மரன் பல செறிந்தனை !
குறுநகை யின்சொலார் குலவிய மாண்பினை !
நல்குவை யின்பம் வரப்பல நல்குவை ! (வந்தே)

ங. முப்பது கோடிவாய் (நின்னிசை) முழங்கவும்
அறுபது கோடி தோளுயர்ந் துனைக் காற்றவும்
"திறனிலாள்" என்றுனை யாவனே செப்புவன்?
அருந்திற லுடையாய் ! அருளினை போற்றி !
பொருந்தலர் படைபுறத் தொழித்திடும் பொற்
[பினை (வந்தே)

ச. நீயே வித்தை, நீயே தருமம் !
நீயே யிதயம், நீயே மருமம் !
உடலகத திருக்கு முயிரு மன்னீயே ! (வந்தே)

சு. கி. உ.

ரு. தடந்தோ ளகலாச் சக்தி நீ! யம்மே!
சித்த நீங்காதுறு பத்தியு நீயே!
ஆலயந் தோறு மணி பெற விளங்கும்
தெய்விக வடிவமுந் தேவியிங் குனதே! (வந்)

சா. ஒருபது படைகொளு முமையவணீயே!
கமல மெல் லிதழ்களிற் களித்திடுங் கமலை நீ!
வித்தை நன்கருளும் வெண்மலர்த் தேவிநீ! (வந்)

எ. போற்றி! வான் செல்வீ, புரையிலை நிகரிலை!
இனிய நீர்ப பெருக்கினை, இன்கனி வளத்தினை!
சாமள நிறத்தினை, சரளமாந தகையினை!
இனியபுன் முறுவலாய்! இலங்குநல் லணியினை!
தரித்தெமைக் காப்பாய், தாயே! போற்றி! (வந்)

---

## "வந்தே மாதரம்" கீதத்தின் புதிய மொழி பெயர்ப்பு.

க. நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும் [யும்
குளிர் பூந்தென்றலும், கொழும்பொழிற் பசுமை
வாய்ந்து நன்கிலகுவை, வாழிய அன்னை!
(வந்தே)

உ. தெண்ணில வதனிற் சிலிர்த்திடு மிரவும்,
தண்ணியல் விரிமலர் தாங்கிய தருக்களும்
புன்னகை யொளியும், தேமொழிப் பொலிவும்
வாய்ந்தனை யின்பமுறு வரங்களும் நல்குவை.
(வந்தே)

௩. கோடி கோடி குரல்க ளொலிக்கவும்
கோடி கோடி புயத்துணை கொற்றமார்
நீடு பல்படை தாங்கி முன்னிற்கவும்
கூடு திண்மை குறைந்தனை யென்பதேன் ?
ஆற்றலின் மிகுந்தனை, அரும்பதங் கூட்டுவை
மாற்றலர் கொணர்ந்த வன்படை யோட்டுவை.
(வந்தே)

௪. அறிவுநீ, தருமநீ, உள்ளநீ, அதனிடை
மருமநீ, உடற்கண் வாழ்ந்திடு முயிர்நீ
தோளிடை வன்புநீ, நெஞ்சகத் தன்புநீ
ஆலயந்தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச சிலையெலாந் தேவியிங் குனதே.
(வந்தே)

௫. பத்துப் படைகொளும் பார்வதி தேவியும்
கமலத் திதழ் களிற் களித்திடும் கமலையும்
அறிவினை யருளும் வாணியும் அன்னைநீ !
(வந்தே)

௬. திரு நிறைந்தனை, தன்னிக ரொன்றிலை !
தீது தீர்ந்தனை நீர்வளஞ் சார்ந்தனை
மருவு செய்களின் நற்பயன் மல்குவை
வளனின் வந்ததோர் பைந்நிறம் வாய்ந்தனை
பெருகு மின்பமுடையை, குறுநகை
பெற்றொளிர்ந்தனை, பல்பணி பூண்டனை
இரு நிலத்துவந் தெம்முயிர் தாங்குவை
எங்கள் தாய் நின் பதங்க ளிறைஞ்சுவாம் !
(வந்தே)

# எங்கள் தாய்.

காவடிச்சிந்தில் 'ஆறுமுகவடி வேலவனே' என்ற மெட்டு.

---

க. தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவ ளென்றுண ராத
இயல்பின ளாமெங்கள் தாய்.

உ. யாரும் வகுத்தற் கரிய பிராயத்த
ளாயினு மேயெங்கள் தாய்—இந்தப்
பாருளிந் நாளுமோர் கன்னிகை யென்னப்
பயின்றிடு வாளெங்கள் தாய்.

௩. முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை யொன் றுடையாள்.

௪. நாவினில் வேத முடையவள் கையில்
நலந்திகழ் வாளுடையாள் தனை
மேவினர்க் கின்னருள் செய்பவள், தீயரை
வீட்டிடு தோளுடையாள்.

௫. அறுபது கோடி தடக்கைக ளாலும்
அறங்கள் நடத்துவள் தாய்—தனைச்
செறுவது நாடி வருபவ ரைத்துகள்
செய்து கிடத்துவள் தாய்.

௬. பூமியினும் பொறை மிக்குடை யாள்பெரும்
புண்ணிய நெஞ்சினள் தாய்—எனில்
தோமிழைப் பார்முன் நின்றிடுங் காற்கொடுந்
துர்க்கை யனையவள் தாய்.

௭. கற்றைச் சடைமதி வைத்த துறவியைக்
கைதொழு வாளெங்கள் தாய்—கையில்
ஒற்றைத் திகிரி கொண்டேழுல காளு
மொருவனை யுந்தொழு வாள்.

௮. யோகத்தி லேநிக ரற்றவ ளுண்மையு
மொன்றென நன்றறிவாள்—உயர்
போகத்தி லேயு நிறைந்தவ ளெண்ணரும்
பொற்குவை தானுடையாள்.

௯. நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரி வாளெங்கள் தாய்—அவர்
அல்லவராயி னவரை விழுங்கிப்பின்
ஆனந்தக் கூத்திடு வாள்.

௰. வெண்மை வளரிம யாசலன் றந்த
விறன் மக ளாமெங்கள் தாய்—அவன்
திண்மை மறையினுந் தான்மறை யாணித்தஞ்
சீருறு வாளெங்கள் தாய்.

# மாதாவின் துவஜம்.

## பாரத நாட்டுக் கொடியினைப் புகழ்தல்.

---

*தாயுமானவர் ஆனந்தக்களிப்பு வர்ணமெட்டு.*

பல்லவி.

*தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்*
*தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட—வாரீர்!*

சரணங்கள்.

க. *ஓங்கி வளர்ந்ததோர் கம்பம்—அதன்*
*உச்சியின் மேல் வந்தே மாதர மென்றே*
*பாங்கி னெழுதித் திகழும்—செய்ய*
*பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்!*
*(தாயின்)*

உ. *பட்டுத் துகிலென லாமோ?—அதிற்*
*பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று*
*மட்டு மிகுந்தடித் தாலும்—அதை*
*மதியாதவ் வுறுதிகொள் மாணிக்கப்படலம்.*
*(தாயின்)*

ங. *இந்திரன் வச்சிர மோர் பால்—அதில்*
*எங்கள் துருக்க ரிளம்பிறை யோர்பால் தாய்*
*மந்திர நடுவுறத் தோன்றும்—அதன்*
*மாண்பை வகுத்திட வல்லவன் யாரோ?*
*(தாயின்)*

ச. கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர்—எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரிய ரவ்வீரர்—தங்கள்
நல்லுயி ரீந்துங் கொடியினைக் காப்பார்.
(தாயின்)

ரு. அணியணி யாயவர் நிற்கும் – இந்த
ஆரியக் காட்சியோ ரானந்த மன்றோ?
பணிகள் பொருந்திய மார்பும்—விறற்
பைந்திரு வோங்கும் வடிவமுங் காணீர்!
(தாயின்)

சு. செந்தமிழ் நாட்டுப் பொருநர்—கொடுந்
தீக்கண் மறவர்கள், சேரன்றன் வீரர்
சிந்தை துணிந்த தெலுங்கர்—தாயின்
சேவடிக் கேபணி செய்திடு துளுவர்,
(தாயின்)

எ. கன்னட ரொட்டியரோடு—போரிற்
காலனு மஞ்சக் கலக்கு மராட்டர்
பொன்னகர்த் தேவர்க ளொப்ப—நிற்கும்
பொற்புடை யாரிந்து ஸ்தானத்து மல்லர்,
(தாயின்)

அ. பூதல முற்றிடும் வரையும்—அறப்
போர் விறல் யாவும் மறப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில்
மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர்,
(தாயின்)

௯. பஞ்ச நதத்துப் பிறந்தோர்—முன்னைப்
பார்த்தன் முதற்பலர் வாழ்ந்தநன் னாட்டார்
துஞ்சும் பொழுதினுந் தாயின்—பதத்
தொண்டு நினைந்திடும் வங்கத்தி னோரும்,
(தாயின்)

௧0. சேர்ந்ததைக் காப்பது காணீர்—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க!
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க!
(தாயின்)

# பாரத மாதா திருப்பள்ளி யெழுச்சி.

க. பொழுது புலர்ந்தது ; யாம்செய்த தவத்தால்
புன்மை யிருட்கணம் போயின யாவும் ;
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
யெழுந்து விளங்கிய தறிவெனும் இரவி ;
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றோம்.
விழிதுயில் கின்றனை யின்னுமெந் தாயே!
வியப்பிது காண் ! பள்ளி யெழுந்தருளாயே !

உ. புள்ளினம் ஆர்த்தன ; ஆர்த்தன முரசம் ;
பொங்கிய தெங்குஞ் சுதந்திர நாதம் ;
வெள்ளிய சங்கம் முழங்கின கேளாய் ;
வீதியெ லாமணு குற்றனர் மாதர் ;
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன்
சீர்த்திரு நாமமும் ஓதிநிற் கின்றார் ;
அள்ளிய தெள்ளமு தன்னையெம் அன்னை !
ஆருயிரே ! பள்ளி யெழுந்தரு ளாயே !

ந. பரிதியின் பேரொளி வானிடைக் கண்டோம் ;
பார்மிசை நின்னொளி காணுதற் கலந்தோம் ;
கருதிநின் சேவடி அணிவதற் கென்றே
கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம் ;
சுருதிகள் பயந்தனை ; சாத்திரங் கோடி
சொல்லரு மாண்பின் ஈன்றனை யம்மே !
நிருதர்கள் நடுக்குறச் சூல்கரத் தேற்றாய் !
நிர்மலையே ! பள்ளி யெழுந்தருளாயே !

ச. நின்னெழில் விழியருள் காண்பதற் கெங்கள்
நெஞ்சகத் தாவலை நீயறி யாயோ ?
பொன்னனை யாய் ! வெண் பனிமுடி யிமயப்
பொருப்பினை யீந்த பெருந்தவப் பொருளே !
என்ன தவங்கள் செய் தெத்தனை காலம்
ஏங்குவம் நின்னருட் கேழையம் யாமே ?
இன்னமும் துயிலுதி யேலிது நன்றோ ?
இன்னுயி ரே ! பள்ளி யெழுந்தரு ளாயே !

ரு. மதலையை யெழுப்பவுந் தாய்துயில் வாயோ ?
மாநிலம் பெற்றவ ளிஃதுண ராயோ ?
குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ ?
கோமக ளே ! பெரும் பாரதர்க் கரசே !
விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதுங் காணாய் !
இதமுற வந்தெமை யாண்டருள் செய்வாய் !
ஈன்றவ ளே ! பள்ளி யெழுந்தரு ளாயே !

# பாரத தேவியின் திருத்தசாங்கம்.

---

நேரிசை வெண்டா.

### நாமம்.

(காம்போதி)

பச்சை மணிக்கிளியே ! பாவியெனக் கேயோகப்
பிச்சை யருளியதாய் பேருரையாய்—இச்சகத்திற்
பூரணமா ஞானப் புகழ்விளக்கை நாட்டுவித்த
பாரதமா தேவியெனப் பாடு. க.

### நாடு.

(வஸந்தா)

தேனார் மொழிக்கிள்ளாய் ! தேவியெனக் கானந்த
மானாள்பொன் னாட்டை யறிவிப்பாய்—வானாடு
பேரிமய வெற்புமுதற் பெண்குமரி யீறாகும்
ஆரியநா டென்றே யறி. உ.

### நகர்.

(மணிரங்கு)

இன்மழலைப் பைங்கிளியே யெங்க ளுயிரானாள்
நன்மையுற வாழு நகரெது சொல் ?—சின்மயமே
நானென் றறிந்த நனிபெரியோர்க் கின்னமுது
தானென்ற காசித் தலம். ங.

## ஆறு.

(சுருட்டி)

வன்னக் கிளி ! வந்தே மாதரமென் றோதுவ்வரை
யின்னலறக் காப்பாளி யாறுரையாய்—நன்னர் செயத்
தான்போம் வழியெலாந் தன்மமொடு பொன் விளைக்கும்
வான்போந்த கங்கையென வாழ்த்து. ௪.

## மலை.

(கானடா)

சோலைப் பசுங்கிளியே! தொன்மறைகள் நான்குடையாள்
வாலை வளரு மலைகூறாய்—ஞாலத்துள்
வெற்பொன்று மீடிலதாய் விண்ணில் முடிதாக்கும்
பொற்பொன்று வெள்ளைப் பொருப்பு. ரு.

## ஊர்தி.

(தன்யாசி)

சீருஞ் சிறப்புமுயர் செல்வமுமோ ரெண்ணற்றாள்
ஊரும் புரவி யுரை தத்தாய்!—தேரிற்
பரிமிசை யூர் வாளல்லள் பாரனைத்து மஞ்சும்
அரிமிசையே யூர்வா ளவள். சா.

## படை.

(முகாரி)

கருணை யுருவானாள் காய்ந்தெழுங்காற் கிள்ளாய்!
செருநரைவீழ்த் தும்படையெனசெப்பாய்-பொருபவர்மேற்

றண்ணளியாஞ் வீழாது, வீழிற் றகைப்பரிதாங்
திண்ணமுறு வான்குலிசம், தேரு. எ.

முரசு.

(செஞ்சுருட்டி.)

ஆசை மரகதமே யன்னை திரு முன்றிலிடை
யோசை வளர்முரச மோதுவாய்—பேசுகவோ
சத்தியமே, செய்க தருமமே யென்றொலிசெய்
முத்திதரும் வேத முரசு. அ.

தார்.

(பிலகரி.)

வாரா யிளஞ்சுகமே வந்திப் பார்க் கென்றுமிடர்
தாரான் புனையுமணித் தார்கூறாய்—சேராரை [வாள்
முற்றாக் குறுநகையான் முற்றுவித்துத் தானொளிர்
பொற்றா மரைத்தார் புனைந்து. கூ.

கொடி.

(சேதாரம்.)

கொடிப்பவள வாய்க்கிள்ளாய்! குத்திரமுந் தீங்கும்
மடிப்பவளின் வெல் கொடிதான் மற்றென்—அடிப்
நன்றாத் தீயார் நலிவுறவே வீசுமொளி [பணிவார்
குன்றா வயிரக் கொடி. க0.

# சுதந்திரப் பெருமை.

"தில்லைவெளியிலே கலந்துவிட்டாலவர்
திரும்பியும் வருவாரோ' என்ற மெட்டு.

---

௧. வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ? (வீர.)

௨. புகழுநல் லறமுமே யன்றியெல்லாம் வெறும்
பொய்யென்று கண்டாரேல்—அவர்
இகழுறு மீனத்தொண் டியற்றியும் வாழ்வதற்
கிச்சையுற் றிருப்பாரோ? (வீர.)

௩. பிறந்தவர் யாவரு மிறப்ப துறுதியெனும்
பெற்றியை யறிந்தாரேல்—மானம்
துறந்தற மறந்தும்பின் னுயிர்கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ? (வீர.)

௪. மானுட ஜன்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை யுணர்ந்தாரேல்—அவர்
ஊனுடல் தீயினு முண்மை நிலைதவற
உடன்படு மாறுளதோ? (வீர.)

௫. விண்ணி லிரவிதனை விற்றுவிட் டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ?—
கண்ணினு மினிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ? (வீர.)

௬. மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தில்
மாண்பினை யிழப்பாரோ ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினாற்
கைகொட்டிச் சிரியாரோ ? (வீர.)

௭. வந்தே மாதர மென்று வணங்கிய பின்
மாயத்தை வணங்குவரோ ?
வந்தே மாதர மொன்றே தாரக
மென்பதை மறப்பாரோ ? (வீர.)

---

## சுதந்திர தாகம்.

### கண்ணிகள்.

க. தண்ணீர்விட் டோவளர்த்தோம் ?
சர்வேசா ! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம் ;
கருகத் திருவுளமோ ?

௨. எண்ணமெலா நெய்யாக
எம்முயிரி னுள்வளர்ந்த
வண்ண விளக்கிஃது
மடியத் திருவுளமோ ?

௩. ஓராயிர வருடம்
ஓய்ந்து கிடந்தபினர்
வாராது போல வந்த
மாமணியைத் தோற்போமோ ?

௪. தர்மமே வெல்லுமெனுஞ்
சான்றோர் சொற் பொய்யாமோ ?
கர்ம விளைவுகள் யாங்
கண்டதெலாம் போதாதோ ?

௫. மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவுங் காண்கிலையோ ?

௬. எண்ணற்ற நல்லோர்
இதயம் புழுங்கியிரு
கண்ணற்ற சேய்போற்
கலங்குவதும் காண்கிலையோ ?

௭ மாதரையு மக்களையும்
வன் கண்மை யாற்பிரிந்து
காத லிளைஞர்
கருத் தழிதல் காணாயோ ?

௮. எந்தாய் நீ தந்த
இயற்பொருளெ லாமிழந்து
நொந்தார்க்கு நீயன்றி
நோவழிப்பார் யாருளரோ ?

௯. இன்பச் சுதந்திர நின்
இன்னருளாற் பெற்ற தன்றோ
அன்பற்ற மாக்க
ளதைப் பறித்தார் காவாயோ ?

௧0. வானமழை யில்லையென்றால்
வாழ்வுண்டோ? எந்தை ஐயா
தீனமெமக் கில்லையென்றால்
தீனரெது செய்வோமே?

௧௧. நெஞ்சகத்தே பொய்யின்றி
நேர்ந்ததெலா நீ தருவாய்
வஞ்சகமோ எங்கள்
மனத்தூய்மை காணாயோ?

௧௨. பொய்க்கோ வுடலும்
பொருளுயிரும் வாட்டுகின்றோம்?
பொய்க்கோ தீராது
புலம்பித் துடிப்பதுமே?

௧௩. நின்பொருட்டு நின்னருளால்
நின்னுரிமை யாங் கேட்டால்
என்பொருட்டு நீ தான்
இரங்கா திருப்பதுவே?

௧௪. இன்று புதிதா
யிரக்கின்றோமோ? முன்னோர்
அன்று கொடு வாழ்ந்த
அருமையெலா மோராயோ?

௧௫. நீயும் அறமு
நிலைத்திருத்தல் மெய்யானால்
ஓயுமுன ரெங்களுக்கிவ்
வோர்வர நீ நல்குதியே.

---

சு. கி. ந.

## சுதந்திர தேவியின் துதி.

(விருத்தம்.)

க. இதந்தரு மனையி னீங்கி
இடர்மிகு சிறைப் பட்டாலும்
பதந்திரு விரண்டு மாறிப்
பழிமிகுத் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி யின்னல்
விளைந்தெனை யழித் திட்டாலும்
சுதந்திரத் தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே.

உ. நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்
பன்னருங் கல்வி கேள்வி
படைத் துயர்ந் திட்டாரேனும்
பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்.

ங. தேவி! நின் ஒளி பெறாத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ செம்மை?
அறிவுண்டோ? ஆக்க முண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள்வே தங்க ளுண்டோ?
பாவிய ரன்றோ நின்றன்
பாலனம் படைத்தி லாதார்?

௪. ஒழிவறு நோயிற் சாவார்
ஊக்கமொன் றறிய மாட்டார்
கழிவுறு மாக்க ளெல்லா
மிகழ்ந்திடக் கடையி னிற்பார்
இழிவுறு வாழ்க்கை தேரார்
கனவினு மின்பங் காணார்
அழிவறு பெருமை நல்கு
மன்னை! நின்னருள் பெறாதார்.

வேறு.

௫. தேவி! நின்னருள் தேடி யுளந்தவித்
தாவியும் தம தன்பு மளிப்பவர்
மேவி நிற்பது வெஞ்சிறை யாயினும்
தாவில் வானுல கென்னத் தகுவதே.

௬. அம்மை யுன்ற னருமை யறிகிலார்
செம்மை யென்றிழி தொண்டினைச் சிந்திப்பார்,
இம்மை யின்பங்க ளெய்து பொன் மாடத்தை
வெம்மை யார்புன் சிறையெனல் வேண்டுமே

௭. மேற்றி சைப்பல நாட்டினர் வீரத்தார்
போற்றி நின்னைப் புது நிலை யெய்தினர்;
கூற்றி னுக்குயிர் கோடி கொடுத்தும் நின்
பேற்றி னைப்பெறு வேமெனல் பேணினர்.

௮. அன்ன தன்மைகொள் நின்னை யடியனேன்
என்ன கூறி யிசைத்திட வல்லனே?
பின்ன முற்றுப் பெருமை யிழந்துநின்
சின்ன மற்றழி தேயத்திற் றோன்றினேன்

௯. பேர ரத்தினைப் பேணுநல் வேலியே!
சோர வாழ்க்கை, துயர், மிடி, யாதிய
கார றுக்கக் கதித்திடு சோதியே!
வீர ருக்கமுதே! நினை வேண்டுவேன்.

---

## சுதந்திரப் பள்ளு.

### (பள்ளர் களியாட்டம்)

*இராகம்—வராளி. தாளம்—ஆதி.*

### பல்லவி.

ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே;
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
(ஆடுவோமே)

### சரணங்கள்.

௧. பார்ப்பானை ஐயரென்ற
காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற
காலமும் போச்சே—பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற
காலமும் போச்சே—நம்மை
ஏய்ப்போருக் கேவல் செய்யுங்
காலமும் போச்சே. (ஆடுவோ)

௨. எங்கும் சுதந்திரம்
என்பதே பேச்சு—நாம்
எல்லோருஞ் சமமென்ப
துறுதி யாச்சு
சங்கு கொண் டேவெற்றி
யூதுவோமே—இதைத்
தரணிக் கெல் லாமெடுத்
தோதுவோமே. (ஆடுவோ)

௩. எல்லோரு மொன்றென்னுங்
காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றுந் தொலைகின்ற
காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரியரென்னும்
காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சக் காரருக்கு
நாசம் வந்ததே. (ஆடுவோ)

௪. உழவுக்குந் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித் திருப்போரை
நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர் பாய்ச்சி
மாய மாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம்
ஓய மாட்டோம். (ஆடுவோ)

௫. நாமிருக்கு நாடு நம
தென்ப தறிந்தோம்—இது
நமக்கே யுரிமையா
மென்ப தறிந்தோம்—இந்தப்
பூமியி லெவர்க்கு மினி
அடிமை செய்யோம்—பரி
பூரணனுக்கே யடிமை
செய்து வாழ்வோம். (ஆடுவோ)

---

## தமிழ் மொழி வாழ்த்து.

---

௧. வாழ்க தமிழ் மொழி, வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே.
௨. எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே.
௩. வான மளந்த தனைத்து மளந்திடு
வண் மொழி வாழியவே.

# தமிழ்

---

க. யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரென கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ ? சொல்லீர் !
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

உ. யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை,
வெறும் புகழ்ச்சி யில்லை ;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ; ஒரு சொற் கேளீர் !
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் !

ரு. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
மொழியிற் பெயர்த்தல் வேண்டும் ;
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்
மொழியில் இயற்றல் வேண்டும் ;

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை ;
திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

௪. உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்
கவிப்பெருக்கும் மேவு மாயின் [கும்
பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார் ;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்

---

## நவராத்திரிப் பாட்டு.

உஜ்ஜயினீ ! நித்திய கல்யாணீ !
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி (உஜ்ஜயினீ !)

உஜ்ஜய காரண சங்கர தேவி
உமா ஸரஸ்வதி ஸ்ரீ மாதாஸா. (உஜ்ஜயினீ !)

வாழி புனைந்து மஹேசுவர தேவன்
தோழி பதங்கள் பணிந்து துணிந்தனம் (உஜ்ஜயினீ !)

ஸத்ய யுகத்தை அகத்தி லிருத்தி
திறத் தைநமக்கருளிச் செய்யும் உத்தமி (உஜ்ஜயினீ !)

---

## தமிழ்த் தாய்.

### தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுதல்.

---

(தாயுமானவர் ஆனந்தக்களிப்பு சந்தம்)

க. ஆதிசிவன் பெற்றுவிட்டான் - என்னை
ஆரிய மைந்தன் அகத்திய னென்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்.

உ. மூன்று குலத்தமிழ் மன்னர் - என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார்;
ஆன்ற மொழிகளினுள்ளே - உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்.

ங. கள்ளையுந் தீயையுஞ் சேர்த்து - நல்ல
காற்றையும் வான வெளியையுஞ் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் - பல
தீஞ்சுவைக் காவியஞ் செய்து கொடுத்தார்.

ச. சாத்திரங்கள்பல தந்தார் - இந்தத்
தாரணியெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்.
நேத்திரங் கெட்டவன் காலன் - தன்முன்
நேர்ந்த தனைத்துந் துடைத்து முடிப்பான்!

ரு. நன்றென்றுந் தீதென்றும் பாரான் - முன்பு
நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்
சென்றிடுங் காட்டுவெள் ளம்போல் - வையச்
சேர்க்கை யனைத்தையுங் கொன்று நடப்பான்;

சு. கன்னிப் பருவத்தில் அந்நாள் - என்றன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு - பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்.

எ. தந்தை அருள்வலி யாலும் - முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டுங் காலன் - என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்.

அ. இன்றொரு சொல்லினைக் கேட்டேன் ! - இனி
ஏதுசெய்வேன் ? என தாருயிர் மக்காள் !
கொன்றிடல் போலொரு வார்த்தை - இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர் !

கூ. "புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் ;
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

க0. "சொல்லவுங் கூடுவதில்லை - அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை ;
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்."

கக. என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ !
இந்த வசையெனக் கெய்திட லாமோ !
சென்றிடுவீ ரெட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்குச்
[சேர்ப்பீர் !

௧௨. தந்தை யருள்வலி யாலும் - இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும் - புகழ்
ஏறிப் புவிமிசை யென்று மிருப்பேன்.

---

## வெற்றி.

௧. எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கு நோக்கினும் வெற்றி மற்றாங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டி னேனுக் கருளினள் காளி
தடுப்பது நிற்பது தெய்வத மேனும்
சாரு மானுட மாயினு மஃதைப்
படுத்து மாய்ப்ப ளருட்பெருங் காளி
பாரில் வெற்றி யெனக்குறு மாறே.

௨. எண்ணு மெண்ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றியெதனிலும் வெற்றி
கண்ணு மாருயி ரும்மென நின்றாள்
காளித் தாயிங் கெனக்கருள் செய்தாள்
மண்ணுங் காற்றும் புனலு மனலும்
வானும் வந்து வணங்கி நில்லாவோ?
விண்ணு ளோர்பணிந் தேவல்செய் யாரோ
வெல்க காளி பதங்களென் பார்க்கே?

# நவராத்திரிப் பாட்டு

பராசக்தி: (மூன்றும் ஒன்றாகிய மூர்த்தி)

௧. மாதா பராசக்தி வையமெலா நீ நிறைந்தாய்
ஆதாரமுன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே?
ஏதாயினும் வழி நீ சொல்வாய்; எமதுயிரே,
வேதாவின் தாயே மிகப் பணிந்து வாழ்வோமே.

வாணி.

௨. வாணி கலைத் தெய்வம், மணிவாக் குதவிடுவாள்
ஆணி முத்தைப் போலே அறிவு முத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாங் [காட்டுவதாய்]
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

ஸ்ரீ தேவி.

௩. பொன்னரசி, நாரணனார் தேவி, புகழரசி
மின்னு நவரத்தினம்போல் மேனியழகுடையாள்
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிருபொற்றாளே சரண் புகுந்துவாழ்வோமே

பார்வதி.

௪. மலையிலேதான் பிறந்தாள், சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே யூதி யுலகக் கனல் வளர்ப்பாள்
நிலையி லுயர்த்திடுவாள், நேரே யவள் பாதந்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.

# ஸரஸ்வதி ஸ்தோத்திரம்.

(நொண்டிச் சிந்து.)

க. எங்ஙனம் சென்றிருந்தீர் என
தின்னுயிரே யென்றன் இசையமுதே
திங்களைக் கண்டவுடன்—கடல்
திரையினைக் காற்றினைக் கேட்டவுடன்
கங்குலைப் பார்த்தவுடன்—இங்கு
காலையி னிரவியைத் தொழுதவுடன்
பொங்குவீர் அமிழ்தெனவே—அந்தப்
புதுமையிலே துயர் மறந்திருப்பேன்.

உ. மாதமோர் நான்கா நீர்—அன்பு
வறுமையிலே யென்னை வீழ்த்திவிட்டீர்.
பாதங்கள் போற்றுகின்றேன்—என்றன்
பாவமெலாங் கேட்டு ஞான கங்கை
நாதமொ டெப்பொழுதும்—என்றன்
நாவினிலே பொழிந்திட வேண்டும்
வேதங்க ளாக்கிடுவீர்—அந்த
விண்ணவர் கண்ணிடை விளங்கிடுவீர்.

ங. கண்மணி போன்றவரே—இங்கு
காலையு மாலையுந் திருமகளாம்
பெண்மணி யின்பத்தையும்—சக்திப்
பெருமகள் திருவடிப் பெருமையையும்

வண்மையி லோங்கிடுவீர்—என்றன்
வாயிலு மதியிலும் வளர்ந்திடுவீர்
அண்மையி லிருந்திடுவீர்—இனி
அடியனைப் பிரிந்திடல் ஆற்றுவனோ?

௪. தானெனும் பேய் கெடவே—பல
சஞ்சலக் குரங்குகள் தலைப்படவே
வானெனும் ஒளிபெறவே—நல்ல
வாய்மையிலே மதி நிலைத்திடவே
தானெனப் பொழிந்திடுவீர்—அந்தத்
திருமகள் சினங்களைத் தீர்த்திடுவீர்
ஊனங்கள் போக்கிடுவீர்—நல்ல
ஊக்கமும் பெருமையும் உதவிடுவீர்.

௫. தீயினை நிறுத்திடுவீர்—நல்ல
தீரமுந் தெளிவுமிங் கருள்புரிவீர்
மாயையி லறிவிழந்தே—உம்மை
மதிப்பது மறந்தன பிழைகளெல்லாம்
தாயென வுமைப் பணிந்தேன்—பொறை
சார்த்தி நல் லருள்செய வேண்டுகின்றேன்
வாயினிற் சபதமிட்டேன்—இனி
மறக்கிலேன் எனை மறக்ககிலீர்!

# ஸரஸ்வதி தேவியின் புகழ்.

*ராகம்—ஆனந்தபைரவி. சாப்பு—தாளம்.*

க. வெள்ளைத் தாமரைப் பூவி லிருப்பாள்
வீணை செய்யும் ஒலியி லிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்,
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தி னுண்ணின் றொளிர்வாள்,
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்.
(வெள்ளைத்)

உ. மாதர் தீங்குரற் பாட்டி லிருப்பாள்
மக்கள் பேசும் மழலையி லுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியி னாவை யிருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழி லுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழி லிடை யுற்றாள்
இன்பமே வடி வாகிடப் பெற்றாள் (வெள்ளைத்)

ங. வஞ்ச மற்ற தொழில் புரிந் துண்டு
வாழு மாந்தர் குல தெய்வ மாவாள்
வெஞ்சமர்க் குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்

மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீர மன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்சமென்று வணங்கிடுந் தெய்வம்
தாரணி மீதறி வாகிய தெய்வம்.(வெள்ளைத்)

ச. தெய்வம் யாவும் உணர்ந்திடுந் தெய்வம்
தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரினுக் குயி ராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம்.
(வெள்ளைத்)

ரு. செந்தமிழ் மணி நாட்டிடை யுள்ளீர்!
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!
வந்தனம் மிவட் கேசெய்வ தென்றால்
வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை,
வரிசையாக அடுக்கி யதன் மேல்
சந்தனத்தை மலரை யிடுவோர்
சாத்திரம் மிவள் பூசனை யன்றும் (வெள்ளைத்)

சு. வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பல பல பள்ளி

தேடு கல்வியி லாததோ ரூரைத்
    தீயினுக் கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
    கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.
(வெள்ளைத்)

௭. ஊணர் தேசம், யவனர் தந் தேசம்
    உதய ஞாயிற் றொளிபெறு நாடு,
சேணகன்ற தோர் சிற்றடிச் சீனம்
    செல்வப் பாரசிகப் பழந்தேசம்
தோணலத்த துருக்கம், மிசிரம்
    சூழ கடற் கப் புறத்தினி லின்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
    கல்வித் தேவி யொளிமிகுந் தோங்க.
(வெள்ளைத்)

௮. ஞான மென்பதோர் சொல்லின் பொருளாம்
    நல்ல பாரத நாட்டிடை வந்தீர்!
ஊன மின்று பெரிதிழைக் கின்றீர்
    ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்
மான மற்று விலங்குக ளொப்ப
    மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போனதற்கு வருந்துதல் வேண்டா
    புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்.
(வெள்ளைத்)

௯. இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
    இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
    ஆலயம் பதி னாயிர நாட்டல்

பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத் தறிவித்தல்.
(வெள்ளைத்)

௧௦. நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர்!
ஆண்மை யாள ருழைப்பினை நல்கீர்!
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!
(வெள்ளைத்)

---

## லக்ஷ்மி தேவி—சரண்புகுதல்.

௧. மாதவன் சக்தியினைச் - செய்ய
மலர்வளர் மணியினை வாழ்த்திடுவோம்
போதுமிவ் வறுமையெலாம் - எந்தப்
போதிலுஞ் சிறுமையின் புகைதனிலே
வேதனைப் படுமனமும் - உயர்
வேதமும் வெறுப்புறச் சோர்மதியும்
வாதனை பொறுக்கவில்லை - அன்னை
மாமக ளடியிணை சரண்புகுவோம்.

௨. கீழ்களி னவமதிப்பும் - தொழில்
கெட்டவ ரிணக்கமுங் கிணற்றினுள்ளே
மூழ்கிய விளக்கினைப்போல் - செய்யு
முயற்சியெல் லாங்கெட்டு முடிவதுவும்
ஏழ்கட லோடியுமோர் - பயன்
எய்திட வழியின்றி யிருப்பதுவும்
வீழ்கவிக்கொடு நோய்தான் - வைய
மீதினில் வறுமையோர் கொடுமை யன்றோ?

௩. பாற்கட லிடைப் பிறந்தாள் - அது
பயந்தநல் லமுதத்தின் பான்மைகொண்டாள்
ஏற்குமோர் தாமரைப்பூ - அதில்
இணைமலர்த்திருவடி இசைந்திருப்பாள்
நாற்கரந் தானுடையாள் - அந்த
நான்கினும் பலவகைத் திருவுடையாள்
வேற்கரு விழியுடையாள் - செய்ய
மேனியள் பசுமையை விரும்பிடுவாள்.

௪. நாரணன் மார்பினிலே - அன்பு
நலமுற நித்தமு மிணைந்திருப்பாள்
தோரணப் பந்தரிலும் - பசுத்
தொழுவிலும் சுடர்மணி மாடத்திலும்
வீரர்தந் தோளினிலும் - உடல்
வெயர்த்திட வுழைப்பவர் தொழில்களிலும்
பாரதி சிரத்தினிலும் - ஒளி
பரவிட வீற்றிருந் தருள்புரிவாள்.

௫. பொன்னிலு மணிகளிலும் - நறும்
பூவிலுஞ் சாந்திலும் விளக்கினிலும்
கன்னியர் நகைப்பினிலும் - செழுங்
காட்டிலும் பொழிலிலும் கழனியிலும்
முன்னிய துணிவினிலும் - மன்னர்
முகத்திலும் வாழ்ந்திடும் திருமகளைப்
பண்ணிநற் புகழ்பாடி - அவள்
பதமலர் வாழ்த்திநற் பதம்பெறுவோம்

௬. மண்ணினுட் கனிகளிலும் - மலை
வாய்ப்பிலும் வார்கட லாழத்திலும்
புண்ணிய வேள்வியிலும் - உயர்
புகழிலு மதியிலும் புதுமையிலும்
பண்ணுநற் பாவையிலும் - நல்ல
பாட்டிலுங் கூத்திலும் படத்திலும்
நண்ணிய தேவிதனை - எங்கள்
நாவிலு மனத்திலு நாட்டிடுவோம்.

௭. வெற்றிகொள் படையினிலும் - பல
விநயங்க ளறிந்தவர் கடையினிலும்
நற்றவ நடையினிலும் - நல்ல
நாவலர் தேமொழித் தொடையினிலும்
உற்றசெந் திருத்தாயை - நித்தம்
உவகையிற் போற்றியிங் குயர்ந்திடுவோம்
கற்றபல் கலைகளெல்லாம் - அவள்
கருணைநல் லொளிபெறக் கலிதவிர்ப்போம்

# லக்ஷ்மி பிரார்த்தனை.

## திரு வேட்கை.

(ராகம்—நாட்டை. தாளம்—சதுஸ்ர ஏகம்)

க. மலரின் மேவு திருவே—உன்மேல்
மையல் பொங்கி நின்றேன்
நிலவு செய்யு முகமும்—காண்பார்
நினைவழிக்கும் விழியும்
கலகலென்ற மொழியும்—தெய்வக்
களி துலங்கு நகையும்
இலகு செல்வ வடிவும்—கண்டுன்
இன்பம் வேண்டு கின்றேன்.

உ. கமல மேவு திருவே—நின்மேல்
காதலாகி நின்றேன்
குமரி நினைஇங்கே—பெற்றோர்
கோடியின்ப முற்றார்
அமரர் போல வாழ்வேன்—என்மேல்
அன்பு கொள்வையாயின்
இமய வெற்பின் மோத—நின்மேல்
இசைகள் பாடி வாழ்வேன்.

௩. வாணி தனையென்றும்—நினது
வரிசை பாடவைப்பேன்
நாணியேகலாமோ?—என்னை
நன்கறிந்திலாயோ?

பேணிவைய மெல்லாம்—நன்மை
பெருக வைக்கும் விரதம்
பூணுமைந்த ரெல்லாம்—கண்ணன்
பொர்றிக ளாவ ரன்றோ?

௪. பொன்னு நல்லமணியும்—சுடர்செய
பூண்க ளேந்தி வந்தாய்
மின்னு நின்றன் வடிவிற்—பணிகள்
மேவி நிற்கு மழகை
என்னுரைப்ப னேடீ—திருவே
என்னுயிர்க் கொரமுதே
நின்னை மார்பு சேரத்—தழுவி
நிகரிலாது வாழ்வேன்.

௫. செல்வ மெட்டு மெய்தி—நின்னாற்
செம்மை யேறி வாழ்வேன்
இல்லை யென்ற கொடுமை—உலகில்
இல்லையாக வைப்பேன்
முல்லை போன்ற முறுவல்—காட்டி
மோக வாதை நீக்கி
எல்லை யற்ற சுவையே—எனைநீ
என்றும் வாழ வைப்பாய்.

# ஸ்ரீ தேவி ஸ்துதி.

## திருமகள்.

(ராகம்—சக்கரவாகம். தாளம்—திஸ்ர ஏகம்)

க. நித்தமுனை வேண்டி மனம்
நினைப்பதெல்லாம் நீயாய்ப்
பித்தனைப்போல் வாழ்வதிலே
பெருமை யுண்டோ திருவே.

சித்தவுறுதி கொண்டிருந்தார்
செய்கை யெல்லாம் வெற்றி கொண்டே
உத்தம நிலை சேர்வ ரென்றே
உயர்ந்த வேத முரைப்ப தெல்லாம்

சுத்த வெறும்பொய்யோடீ
சுடர்மணியே, திருவே
மெத்த மயல் கொண்டு விட்டேன்,
மேவிடுவாய் திருவே.

உ. உன்னையன்றி யின்ப முண்டோ
உலகமிசை வேறே?
பொன்னைவடி வென்று டையாய்,
புத்தமுதே, திருவே?

மின்னொளி தரு நன் மணிகள்
மேடை யுயர்ந்த மாளிகைகள்
வன்ன முடைய தாமரைப் பூ
மணிக்குள முள்ள சோலைகளும்.

அன்னம் நறு நெய் பாலும் அதிசய
  மாத் தருவாய் !
நின்னருளை வாழ்த்தி என்றும்
  நிலத்திருப்பேன் திருவே.

௩. ஆடுகளு மாடுகளும் அழகுடைய பரியும்
வீடுகளு நெடுநிலமும் விரைவினிலே தருவாய்

ஈடு நினக் கொர் தெய்வமுண்டோ ?
எனக் குனை யன்றிச் சர ணுமுண்டோ ?
வாடு நிலத்தைக் கண் டிரங்கா
மழையினைப் போல் உள்ளமுண்டோ ?

நல்கருள்வாய் திருவே
பீடுடைய வான் பொருளே,
  பெருங் கனியே திருவே.

# ஸ்ரீகிருஷ்ணன் மீது ஸ்துதி.

க. வேத வானில் விளங்கி "அறஞ் செய்மின்
சாதல் நேரினுஞ் சத்தியம் பூணுமின்.
தீத கற்றுமின்" என்று திசையெலாம்,
மோத நித்தம் இடித்து முழங்கியே.

௨. உண்ணுஞ சாதிக் குறக்கமும் சாவுமே
நண்ணு றாவண நன்கு புரிந்திடும்
எண்ண ரும்புகழ்க் கீதையெனச் சொலும்
பண்ண மிழ்தத் தருள்மழை பாலித்தே.

௩. எங்க ளாரிய பூமியெனும் பயிர்
மங்க ளம்பெற நித்தலும் வாழ்விக்கும்
துங்க முற்ற துணை முகி லேமலர்ச்
செங்க ணாய்நின் பதமலர் சிந்திப்பாம்.

௪ வீரர் தெய்வதம், கர்ம விளக்குநல்
பார தர்செய் தவத்தின் பயனெனுந்
தார விர்ந்த தடம்புயப் பார்த்தனோர்
கார ணம்மெனக் கொண்டு கடவுணீ.

௫. நின்னை நம்பி நிலத்திடை யென்றுமே
மன்னு பாரத மாண்குலம் யாவிற்கும்
உன்னுங் காலை உயர்துணை யாகவே
சொன்ன சொல்லை யுயிரிடைச் சூடுவாம்.

௬. ஐய கேளினி யோர்சொல், அடியர்யாம்
உய்ய நின்மொழி பற்றி யொழுகியே,
மைய றும்புகழ் வாழ்க்கை பெறற்கெனச்
செய்யுஞ் செய்கையி னின்னருள் சேர்ப்பையால்.

௭. ஒப்பிலாத உயர் வொடு கல்வியும்
எய்ப்பில் வீரமும், இப்புவி யாட்சியும்
தப்பிலாத தருமமுங் கொண்டு யாம்
அப்ப னேநின் னடிபணிந் துய்வமால்.

௮. மற்று நீயிந்த வாழ்வு மறுப்பையேல்
சற்று நேரத்து ளெம்முயிர் சாய்த்தருள்
கொற்ற வாநின் குவலய மீதினில்
வெற்று வாழ்க்கை விரும்பி யழிகலேம்.

௯. நின்றன் மாமர பில்வந்து நீசராய்ப்
பொன்றல் வேண்டிலம் பொற்கழ லாணைகாண்
இன்றிங் கெம்மை யதம்புரி யில்லையேல்
வென்றி யும்புக ழுந்தரல் வேண்டுமே.

# ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்.

## கவிகள்,

*ராகம்—கமாஸ். தாளம்—ஆதி.*

க. என்று தணியு மிந்த சுதந்திர தாகம் ?
என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம் ?
என்றெம தன்னை கை விலங்குகள் போகும் ?
என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும் ?
அன்றொரு பாரதமாக்க வந்தோனே,
ஆரியர் வாழ்வினை யாதரிப் போனே !
வென்றி தருந்துணை நின்னருளன்றோ
மெய்யடியோ மின்னும் வாடுதல் நன்றோ ?

உ. பஞ்சமு நோயுநின் மெய்யடி யார்க்கோ ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ ?
தஞ்ச மடைந்த பின் கைவிடலாமோ ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ ?
அஞ்சலென் றருள்செயுங் கடமை யில்லாயோ ?
ஆரிய நீயுநின் அறமறந் தாயோ ?
வெஞ்செய லரக்கரை வீட்டிடுவோனே
வீரசிகாமணி, ஆரியர் கோனே.

# பாரத ஸமுதாயம்.

ராகம்—பியாக். திஸ்ர ஏகதாளம்.

பல்லவி.

பாரத ஸமுதாயம் வாழ்கவே—வாழ்க, வாழ்க
பாரத ஸமுதாயம் வாழ்கவே—ஜய ஜய ஜய (பா)

அநுபல்லவி.

முப்பது கோடி ஜனங்களின் ஸங்க
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பி லாத ஸமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை. வாழ்க. (பா)

சரணங்கள்.

க. மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்க மினி யுண்டோ?

மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை யினி யுண்டோ—புலனில்
வாழ்க்கை யினி யுண்டோ—நம்மிலந்த
வாழ்க்கை யினி யுண்டோ.

இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு

கனியுங் கிழங்குந் தான்யங்களும்
கணக்கின்றித்தரு நாடு—இது
கணக்கின்றித்தரு நாடு—நித்தநித்தம்
கணக்கின்றித்தரு நாடு—வாழ்க. (பாரத)

௨. இனியொரு விதி செய்வோம்—அதை
எந்தநாளும் காப்போம்
தனியொருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம் - வாழ்க. (பாரத)

௩. "எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன்"
என்றுரைத்தான் கண்ணபெருமான்
எல்லாரு மமரநிலை யெய்து நன்முறையை
இந்தியா உலகிற் களிக்கும்: ஆம்
இந்தியா உலகிற் களிக்கும். ஆம் ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—வாழ்க. (பாரத)

௪. எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்தியா மக்கள்
எல்லாரு மோர் நிறை எல்லாரு மோர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—வாழ்க
(பாரத)

## தொழில்.

௧. இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்திரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே;
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே!
பெரும்புகழ் நுமக் கேயிசைக் கின்றேன்.
பிரம தேவன் கலையிங்கு நீரே!

௨. மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!
எண்ணெய், பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!

௩. பாட்டுஞ் செய்யுளுங் கோத்திடு வீரே!
பரத நாட்டியக் கூத்திடு வீரே!
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே;
நாட்டி லேயறம் கூட்டி வைப்பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டி வைப்பீரே!
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவீர் நீரே!

# வெறிகொண்ட தாய்.

௧. பேயவள் காணெங்க ளன்னை—பெரும்
பித்துடையா ளெங்க ளன்னை ;
காயழ லேந்திய பித்தன்—தனைக்
காதலிப்பா ளெங்க ளன்னை—(பேயவள்)

௨. இன்னிசை யாமின்பக் கடலில்—எழுந்
தெற்றும் அலைத்திரள் வெள்ளந்
தன்னிடை மூழ்கித் திளைப்பாள்—அங்கு
தாவிக் குதிப்பாளெம் மன்னை—(பேயவள்)

௩. தீஞ்சொற் கவிதையஞ் சோலை—தனில்
தெய்வீக நன்மணம் வீசும்
தேஞ்சொரி மாமலர் சூடி—மதுத்
தேக்கி நடிப்பளெம் மன்னை—(பேயவள்)

௪. வேதங்கள் பாடுவள் காணீர்—உண்மை
வேல் கையிற்பற்றிக் குதிப்பாள்
ஓதருஞ் சாத்திரங் கோடி—உணர்ந்
தோதி யுலகெங்கும் விதைப்பாள்-(பேயவள்)

௫. பாரதப் போரெனி லெளிதோ?—விறற்
பார்த்தன் கை வில்லிடை யொளிர்வாள்
மாரதர் கோடி வந்தாலும்—கணை
மாய்த்துக் குருதியிற் றிளைப்பாள்—(பேயவள்)

# அல்லா.

## பல்லவி.

அல்லா, அல்லா, அல்லா!

## சரணங்கள்.

க. பல்லாயிரம் பல்லாயிரம் கோடி கோடி
யண்டங்கள்
எல்லாத் திசையிலுமோ ரெல்லை யில்லா
வெளி வானிலே
நில்லாது சுழன்றோட நியமஞ் செய்தருள்
நாயகன்
சொல்லாலு மனத்தாலுந் தொட்
டொணாத பெருஞ்சோதி!
(அல்லா, அல்லா, அல்லா!)

உ. கல்லாதவ ராயினும் உண்மை சொல்லாதவ
ராயினும்
பொல்லாதவ ராயினும் தவ மில்லாதவ
ராயினும்
நல் லாரை நீதியின்படி நில்லாதவ ராயினும்
எல்லாரும் வந் தேத்து மளவில் யமபயங்
கெடச் செய்பவன்.
(அல்லா, அல்லா, அல்லா!)

# யேசு கிறிஸ்து.

---

[தீய ஒழுக்கத்தில் நின்ற மேரி மக்தலேன் என்பாள் யேசு கிறிஸ்துவை அடைந்து, தனது ஒழுக்கத்திற்காகப் பரிதபித்து தன்னைக் கடையேற்ற வேண்டுமென்று வேண்டினாள். யேசுவும் அவளுக்கு அருள்புரிந்தார். யேசு புதைக்கப்பட்ட மூன்றாநாள் அவருடம்புடன் எழுந்து விண்ணேகினதை மேரி மக்தலேன் கண்ணால்கண்டு பிறருக் கறிவித்ததாய் கிறிஸ்துபுராணம் கூறுகிறது. இக்கதையையே இங்கு விளக்கியிருக்கிறது.]

க. 'ஈசன் வந்து சிலுவையில் மாண்டான் ;
எழுந் துயிர்த்தனன் நாள் ஒரு மூன்றில் ;
நேச மா மரியா மக்தலேநா
நேரிலே யிந்தச் செய்தியைக் கண்டாள்'.
தேசத்தீர் ! இதன் உட்பொருள் கேளீர்:—
தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாச மின்றி நமை நித்தங் காப்பார்,
நம் அஹந்தையை நாம் கொன்று விட்டால்,

உ. அன்பு காண் மரியா மக்தலேநா,
ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து
முன்பு தீமை வடிவினைக் கொன்றால்
மூன்று நாளினில் நல்லுயிர் தோன்றும்.
பொன் பொலிந்த முகத்தினிற் கண்டே,
போற்றுவாள் அந்த நல்லுயிர் தன்னை,
அன்பெனும் மரியா மக்தலே நா.
ஆஹா ! சாலப் பெருங்களி யிஃதே.—

ச. சி. ஸ்ரீ.

௬. உண்மை யென்ற சிலுவையிற் கட்டி,
உணர்வை ஆணித் தவங்கொண் டடித்தால்
வண்மைப் பேருயிர்—யேசு கிறிஸ்து
வான மேனியில் அங்கு விளங்கும்
பெண்மை காண் மரியா மக்தலேனா,
பேணும் நல்லறம் யேசு கிறிஸ்து.
நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்
நொடியி லிஃது பயின்றிட லாகும்.

## வேண்டும்.

மனதிலுறுதி வேண்டும்
வாக்கினிலே யினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கினபொருள் கைப்படவேண்டும்
கனவுமெய்ப் படவேண்டும்
கைவசமாவது விரைவில்வேண்டும்
தனமு மின்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும்
காரியத்திலுறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்
பெரியகடவுள் காக்கவேண்டும்
மண் பயனுற வேண்டும்
வானகமிங்கு தென்படவேண்டும்
உண்மை நின்றிடவேண்டும்.

ஓம், ஓம், ஓம், ஓம்.

# நடிப்புச் சுதேசிகள்.

## பழித்தறிவுறுத்தல்.

(கிளிக் கண்ணிகள்)

௧. நெஞ்சி லுரமு மின்றி
நேர்மைத் திறமு மின்றி
வஞ்சனை சொல்வாரடீ—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி.

௨. கூட்டத்திற் கூடி நின்று
கூவிப் பிதற்ற லன்றி
நாட்டத்திற் கொள்ளாரடீ—கிளியே
நாளில் மறப் பாரடி.

௩. சொந்த அரசும் புவிச்
சுகங்களு மாண்புகளும்
அந்தகர்க் குண்டாகுமோ ?—கிளியே
அலிகளுக் கின்ப முண்டோ ?

௪. கண்க ளிரண் டிருந்தும்
காணுந் திறமை யற்ற
பெண் களின் கூட்டமடீ—கிளியே
பேசிப் பய னென்னடீ.

௫. யந்திர சாலை யென்பர்
எங்கள் துணிக ளென்பர்
மந்திரத் தாலே யெங்கும்—கிளியே
மாங்கனி வீழ்வ துண்டோ ?

சா. உப்பென்றும் சீனி யென்றும்
உள் நாட்டுச் சேலை யென்றும்
செப்பித் திரிவாரடீ—கிளியே
செய்வ தறியாரடீ.

எ. தேவியர் மான மென்றும்
தெய்வத்தின் பத்தி யென்றும்
நாவினாற் சொல்வ தல்லால்—கிளியே
நப்புத லற்றாரடீ.

அ. மாதரைக் கற்பழித்து
வன் கண்மை பிறர் செய்யப்
பேதைகள் போலுயிரைக்—கிளியே
பேணி யிருந்தாரடீ.

கூ. தேவி கோயிலிற் சென்று
தீமை பிறர்கள் செய்ய
ஆவி பெரிதென் றெண்ணிக்—கிளியே
அஞ்சிக் கிடந் தாரடீ.

க0. அச்சமும் பேடிமையும்
அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டாரடீ—கிளியே
ஊமைச் சனங்களடீ.

கக. ஊக்கமும் உள்வலியும்
உண்மையிற் பற்றுமில்லா
மாக்களுக்கோர் கணமும்—கிளியே
வாழத் தகுதி யுண்டோ?

௧௨. மானம் சிறிதென் றெண்ணி
வாழ்வு பெரிதென் றெண்ணும்
ஈனர்க் குலகந் தனில்—கிளியே
இருக்க நிலைமை யுண்டோ ?

௧௩. சிந்தையிற் கள் விரும்பி
சிவ சிவ வென்பது போல்
வந்தே மாதர மென்பார்—கிளியே
மனதி லதனைக் கொள்ளார்.

௧௪. பழமை பழமை யென்று
பாவனை பேச லன்றிப்
பழமை யிருந்த நிலை—கிளியே
பாமர ரேதறிவார்.

௧௫. நாட்டிலவ மதிப்பும்
நாணின்றி யிழி செல்வத்
தேட்டில் விருப்புங் கொண்டே—கிளியே
சிறுமை யடை வாரடி.

௧௬. சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை யிரங்காரடி—கிளியே
செம்மை மறந்தாரடி.

௧௭. பஞ்சத்தும் நோய் களிலும்
பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத் தம் கண்ணாற் கண்டும்—கிளியே
சோம்பிக் கிடப்பாரடி.

௧௮. தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா—கிளியே
வந்தே மாதர மென்பார்.

---

## தொண்டுசெய்யும் அடிமை.

---

ஸ்வராஜ்யம் வேண்டு மென்ற பாரத வாஸிக்கு
ஆங்கிலேய உத்யோகஸ்தன் கூறுவது.

(நந்தனார் சரித்திரத்திலுள்ள "மாடுதின்னும்புலையா—
உனக்கு மார்கழித் திருநாளா" என்றபாட்டின் வர்ணமெட்டு)

௧. தொண்டு செய்யு மடிமை—உனக்கு
சுதந்திர நினைவோடா
பண்டு கண்டதுண்டோ—அதற்குப்
பாத்திர மாவாயோ? (தொண்டு)

௨. ஜாதிச் சண்டை போச்சோ?—உங்கள்
சமயச் சண்டை போச்சோ?
நீதி சொல்ல வந்தாய்—கண்முன்
நிற்கொணாது போடா. (தொண்டு)

௩. அச்ச நீங்கினாயோ?—அடிமை!
ஆண்மை தாங்கினாயோ?
பிச்சை வாங்கிப் பிழைக்கும்—ஆசை
பேணுத லொழித்தாயோ? (தொண்டு)

௪. கப்பலேறு வாயோ ?—அடிமை !
கடலைத் தாண்டு வாயோ ?
குப்பை விரும்பும் நாய்க்கே—அடிமை !
கொற்றத் தவிசு முண்டோ ? (தொண்டு)

௫. ஒற்றுமை பயின்றாயோ ?—அடிமை!
உடம்பில் வலிமை யுண்டோ ?
வெற்றுரை பேசாதே—அடிமை !
வீரிய மறிவாயோ ? (தொண்டு)

௬. சேர்ந்து வாழு வீரோ ? உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ ?
சோர்ந்து வீழ்தல் போச்சோ ?—உங்கள்
சோம்பரைத் துடைத்தீரோ ? (தொண்டு)

௭. வெள்ளை நிறத்தைக் கண்டால்—பதறி
வெருவலை யொழித்தாயோ ?
உள்ளது சொல்வேன் கேள்—சுதந்திரம்
உனக் கில்லை மறந்திடடா. (தொண்டு)

௮. நாடு காப்பதற்கே—உனக்கு
ஞானஞ் சிறிது முண்டோ ?
வீடு காக்கப் போடா—அடிமை
வேலை செய்யப் போடா. (தொண்டு)

௯. சேனை நடத்துவாயோ ?—தொழும்புகள்
செய்திட விரும்பாயோ ?
ஈனமான தொழிலே—உங்களுக்
கிசைவதாகும் போடா. (தொண்டு)

# மேத்தா திலகருக்குச் சொல்வது

(சிதம்பர பதவியாகிய முக்தியிலே, நந்தனார் அடங்காத தாகம் கொண்டிருந்தார். அது அவரை அடிமைகொண்டிருந்த "ஆண்டை"க்கு மனமில்லை. அவன் நந்தனாரைப் பலவித இம்சைகளுக்கு உட்படுத்தினான். அதுவுமின்றி சேரியிலிருந்த நிதானப்பறையர்கள் பலர் நந்தனார் சிதம்பரத்தைப் பற்றி நினைக்கலாகாதென்று போதனை செய்தார்கள். அந்த நிதானஸ்தர்களிலே ஒருவர் பாடிய "ஓய் நந்தனாரே நம்ம ஜாதிக் கடுக்குமோ, நியாயந் தானோ நீர் சொல்லும்" என்ற பாட்டின் கருத்தையும் வர்ணமெட்டையும் தழுவிப் பின் வரும் பாடல் செய்யப்பட்டிருக்கிறது.)

பல்லவி.

ஓய் திலகரே, நம்ம ஜாதிக்கடுக்குமோ ?
செய்வது சரியோ, சொல்லும்.

கண்ணிகள்.

க. முன்னறியாப் புது வழக்கம் - நீர்
மூட்டி விட்டதிந்தப் பழக்கம்—இப்போ
தெங்நகரிலு மிது முழக்கம் - மிக
இடும்பை செய்யுமிந்த ஒழுக்கம். (ஓய் திலகரே)

உ. சுதந்திர மென்கிற பேச்சு - எங்கள்
தொழும்புக ளெல்லாம் வீணாய்ப் போச்சு - இது
மதம் பிடித்தது போலாச்சு - எங்கள்
மனிதர்க் கெல்லாம் வந்த தேச்சு. (ஓய் திலகரே)

௩. வெள்ளை நிறத்த வர்க்கே ராஜ்யம் - அன்றி
வேறெவ ருக்குமது தியாஜ்யம் - சிறு
பிள்ளைக ளுக்கே யுபதேசம் - நீர்
பேசி வைத்த தெல்லாம் மோசம். (ஓய் திலகரே )

## நிதான கட்சியார்.

### சுதேசியத்தைப் பழித்தல்.

(நந்தனார் சரித்திரத்திலே சேரிப் பறையர்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து நந்தனாரையும் அவரது கட்சியாரையும் பழிக்கின்றார்கள். சேரியிலே மாட்டிறைச்சியுண்டு புலைவாழ்வு வாழ்ந்துகொண்டு ஆண்டைப் பார்ப்பானுக்கு அடிமை செய்வதே ஸ்வர்க்க மென்றறியாமல், சிதம்பர பயித்தியங் கொண்டலையும் நந்தனாராலும், அவருடைய சீடர்களாலும் பெரிய கேடுகள் விளையக் கூடுமென்று வருத்தங்கொண்டு "நாம் என்ன செய்வோம், புலையரே" என்று அப்பறையர்கள் பாடிய பாட்டின் கருத்தையும் வர்ணமெட்டையும் தழுவி பின்வரும் பாடல் எழுதப்பட்டிருக்கின்றது. மேத்தா கோக்கலே முதலிய நிதானஸ்தர்கள் திலகமுனிவராலும், அவரது கட்சியாராலும் நாட்டிற்குக் கெடுதி விளையுமென்று பேசும் விஷயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.)

(ராகம்—புன்னாகவராளி. தாளம்—ரூபகம்.)

### பல்லவி.

நாமென்ன செய்வோம், துணைவரே—இந்த
பூமியிலில்லாத புதுமையைக் கண்டோம். (நாம்)

## சரணங்கள்.

க. திலக னொருவனாலே யிப்படி யாச்சு
செம்மையும் தீமையு மில்லாமலே போச்சு
பலதிசையுந் துஷ்டர் கூட்டங்க ளாச்சு
பையல்கள் நெஞ்சில் பயமென்பதே
போச்சு. (நாம்)

உ. தேசத்தி லெண்ணற்ற பேர்களுங் கெட்டார்
செய்யுந் தொழில் முறை யாவையும் விட்டார்
பேசவோர் வார்த்தை தாதா சொல்லி விட்டார்
பின்வர வறியாமல் சுதந்திரம் தொட்டார். (நாம்)

௩. பட்டம் பெற் றோர்க்கு மதிப் பென்பது மில்லை
பரதேசப் பேச்சில் மயங்குபவ ரில்லை
சட்டம் மறந்தோர்க்குப் பூஜை குறைவில்லை
சர்க்காரிடம் சொல்லிப் பார்த்தும் பயனில்லை.
(நாம்)

ச. சீமைத் துணியென்று லுள்ளங் கொதிக்கிறார்
சீரில்லை யென்றுலோ எட்டி மிதிக்கிறார்
தாமெத்தையோ "வந்தே" யென்று துதிக்கிறார்
தரமற்ற வார்த்தைகள் பேசிக்குதிககிறார். (நாம்)

# பாரததேவியின் அடிமை.

(நந்தன் சரித்திரத்திலுள்ள "ஆண்டைக் கடிமைக் காரனல்லவே" என்ற பாட்டின் வர்ணமெட்டையும் கருத்தையும் பின்பற்றி எழுதப்பட்டது.)

## பல்லவி.

அந்நியர் தமக் கடிமை யல்லவே—நான்
அந்நியர் தமக் கடிமை யல்லவே—

## சரணங்கள்.

க. மன்னிய புகழ்ப் பாரததேவி
தன்னிரு தாளிணைக் கடிமைக் காரன். (அந்)

உ. இலகு பெருங்குணம் யாவைக்கு மெல்லையாம்
திலக முனிக்கொத்த அடிமைக்காரன். (அந்)

ங. வெய்ய சிறைக்குள்ளே புன்னகையோடு போம்
ஐயன் பூபேந்த்ரனுக் கடிமைக் காரன். (அந்)

ச. காலர் முன் னிற்பினும் மெய்தவறா வெங்கள்
பாலர் தமக்கொத்த அடிமைக்காரன். (அந்)

ரு. காந்தன விட்டாலும் தர்மம் விடா ப்ரம்ம
பாந்தவன் றாளிணைக் கடிமைக் காரன். (அந்)

# ஆங்கிலேயன் ஒரு தேசபக்தனுக்கு கூறுவது.

தண்டகம்—ஆதிதாளம்.

க. நாட்டிலெங்கும் ஸ்வதந்திர வாஞ்சையை
நாட்டினாய்—கனல்—மூட்டினாய்
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன்—வலி—காட்டுவேன். (நாட்டி)

உ. கூட்டங் கூடிவந் தேமா தரமென்று
கோஷித்தாய்—எமைத்—தூஷித்தாய்
ஓட்ட நாங்க ளெடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய்—பொருள் ஈட்டினாய். (நாட்டி)

ங. கோழைப்பட்ட ஜனங்களுக் குண்மைகள்
கூறினாய்—சட்ட—மீறினாய்
ஏழைப் பட்டிங் கிறத்த லிழிவென்றே
யேசினாய்—வீரம்—பேசினாய். (நாட்டி)

ச. அடிமைப்பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய்—புன்மை—போக்கினாய்
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினாய்—ஆசை—யூட்டினாய். (நாட்டி)

ரு. தொண்டொன்றே தொழி லாக்கொண் டிருந் [தோரைத்
தூண்டினாய்—புகழ்—வேண்டினாய்
கண்ட கண்டதொழில் கற்க மார்க்கங்கள்
காட்டினாய்—சோர்வை—யோட்டினாய். (நாட்டி)

சு. எங்கு மிந்த ஸ்வராஜ்ய விருப்பத்தை
ஏவினுய்—விதை—தூவினுய்
சிங்கம் செய்யுந் தொழிலைச் சிறு முயல்
செய்யவோ—நீங்கள்—உய்யவோ. (நாட்டி)

எ. சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன்—குத்திக்—கொல்லுவேன்
தட்டிப்பேசுவோ ருண்டோ? - சிறைக் குள்ளே
தள்ளுவேன்—பழி—கொள்ளுவேன். (நாட்டி)

## தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி.

க. சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் - இனி - யஞ்சிடோம்
எந்த நாட்டினு மிந்த அநீதிகள்
ஏற்குமோ? - தெய்வம் - பார்க்குமோ?

உ. வந்தே மாதர மென்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம் - முடி - தாழ்த்துவோம்
எந்த மாருயி ரன்னையைப் போற்றுதல்
ஈனமோ? - அவ - மானமோ?

ங. பொழுதெல்லா மெங்கள் செல்வங் கொள்ளை
போகவோ?—நாங்கள் - சாகவோ? [கொண்டு
அழுது கொண்டிருப்போமோ? ஆண்பிள்ளை
அல்லமோ?—உயிர்—வெல்லமோ? [கள்

௪. நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ? - பன்றிச் - சேய்களோ?
நீங்கள் மட்டு மனிதர்க ளோவிது
நீதமோ? - பிடி - வாதமோ?

௫. பார தத்திடை யன்பு செலுத்துதல்
பாபமோ? - மனஸ் - தாபமோ?
கூறு மெங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ - இதிற்—செற்றமோ?

௬. ஒற்றுமை வழி யொன்றே வழியென்ப
தோர்ந் திட்டோம் - நன்கு - தேர்ந்திட்டோம்
மற்று நீங்கள் செய்யுங் கொடுமைக்கெலா
மலைவுறோம் - சித்தம் - கலைவுறோம்.

௭. சதையைத் துண்டு துண் டாக்கினு முன்னெண்
சாயுமோ?—ஜீவன் - ஓயுமோ - ? [ணம்
இதையத் துள்ளே யிலங்கு மஹாபக்தி
யேகுமோ?—நெஞ்சம் - வேகுமோ?

## லாஜபத்ராய் துதி.

### விருத்தம்.

க. விண்ணகத்தே யிரவிதனை வைத்தாலும்
அதன் கதிர்கள் விரைந்து வந்து
கண்ணகத்தே யொளிதருதல் காண்கிலமோ?
நினையவர் கனன்றிந் நாட்டு
மண்ணகத்தே வாழாது புறஞ்செய்தும்
யாங்களெலா மறக்கொ ணாதெம
தெண்ணகத்தே, லாஜபதி, யிடையின்றி
நீ வளர்தற் கென்செய் வாரே?

உ. ஒரு மனிதன் றனைப்பற்றிப் பல நாடு
கடத்தியவற் கூறு செய்தல்
அருமையிலை, எளிதினவர் புரிந்திட்டா
ரென்றிடினும் அந்த மேலோன்
பெருமையைநன் கறிந்தவனைத் தெய்வமென
நெஞ்சினுளே பெட்பிற் பேணி
வருமனித ரெண்ணற்றா ரிவரையெலாம்
ஓட்டியெவர் வாழ்வதிங்கே?

ந. பேரன்பு செய்தாரில் யாவரே
பெருந்துயரம் பிழைத்து நின்றார்?
ஆரன்பு நாரணன்பா லிரணியன்சேய்
செய்ததினா லவனுக் குற்ற
கோரங்கள் சொலத்தகுமோ? பாரதநாட்
டிற் பத்தி குலவி வாழும்
வீரங்கொள் மனமுடையார் கொடுந்துயரம்
பலவடைதல் வியத்தற் கொன்றோ?

# லாஜ்பத்ராய் பிரலாபம்

## கண்ணிகள்.

௧. நாடிழந்து மக்களையு நல்லாரை யும்பிரிந்து
வீடிழந்திங் குற்றேன் விதியினையென்
சொல்கேனே.

௨. வேதமுனி போன்றோர் விருத்தரா மெந்தையிரு
பாதமலர் கண்டு பரவப் பெறுவேனோ?

௩. ஆசைக்குமா னருச்சுனனைப் போல்வான்றன்
மாசற்ற சோதி வதனமினிக் காண்பேனோ?

௪. அன்றிலைப்போன் றென்னை யரைக்கணமேனும்
பிரிந்தால்
குன்றிமனஞ் சோர்வாளிக் கோலம்
பொறுப்பாளோ?

௫. வீடு முறவும் வெறுத்தாலு மென்னருமை
நாடு பிரிந்த நலிவினுக்கென் செய்கேனே?

௬. ஆதிமறை தோன்றியநல் லாரியநா டெந்நாளு
நீதிமறை யின்றி நிலைத்த திருநாடு;

௭. சிந்துவெனுந் தெய்வத் திருநதியு மற்றதிற்சேர்
ஐந்துமணி யாறும் அளிக்கும் புன்னாடு;

௮. ஐம்புலனை வென்ற அறவோர்க்கு மாற்றலர்தம்
வெம்புலனை வென்ற எண்ணில் வீரருக்குந்
தாய்நாடு.

௯. நல்லறத்தை நாட்டுதற்கு நம்பெருமான் கௌரவராம்
புல்லரைச் செற்றழித்த புனிதப் பெருநாடு;

௧௦. கன்னனுந் திண்டோட் களவீரன் பார்த்தனொரு
வின்னாணொலி கேட்ட மேன்மைத் திருநாடு.

௧௧. கன்ன னிருந்த கருணைநிலம் தர்மனெனு
மன்ன னறங்கள் வளர்த்த புகழ்நாடு.

௧௨. ஆரியர்தந் தர்மநிலை யாதரிப்பான் வீட்டுமனார்
நாரியர்தங் காதல் துறந்திருந்த நன்னாடு.

௧௩. வீமன் வளர்ந்த விறனாடு வில்லசுவத்
தாமனிருந்து சமர்புரிந்த வீரநிலம்.

௧௪. சீக்கரெனு மெங்கள் விறற் சிங்கங்கள் வாழ்தருநல்
லாக்கமுயர் குன்ற மடர்ந்திருக்கும் பொன்னாடு.

௧௫. ஆரியர் பாழாகா தருமறையின் உண்மைதந்த
சீரியர் மெய்ஞ்ஞான தயாநந்தர் திருநாடு.

௧௬. என்னருமைப் பாஞ்சால மென்றேனுங் காண்பேனோ?
பன்னரிய துன்பம் படர்ந்திங்கே மாய்வேனோ!

௧௭. ஏதெல்லாம் பாரதத்தே இந்நாள் நடப்பனவோ?
ஏதெல்லாம் யானறியா தென்மனிதர் பட்டனரோ.

சு. ஸீ. சு.

கஅ. என்னை நினைந்து மிரங்குவரோ? அல்லாது
பின்னைத் துயர்களிலென் பேரு
மறந்திட்டாரோ?

கக. தொண்டுபட்டு வாடுமென்றன் தூய
பெருநாட்டிற்
கொண்டுவிட்டங் கென்னையுடன் கொன்றாலு
மின்புறுவேன்.

உ0. எத்தனை ஜன்மங்கள் இருட்சிறையி லிட்டாலும்
தத்துபுனற் பாஞ்சாலந் தன்னில் வைத்தால்
வாடுகிலேன்.

# தாதாபாய் நவுரோஜி.

## கவிகள்.

க. முன்னாளி லிராமபிரான் கோதமனா
றியபுதல்வர் முறையினின்று
பன்னாடு முடிவணங்கத் தலைமைநிறு
தியவெமது பாரதகண்ட
மின்னாளிங் கிந்நாளின் முதியோளாய்ப்
பிறரெள்ள வீழ்ந்தகாலை
யன்னாளைத் துயர்தவிர்ப்பான் முயல்வர்சில
மக்களவ ரடிகள் சூழ்வாம்.

௬. அவ்வறிஞ ரனைவோர்க்கு முதல்வனு
மைந்தன்ற னன்னை கண்ணீ
ரெவ்வகையி னுந்துடைப்பே னின்றேலென்
னுயிர்துடைப்பே னென்னப் போந்தி
யௌவனநாள் முதற்கொடுதா னெண்
பதின்மேல் வயதுற்ற வின்றுகாறும்
செவ்வியுறத் தனதுடலம் பொருளாவி
யானுழைப்புத் தீர்தலில்லான்.

௭. கல்வியைப்போ லறிவுமறி வினைப்போலக்
கருணையுமக் கருணைபோலப்
பல்விதவூக் கங்கள்செயுந் திறனு மொரு
நிகரின்றிப் படைத்த வீரன்
வில்விறலாற் போர்செய்தல் பயனிலதா
மெனவதனை வெறுத்தே யுண்மைச்
சொல்விறலாற் போர்செய்வோன் பிறர்க்கன்றித்
தனக்குழையாத் துறவி யாவோன்.

௮. மாதர்வாய் விட்டலற வதைச்சிறிது
மதியாதே வாளுள் போக்குந்
தீதாவா ரினுமவர்க் கினியசொலி
நன்குணர்த்துஞ் செவ்வி யாளன்
வேதாவா யினுமவனுக் கஞ்சாமே யுண்மை
நெறி விரிப்போ னெங்கள்
தாதாவாய் விளங்குநற் றூதாபாய்
நவுரோஜி சரணம் வாழ்க!

௫. எண்பஃ தாண்டிருந்தவவ னினிப்பல்லாண்
டிருந்தெம்மை யினிதுகாக்க!
பண்பல்ல நமக்கிழைப்போ ரறிவுதிருந்துக!
வெமது பாரதநாட்டுப்
பெண்பல்லார் வயிற்றினுமந் நவுரோஜி
போற் புதல்வர் பிறந்து வாழ்க!
விண்புலினு மீன்களென வவனன் றோரெவ்
வயினு மிகுக மன்னோ.

## பூபேந்திர விஜயம்.

### விருத்தம்.

௧. பாபேந்திரியஞ் செறுத்த எங்கள்
விவேகானந்தப் பரமன் ஞான
ரூபேந்திரன் றனக்குப் பின்வந்தோன்
விண்ணவர்த முலகை யாள்பர
தாபேந்திரன் கோபமுறினு மதற்
கஞ்சியறந் தவிர்கிலாதான்
பூபேந்திரப் பெயரோன் பாரதநாட்டிற்
கடிமை பூண்டு வாழ்வோன்—

௨. வீழ்த்தல் பெறத் தருமமெலாம், மறமனைத்துங்
கிளைத்துவர மேலோர் தம்மை
தாழ்த்ததமர் முன்னேங்க நிலைபுரண்டு
பாதகமே ததும்பி நிற்கும்

பாழ்த்த கலியுகஞ் சென்று மற்றொருகம்
அருகில்வரும் பான்மை தோன்றக்
காழ்த்தமன வீரமுடன் யுகாந்தரத்தி னிலை
யினிது காட்டி நின்றான்—

௩. மண்ணாளு மன்னரவன் றனைச்சிறைசெய்
திட்டாலு மாந்தரெல்லாங்
கண்ணாகக் கருதியவன் புகழோதி வாழ்த்தி
மனங் களிக்கின்றாரால்
எண்ணாது நற்பொருளைத் தீதென்பார்
சிலருலகி லிருப்ப ரன்றே?
விண்ணாரும் பரிதியொளி வெறுத்தொருபுள்
இருணனிது விரும்பல் போன்றே.

௪. இன்னாத பிறர்க்கெண்ணான் பாரத நாட்டிற்
கிரங்கி யிதய நைவான்
ஒன்றாரென் றெவருமிலான் உலகனைத்து
மோருயிரென் றுணர்ந்த ஞானி
அன்னானைச் சிறைப்படுத்தார் மேலோர்தம்
பெருமையெது மறிகிலாதார்,
முன்னாளிற் றுன்பின்றி யின்பம்வாராதெனப்
பெரியார் மொழிந்தா ரன்றே ?

## அபேதாநந்த ஸ்வாமிகளின் மீது ஸ்தோத்திரக் கவிகள்.

சுருதியு மரிய உபநிட தத்தின்
தொகுதியும் பழுதற வுணர்ந்தோன்
கருதிடற் கரிய பிரம நன்னிலையைக்
கண்டுபே ரொளியிடைக் களித்தோன்
அரிதினிற் காணுமியல் பொடு புவியி
னெப்புறத் திருந்து நண்பகலிற்
பரிதியி னொளியும் சென்றிடா நாட்டில்
மெய்யொளி பரப்பிடச் சென்றோன்.

வேறு.

ஒன்றே மெய்ப்பொருளாகு முயிர்களெலா
மதன் வடிவா மோருங்காலை
என்றேவ னுன்றேவ னென்றுலகர்
பகைப்ப தெலா மிழிவாமென்று
நன்றேயிங் கறிவுறுத்தும் பரமகுரு
ஞானமெனும் பயிரை நச்சித்
தின்றேபா ழாக்கிடுமைம் புலன்களெனும்
விலங்கினத்தைச் செகுத்த வீரன்

வேறு.

வானந்தம் புகழ்மேவி விளங்கிய
மாசிலாதி குரவனச் சங்கரன்
ஞானந்தங்கு மிந்நாட்டினைப் பின்னரு
நண்ணினனெனத் தேசுறு மவ்விவே

கானந்தப் பெருஞ்சோதி மறைந்தபின்
அவனியுழைத்த பெருந்தொழி லாற்றியே
ஊனந்தங்கிய மானிடர் தீதெலா
மொழிக்குமாறு பிறந்த பெருந்தவன்.

வேறு.

தூய அபேத காநந்த னெனும்பெயர் கொண்
டொளிர்தரு மிச்சுத்த ஞானி
நேயமுட னிந்நகரிற் றிருப்பாதரு
சாத்தியரு ணெஞ்சிற் கொண்டு
மாயமெலா நீங்கியினி தெம்மவர் நன்
னெறிசாரும் வண்ணம் ஞானத்
தோயநனி பொழிந்திடுமோர் முகில்போன்றான்
இவன் பதங்கள் துதிக்கின்றாமே.

(ஓவியமணி)—ஸ்ரீ ரவிவர்மா.

க. சந்திர னொளியை யீசன்
சமைத்தது பருக வென்றே
வந்திடு சாதகப்புள்
வருத்தனன் அமுதுண்டாக்கிப்
பந்தியிற் பருக வென்றே
படைத்தன னமரர் தம்மை
இந்திரன் மாண்புக் கென்ன
இயற்றினன் வெளிய யானை.

௨. மலரினில் நீல வானில்
மாதரார் முகத்தில் எல்லாம்
இலகிய அழகை யீசன்
இயற்றினன் சீர்த்தி யிந்த
வுலகினி லெங்கும் வீசி
யோங்கிய இரவி வர்மன்
அலகிலா அறிவுக் கண்ணு
லனைத்தையு நுகரு மாறே.

௩. மன்னர் மாளிகையி லேழை
மக்களின் குடிலி லெல்லாம்
உன்னருந் தேசுவீசி
யுளத்தினைக் களிக்கச் செய்வான்
நன்னரோ வியங்கள் தீட்டி
நல்கிய பெருமான இந்நாட்
பொன்னணி யுலகு சென்றான்
புவிப்புகழ் போது மென்பான்.

௪. அரம்பை யூர்வசி போலுள்ள
அமர மெல்லியலார் செவ்வி
திரம்பட வகுத்த வெம்மான்!
செய்தொழி லொப்பு நோக்க
விரும்பியே கொல்லா மின்று
விண்ணுல கடைந்து விட்டாய்?
அரம்பையர் நின்கைச் செய்கைக்
சழிதலங் கறிவை திண்ணம்.

ரு. காலவான் போக்கி லென்றுங்
கழிகிலாப் பெருமை கொண்ட
கோலவான் றொழில்கள் செய்து
குலவிய பெரியோர் தாமும்
சீலவாழ் வகற்றி யோர்நாட்
செத்திட லுறுதி யாயின்
ஞால வாழ்வினது மாய
நவின்றிடற் கரிய தன்றோ ?

## மா ஜி னி.

(இந்த இத்தாலிதேசத்து தேசாபிமானி தம்மால் ஸ்தாபிக்கப்பட்ட 'யௌவன இத்தாலி'' என்ற சங்கத்திலே செய்து கொண்ட பிரதிக்ஞை.)

க. பேரருட்கடவுள் திருவடியாணை,
பிறப்பளித் தெமையெலாம் புரக்கும்
தாரணி விளக்காம் என்னரு நாட்டின்
தவப்பெய ரதன் மிசை யாணை
பாரவெந்துயர்கள் தாய்த் திரு நாட்டின்
பணிக்கெனப் பல்விதத் துழன்ற
வீரர், நந்நாடு வாழ்கென வீழ்ந்த
விழுமியோர் திருப்பெயராணை.

௨. ஈசனிங் கெனக்குமென் னுடன் பிறந்தோர்
யாவர்க்கு மியற்கையி னளித்த
தேசமின் புறுவான் எனக்கவன் பணித்த
சீருய ரறங்களி னாணை.
மாசறு மென்னற் றாயினைப் பயந்தென்
வழிக்கெலாம் உறையுளாம் நாட்டின்
ஆசையிங் கெவர்க்கு மியற்கையா மன்றோ ?
அத்தகை யன்பின்மீ தாணை.

௩. தீயன புரிதல், முறைதவி ருடைமை,
செம்மைதீர் அரசியல், அநீதி
ஆயவற் றென்னெஞ் சியற்கையி னெய்தும்
அருப்பகை யதன் மிசை யாணை.
தேயமொன் றற்றேன், நற்குடிக் குரிய
வுரிமைகள் சிறிதெனு மில்லேன்,
தூயசீ ருடைத்தாம் சுதந்திரத் துவசம்
துளங்கிலா நாட்டிடைப் பிறந்தேன.

௪. மற்றை நாட்டவர் முன் னின்றிடும் போழ்து
மண்டுமென் வெட்கத்தி னாணை.
முற்றியவீடு பெறற்கெனப் படைப்புற்
றச் செயல் முடித்திட வலிமை
அற்றதா மறுகும் என்னுயிர்க் கதனி
லார்தபே ராவலி னாணை.
நற்றவம் புரியப் பிறந்ததாயினு மிந்
நலனறு மடிமையின் குணத்தால்

ரு. வலியிழந் திருக்கு மெம்முயிர்க் கதன்கண்
வளர்ந்திடும் ஆசையீ தாணை!
மலிவுறு சிறப்பின் எம்முடை முன்னோர்
மாண்புசன் நினைவின் மீதாணை!
மெலிவுட னிந்நாள் யாங்கள் வீழ்ந்திருக்கும்
வீழ்ச்சியி னுணர்ச்சியீ தாணை.
பொலிவுறு புதல்வர் தூக்கினி லிறந்தும்
புன்சிறைக் களத்திடை யழிந்தும்;

சு. வேற்று நாடுகளில் அவர் துரத்துண்டு
மெய்குலைந் திறந்துமே படுதல்
ஆற்ற கிலராய் எம்மரு நாட்டின்
அன்னைமா ரழுங்கணீ ராணை
மாற்றலரெங்கள் கோடியர்க் கிழைக்கும்
வருக்கொணாத் துயர்களி னாணை
ஏற்ற இவ்வாணை யனைத்துமேற் கொண்டே
யான் செயுஞ் சபதங்கள் இவையே.

எ. கடவுளிந் நாட்டிற் கீந்ததோர் புனிதக்
கட்டளை தன்னினும், அதனைத்
திடனுற நிறுவ முயலுதல் மற்றித்
தேசத்தே பிறந்தவர்க்கெல்லாம்
உடனுறு கடமை யாகுமென்பதினும்
ஊன்றிய நம்புதல் கொண்டும்;
தடநில மிசையோர் சாதியை இறைவன்
சமைகெனப் பணிப்பனேல் அதுதான்,

௮. சமைதலுக் குரிய திறமையும் அதற்குத்
தந்துள னென்பதை யறிந்தும்;
அமையுமத் திறமை ஜனங்களைச்சாரும்,
அன்னவர் தமக்கெனத் தாமே
தமையல தெவர்கள் துணையுமில்லாது
தம்மருந் திறமையைச் செலுத்தல்
சுமையெனப் பொறுப்பின் செயத்தினுக்கதுவே
சூழ்ச்சியா மென்பதை யறிந்தும்;

௯. கருமமுஞ் சொந்த நலத்தினைச் சிறிதும்
கருதிடா தளித்தலுந் தானே
தருமமா மென்றும், ஒற்றுமையோடு
தளர்விலாச் சிந்தனை கொளலே
பெருமைகொள் வலியாமென்றுமே மனத்திற்
பெயர்ந்திடா உறுதிமேற்கொண்டுமே;
அருமைசால் சபத மிவைபுரிகின்றேன்
ஆணைக ளனைத்து முற்கொண்டே

௧௦. என்னுடனொத்த தருமத்தை யேற்றார்
இயைந்த இவ் "வாலிபர் சபை"க்கே
தன்னுடல், பொருளும், ஆவியுமெல்லாம்
தத்தமா வழங்கினேன். எங்கள்
பொன்னுயர் நாட்டை யொற்றுமை யுடைத்
சுதந்திரம் பூண்டதுவாகி [தாய்ச்
இன்னுமொர் நாட்டின் சார்பில தாகி
குடியர சியன்றதாயிலக.

கக. இவருடன் யானு மிணங்கியே யென்று
மிதுவலாற் பிறதொழி லினைத்
தவறறு முயற்சி செய்திடக் கடவேன்.
சந்ததஞ் சொல்லினால், எழுத்தால்
அவமறு செய்கை யதனினால், இயலும்
அளவெலாம், எம்மவரிந்த
நவமுறு சபையி னொரு பெருங் கருத்தை
நன்கினின் அறிந்திடப் புரிவேன்.

கஉ. உயரு மிந்நோக்க நிறைவுற "இணக்கம்"
ஒன்றுதான் மார்க்கமென்பதுவும்,
செயம்நிலையாகச் செய்திடற் கறமே
சிறந்ததோர் மார்க்க மென்பதும்
பெயர்வற எங்கள் நாட்டினர் மனதிற்
பேணுமா றியற்றிடக் கடவேன்.
அயலொரு சபையி லின்றதோ றென்றும்
அமைந்திடா திருந்திடக் கடவேன்.

கங. எங்கள் நாட் டொருமை யென்றுடுங் குறிக்கும்
இச்சபைத் தலைவராயிருப்போர்
தங்களா க்கினைக ளனைத் தையும் பணிந்து
தலைக்கொளற் கென்றுமே கடவேன்.
இங்கெனதாவி மாய்ந்திடுமேனு
மிவர்பணி வெளியிடா திருப்பேன்.
துங்கமார் செயலாற் போதனையாலும்
இயன்றிடுந் துணையிவர்க் களிப்பேன்

கச. இன்றுமென்நாளு மிவை செயத்தவறேன்
மெய்யிது. மெய்யிது. இவற்றை
என்றுமே தவறி யிழைப்பனே லென்னை
ஈசனார் நாசமே புரிக,
அன்றியுமக்கள் வெறுத்தெனை யிகழ்க
அசத்தியப் பாதகஞ் சூழ்க
நின்ற தீ யெழுவாய் நரகத்தின் வீழ்ந்து
நித்தம் யானுழலுக மன்னோ!

கரு. பேசி நின்ற பெரும்பிர திக்கினை
மாசிலாது நிறைவுறும் வண்ணமே,
ஆசி கூறி யருளுக, ஏழையேற்
கீச னென்று மிதயத் திலகியே.

## ஆரியதரிசனம்—ஓர் கனவு.

ஸ்ரீராகம்—ஆதிதாளம்.

கனவென்ன கனவே—என்றன்
கண்துயி லாது நனவினிலே யுற்ற. (கன)

க. கானகங் கண்டேன்—அடர்
கானகங் கண்டேன்—உச்சி
வானகத்தே வட்டமதியொளி கண்டேன். (கன)

உ. பொற்றிருக்குன்றம்—அங்கொர்
பொற்றிருக்குன்றம்—அதைச்
சுற்றி யிருக்கும் சுனைகளும் பொய்கையும். (கன)

## புத்ததரிசனம்.

௩. குன்றத்தின் மீதே—அந்தக்
குன்றத்தின் மீதே—தனி
நின்ற தொரால நெடுமரங்கண்டேன். (கண)

௪. பொன்மரத் தின்கீழ்—அந்தப்
பொன்மரத் தின்கீழ்—வெறுஞ்
சின்மய மானதோர் தேவ னிருந்தனன். (கண)

௫. புத்த பகவன்—எங்கள்
புத்த பகவன்—அவன்
சுத்த மெய்ஞ்ஞானச் சுடர்முகங் கண்டேன். (க)

௬. காந்தியைப் பார்த்தேன்—அவன்
காந்தியைப் பார்த்தேன்—உப
சாந்தியில் மூழ்கித் ததும்பிக் குளித்தனன். (க)

௭. ஈதுநல் விந்தை!—என்னே!
ஈதுநல் விந்தை—புத்தன்
சோதிமறைந்திருள் துன்னிடக் கண்டனன். (க)

௮. பாய்ந்ததங் கொளியே—பின்னும்
பாய்ந்ததங் கொளியே—இருள்
தேய்ந்த தென்மேனி சிலிர்த்திடக்
கண்டேன். (கண)

# கிருஷ்ணார்ஜுன தரிசனம்.

கூ. குன்றத்தின் மீதே—அந்தக்
குன்றத்தின் மீதே—தனி
நின்ற பொற்றேரும் பரிகளும் கண்டேன். (கன)

க0. தேரின் முன் பாகன்—மணித்
தேரின் முன் பாகன்—அவன்
சீரினைக் கண்டு திகைத்துநின் றேனிந்தக். (கன)

கக. ஓமென்ற மொழியும்—அவன்
ஓமென்ற மொழியும்—நீலக்
காமன்ற னுருவுமவ் வீமன்றன் திறலும். (கன)

கஉ. அருள் பொங்கும் விழியும்—தெய்வ
அருள் பொங்கும் விழியும்—காணில்
இருள் பொங்கு நெஞ்சினர் வெருள்
பொங்குந் திகிரியும். (கன)

கங. கண்ணனைக் கண்டேன்—எங்கள்
கண்ணனைக் கண்டேன்—மணி
வண்ணனை ஞான மலையினைக் கண்டேன். (கன)

கச. சேனைகள் தோன்றும்—வெள்ளச்
சேனைகள் தோன்றும்—பரி
யானையுந் தேரும் அளவில தோன்றும். (கன)

கரு. கண்ணனற் றேரில்—நீலக்
கண்ணனற் றேரில்—மிக
எண்ணயர்ந் தானொ ரிளைஞனைக் கண்டேன். (கன)

கசு. விசையன் கொலிவனே—விறல்
விசையன் கொலிவனே—நனி
இசையு நன்கிசையுமிந் கிவனுக்
கந்நாமம். (விசை)

கஎ. வீரிய வடிகம் !—என்ன
வீரிய வடிவம் !—இந்த
ஆரிய னெஞ்ச மயர்ந்ததென் விந்தை! (விசை)

கஅ. பெற்ற தென் பேறே—செவி
பெற்ற தென் பேறே—அந்தக்
கொற்றவன் சொற்கள் செவியுறக் கொண்
டேன். (கன)

க௯. “வெற்றியை வேண்டேன்—ஐய
வெற்றியை வேண்டேன்—உயிர்
அற்றிடு மேனு மவர்தமைத் தீண்டேன்(பெற்ற)

உ0. சுற்றங் கொல்வேனோ ?—என்றன்
சுற்றங் கொல்வேனோ ?—கிளை
அற்ற பின்செய்யு மரசுமொ ரரசே ?”(பெற்ற)

உக. மிஞ்சிய அருளால்—மித
மிஞ்சிய அருளால்—அந்த
வெஞ்சிலை வீரன் பலசொல் விரித்தான். (கன)

உஉ. இம்மொழி கேட்டான்—கண்ணன்
இம்மொழி கேட்டான்—ஐயன்
செம்மலர் வதனத்திற் சிறுநகை பூத்தான்.(கன)

௨௩. வில்லினை யெடடா—கையில்
வில்லினை யெடடா—அந்தப்
புல்லியர் கூட்டத்தை பூழ்தி செய்திடடா.
(வில்லினை)

௨௪. வாடி நில்லாதே—மனம்
வாடி நில்லாதே—வெறும்
பேடியர் ஞானப் பிதற்றல் சொல்லாதே.
(வில்லினை)

௨௫. ஒன்றுள துண்மை—என்றும்
ஒன்றுள துண்மை—அதைக்
கொன்றிடொணாது குறைத்த லொண்ணாது.
(வில்லினை)

௨௬. துன்பமு மில்லை—கொடுந்
துன்பமு மில்லை—அதில்
இன்பமுமில்லை பிறப்பிறப்பில்லை.
(வில்லினை)

௨௭ படைகளுந் தீண்டா—அதை
படைகளுந் தீண்டா—அனல்
சுடவு மொண்ணாது புனல் நனையாது.
(வில்லினை)

௨௮. செய்தலுன் கடனே—அறஞ்
செய்தலுன் கடனே—அதில்
எய்துறும் விளைவினி லெண்ணம் வைக்காதே.
(வில்லினை)

# மாயையைப் பழித்தல்

---

காம்போதி—ராகம்—ஆதிதாளம்.

௧. உண்மை யறிந்தவ ருன்னைக் கணிப்பாரோ
மாயையே:—மனத்
திண்மை யுள்ளாரைநீ செய்வது
மொன்றுண்டோ—மாயையே.

௨. எத்தனை கோடி படைகொண்டு வந்தாலும்
மாயையே—நீ
சித்தத் தெளிவெனுந் தீயின்முன்
னிற்பாயோ—மாயையே.

௩. என்னைக் கெடுப்பதற் கெண்ணமுற்றுப்
கெட்ட மாயையே—நான்
உன்னைக்கெடுப்ப துறுதியென்
றேயுணர் மாயையே.

௪. சாகத்துணியிற் சமுத்திர மெம்மட்டு
மாயையே—இந்தத்—
தேகம்பொய் யென்றுணர் தீரரை யென்
செய்வாய்—மாயையே.

ரு. இருமை யழிந்தபின் எங்கிருப் பாயற்ப
மாயையே—தெளிந்
தொருமை கண்டார் முன்ன மோடாது
நிற்பையோ—மாயையே.

சு. நீதரு மின்பத்தை நேரென்று கொள்வனோ
மாயையே—சிங்கம்
நாய்தரக் கொள்ளுமோ நல்லர
சாட்சியை—மாயையே.

எ. என்னிச்சை கொண்டுனை யெற்றி விட
வல்லேன் மாயையே—இனி
உன்னிச்சை கொண்டெனக் கொன்றும்
வராது காண்—மாயையே.

அ. யார்க்கும் குடியல்லேன் யானென்ப
தோர்ந்தனன் மாயையே—உன்றன்
போர்க்கஞ்சு வேனோ பொடியாக்குவே
னுன்னை—மாயையே.

## அச்சமில்லை

(பண்டாரப் பாட்டு)

க. அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம்
எதிர்த்து நின்ற போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
துச்சமாக வெண்ணி நம்மைத்
தூறு செய்த போதினும்
அச்சமில்லை யச்சமில்லை.
அச்சமென்ப தில்லையே.
பிச்சை வாங்கி யுண்ணும் வாழ்க்கை
பெற்றுவிட்ட போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
இச்சை கொண்ட பொருளெலா
மிழந்து விட்ட போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

௨. கச்சணிந்த கொங்கை மாதர்
கண்கள் வீசு போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
நச்சை வாயி லேகொணர்ந்து
நண்பரூட்டு போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
பச்சையூ னியைந்த வேற்
படைகள் வந்த போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

# சங்கு

---

௧. செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திட லாமென்றே யெண்ணி யிருப்பார்
பித்த மனிதரவர் சொலுஞ் சாத்திரம்
பேயுரை யாமென்றிங் கூதேடா சங்கம்.

௨. இத்தரை மீதினி லேயிந்த நாளினில்
இப்பொழு தேமுக்தி சேர்ந்திட நாடிச்
சுத்த அறிவு நிலையிற் களிப்பவர்
தூயவ ராமென்றிங் கூதேடா சங்கம்,

௩. பொய்யுறு மாயையைப் பொய்யெனக் கொண்டு
புலன்களை வெட்டிப் புறத்தி லெறிந்தே
ஐயுற வின்றிக் களித்திருப் பாரவர்
ஆரிய ராமென்றிங் கூதேடா சங்கம்.

௪. மையுறு வாள்விழி யாரையும் பொன்னையு
மண்ணெனக் கொண்டு மயக்கற்றிருந்தாரே
செய்யுறு காரியம் தாமன்றிச் செய்வார்
சித்தர்களாமென்றிங் கூதேடா சங்கம்.

# அறிவே தெய்வம்.

---

## கண்ணிகள்.

௧. ஆயிரந் தெய்வங்க ளுண்டென்று தேடி
யலையு மறிவிலிகாள் பல்
லாயிரம் வேத மறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ!

௨. மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கு மதியிலிகாள் எத
னூடுநின் றோங்கு மறிவொன்றே தெய்வமென்
றோதி யறியீரோ?

௩. சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ? பல
பித்த மதங்களி லேதடு மாறிப்
பெருமை யழிவீரோ?

௪. வேடம்பல் கோடியொ ருண்மைக் குளவென்று
வேதம் புகன்றிடுமே ஆங்கோர்
வேடத்தை நீருண்மையென்றுகொள் வீரென்றவ்
வேத மறியாதே.

௫. நாமம்பல் கோடியொ ருண்மைக் குளவென்று
நான் மறை கூறிடுமே ஆங்கோர்
நாமத்தை நீருண்மை யென்றுகொள் வீரென்றந்
நான்மறை கண்டிலதே.

௬. போந்தநிலைகள் பலவும் பராசக்தி
பூணு நிலையாமே உப
சாந்த நிலையே வேதாந்த நிலையென்று
சான்றவர் கண்டனரே.

௭. கவலை துறந்திங்கு வாழ்வது வீடென்று
காட்டு மறைகளெலாம் நீவிர்
அவலை நினைந்துமி மெல்லுதல் போலிங்
கவங்கள் புரிவீரோ?

௮. உள்ள தனைத்திலு முள்ளொளியாகி
யொளிர்ந்திடு மான்மாவே இங்கு
கொள்ளற் கரிய பிரமமென் றேமறை
கூவுதல் கேளீரோ?

௯. மெள்ளப் பலதெய்வம் கூட்டி வளர்த்து
வெறுங் கதைகள் சேர்த்து பல
கள்ள மதங்கள் பரப்புதற் கோர்மறை
காட்டவும் வல்லீரோ?

௧௦. ஒன்று பிரம முள துண்மை யஃதுன்
உணர் வெனும் வேதமெலாம் என்றும்
ஒன்று பிரமமுள துண்மை யஃதுன்
உணர்வெனக் கொள்வாயே.

# அழகுத் தெய்வம்.

க. மங்கியதோர் நிலவினிலே
கனவிலிது கண்டேன்
வயதுபதி னாறிருக்கும்
இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு
போன்றவொளி முகமும்
புன்னகையின் புதுநிலவும்
போற்றவருந் தோற்றம்
துங்கமணி மின்போலும்
வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப்
பாரென்று சொன்னாள்.
அங்கதனிற் கண்விழித்தேன்
அடடாவோ! அடடா!
அழகெனுந் தெய்வந்தான்
அதுவென்றே யறிந்தேன்.

உ. யோகந்தான் சிறந்ததுவோ
தவம் பெரிதோ என்றேன்
யோகமே தவம் தவமே
யோகமென வுரைத்தாள்.
ஏகமோ பொருளன்றி
இரண்டாமோ என்றேன்.
இரண்டுமாம் ஒன்று மாம்
யாவுமாம் என்றாள்

தாகமறிந் தீயுமருள்
வான்மழைக்கே யுண்டோ?
தாகத்தின் துயர்மழைதா
னறிந்திடுமோ வென்றேன்.
வேகமுடன் அன்பினையே
வெளிப்படுத்தா மழைதான்.
விருப்புடனே பெய்குவதோ
வேறாமோ என்றாள்.

௬. காலத்தின் விதிமதியைக்
கடந்திடுமோ என்றேன்.
காலமே மதியினுக்கோர்
கருவியா மென்றாள்.
ஞாலத்தில் விரும்பியது
நண்ணுமோ என்றேன்.
நாலிலே ஒன்றிரண்டு
பலித்திடலா மென்றாள்.
ஏலத்தில் விடுவதுண்டோ
எண்ணத்தை யென்றேன்.
எண்ணினால் எண்ணியது
நண்ணுங்கா ணென்றாள்.
மூலத்தைச் சொல்லவோ
வேண்டாமோ என்றேன்.
முகத்திலருள் காட்டினாள்
மோகமது தீர்ந்தேன்.

# பக்தி.

(ராகம்—பிலஹரி.)

பல்லவி.

பக்தியினாலே—தெய்வ—பக்தியினாலே.

சரணங்கள்.

௧. பக்தியினாலே—இந்தப்
பாரினி லெய்திடும் மேன்மைகள் கேளடி!
சித்தந் தெளியும்—இங்கு
செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்
வித்தைகள் சேரும்—நல்ல
வீர ருறவு கிடைக்கும் மனத்திடைத்
தத்துவ முண்டாம்—நெஞ்சிற்
சஞ்சல நீங்கி யுறுதி விளங்கிடும்.
(பக்தியினாலே)

௨. காமப் பிசாசைக்—குதிக்
கால் கொண்டடித்து விழுத்திட லாகுமித்
தாமஸப் பேயைக்—கண்டு
தாக்கி மடித்திட லாகுமெந் நேரமும்
தீமையை எண்ணி—அஞ்சுந்
தேம்பற் பிசாசைத் திருகியெறிந்து பொய்ந்
நாமமில்லாதே—உண்மை
நாமத்தினாலிங்கு நன்மை விளைந்திடும்.
(பக்தியினாலே)

௩. ஆசையைக் கொல்வோம்—புலை
யச்சத்தைக்கொன்று பொசுக்கிடுவோங்கெட்ட
பாச மறுப்போம்—இங்கு
பார்வதி சக்தி விளங்குதல் கண்டதை
மோசஞ் செய்யாமல் உண்மை
முற்றிலுங் கண்டு வணங்கி வணங்கியொ
ரீசனைப் போற்றி—இன்பம்
யானையு முண்டு புகழ்கொண்டு வாழ்குவம்.
(பக்தியினாலே)

௪. சோர்வுகள் போகும்—பொய்ச்
சுகத்தினைத் தள்ளிச் சுகம்பெற லாகுநற்
பார்வைகள் தோன்றும்—மிடிப்
பாம்பு கடித்த விஷமகன் றேநல்ல
சேர்வைகள் சேரும்—பல
செல்வங்கள் வந்து மகிழ்ச்சி விளைந்திடும்
தீர்வைகள் தீரும்—பிணி
தீரும் பலபல இன்பங்கள் சேர்ந்திடும்.
(பக்தியினாலே)

௫. கல்வி வளரும்—பல
காரியங் கையுறும் வீரிய மோங்கிடும்
அல்ல லொழியும்—நல்ல
ஆண்மை யுண்டாகும் அறிவு தெளிந்திடும்
சொல்லுவதெல்லாம்—மறைச்
சொல்லினைப் போலப் பயனுள தாகுமெய்
வல்லமை தோன்றும்—தெய்வ
வாழ்க்கையுற்றேயிங்கு வாழ்ந்திட லாமுண்மை.
(பக்தியினாலே)

சு. சோம்ப லழியும்—உடல்
சொன்ன படிக்குநடக்கு முடிசற்றுங்
கூம்புத லின்றி—நல்ல
கோபுரம் போல நிமிர்ந்த நிலைபெறும்
வீம்புகள் போகும்—நல்ல
மேன்மையுண்டாகிப் புயங்கள் பருக்கும்
பாம்பு மடியும்—மெய்ப் [பொய்ப்
பரம் வென்று நல்ல நெறிகளுண்டாய் விடும்.
(பக்தியினாலே)

எ. சந்ததி வாழும்—வெறுஞ்
சஞ்சலங் கெட்டு வலிமைகள் சேர்ந்திடும்
இந்தப் புவிக்கே—இங்கொ
ரீசனுண்டா யினறிக்கையிட் டேனுன்றன்
கந்த மலர்த்தாள்—துணை
காதல், மகவு' வளர்ந்திடவேண்டுமென்
சிந்தை யறிந்தே—அருள்
செய்திட வேண்டுமென் றுலருளெய்திடும்.
(பக்தியினாலே)

## ஜீவன் முக்தி.

### ஜயமுண்டு.

(ராகம்—கமாஸ். தாளம்—ஏ

பல்லவி.

ஜயமுண்டு பயமில்லை மனமே—
ஜன்மத்தில் விடுதலையுண்டு நிலையுண்டு. (ஜய)

அநுபல்லவி.

பயனுண்டு பக்தியினாலே—நெஞ்சிற்
பதிவுற்ற குலசக்தி சரணுண்டு பகையில்லை. (ஜய)

சரணங்கள்.

க. புயமுண்டு குன்றத்தைப் போல—சக்தி
பொற் பதமுண்டதன் மேலே
நியமமெல்லாம் சக்தி நினைவன்றிப் பிறிதில்லை
நெறியுண்டு, குறியுண்டு; குலசக்தி வெறியுண்டு.

உ. மதியுண்டு செல்வங்கள் சேர்க்கும்—தெய்வ
வலியுண்டு தீமையைப் போர்க்கும்
விதியுண்டு தொழிலுக்கு விளைவுண்டு; குறைவில்லை
விசனப் பொய்க் கடலுக்குக் குமரன்கைக்
கணையுண்டு. (ஜய)

ங. அலைபட்ட கடலுக்கு மேலே—சக்தி
அருளென்னுந் தோணியினாலே
தொலைவெட்டிக் கரையுற்றுத் துயரற்று விடுபட்டுத்
துணிவுற்ற குலசக்தி சரணத்தில் முடிதொட்டு.
(ஜய)

# ஜயபேரிகை

## பல்லவி.

ஜய பேரிகை கொட்டடா—கொட்டடா
ஜய பேரிகை கொட்டடா!

## சரணங்கள்.

க. பய மெனும் பேய்தனையடித்தோம்—பொய்மை*ப்
பாம்பை பிளந் துயிரைக் குடித்தோம்.
விய னுல கனைத்தை யுமமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.
(ஜயபேரிகை)

உ. இரவியி னொளி யிடைக் குளித்தோம்—ஒளி
யின் னமுதனை யுண்டு களித்தோம்
காவினில் வந்துயிர்க் குலத்தினை யழிக்கும்
காலன் நடு நடுங்க விழித்தோம்.
(ஜயபேரிகை)

ங. காக்கை, குருவி யெங்கள் ஜாதி—நீள்
கடலு மலையு மெங்கள் கூட்டம்
நோக்குந் திசை யெலாம் நாமன்றி வேறில்லை;
நோக்க, நோக்கக் களி யாட்டம்.
(ஜயபேரிகை)

* துன்ப என்றொரு பாடமும் உண்டு.

# முருகன் பாட்டு.

---

(ராகம்—நாட்டைக்குறிஞ்சி. தாளம்—ஆதி)

பல்லவி.

முருகா—முருகா—முருகா.

சரணங்கள்.

க. வருவாய் மயில் மீ தினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமுந் தசவும் புகழுந்
தவமுந் திறமுந் தனமுங் கனமும். (முருகா)

உ. அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருள்வாய்
முடியா மறையின் முடிவே, யசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே! (முருகா)

௩. சுருதிப் பொருளே வருக.
துணிவே கனலே வருக.
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல். (முருகா)

௪. அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய்! சரணம், சரணம்!
குமரா பிணியா வையுமே சிதறக்
குமுறும் சுடர்வேலவனே சரணம்! (முருகா)

சு. கீ. அ

ரு. அறிவா கியகோ யிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய் அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய். (முருகா)

சு. குருவே பரமன் மகனே
குகையில் வளருங் கனலே
தருவாய் தொழிலும் பயனும் அமரர்
ஸமராதிப னே சரணம் சரணம்! (முருகா)

---

## முருகன் பாட்டு.

க. வீரத் திருவிழிப் பார்வையும் — வெற்றி
வேலு மயிலுமென் முன்னின்றே — எந்த
நேரத் திலுமெனைக் காக்குமே — அன்னை
நீலி பராசக்தி தண்ணருட் — கரை
யோரத்திலே புணை கூடுதே — கந்தன்
ஊக்கத்தை யென்னுள நாடுதே — மலை
வாரத் திலே விளை யாடுவான் — என்றும்
வானவர் துன்பத்தைச் சாடுவான்

உ. வேடர் கனியை விரும்பியே — தவ
வேடம் புனைந்து திரிகுவான் — தமிழ்
நாடு பெரும்புகழ் சேரவே — முனி
நாதனுக் கிம்மொழி கூறுவான் — சூரர்

பாடு விடிந்து மகிழ்ந்திட—இருட்
பார மலைகளைச் சிறுவான்—மறை
யேடு தரித்த முதல்வனும்—குரு
வென்றிட மெய்ப்புக ழேறுவான்.

௬. தேவர் மகளை மணந்திடத்—தெற்குத்
தீவி லசுரனை மாய்த்திட்டான்—மக்கள்
யாவருக் குந்தலை யாயினான்—மறை
யர்த்த முணர்த்துநல் வாயினான்—தமிழ்ப்
பாவலர்க் கின்னருள் செய்குவான்—இந்தப்
பாரி லறமழை பெய்குவான்—நெஞ்சின்
ஆவ லறிந்தருள் கூட்டுவான்—நித்தம்
ஆண்மையும் வீரமு மூட்டுவான்.

௭. தீ வளர்த் தேபழ வேதியர்—நின்றன்
சேவகத் தின்புகழ் காட்டினார்—ஒளி
மீவளருஞ் செம்பொ னாட்டினார்—நின்றன்
மேன்மையி னாலற நாட்டினார்—ஐய
நீ வளருங் குரு வெற்பிலே—வந்து
நின்றுநின் * சேவகம் பாடுவோம்—வர
மீவள் பராசக்தி யன்னைதான்—உங்கள்
இன்னருளை யென்று நாடுவோம்—நின்றன்

(வீரத்திருவிழிப்)

---

* 'நின் சேவகம்' என்பதற்குப் பதிலாக 'திருப்புகழ்' என்றும் ஒரு பாடம்.

## வேலன் பாட்டு.

(ராகம்—புன்னாகவராளி. தாளம்—திஸ்ர ஏகம்)

க. வில்லினை யொத்த புருவம் வளைத்தனை
வேலவா—அங்கோர்
வெற்பு நொறுங்கிப் பொடிப் பொடி
யானது வேலவா
சொல்லினைத் தேனிற் குழைத் துரைப்பாள்
சிறுவள்ளியைக்—கண்டு
சொக்கி மரமென நின்றனை
தென்மலைக் காட்டிலே.
கல்லினை யொத்த வலிய மனங்
கொண்ட பாதகன்—சிங்கன்
கண்ணி ரண்டாயிரங் காக்கைக்
கிரையிட்ட வேலவா!
பல்லினைக் காட்டி வெண் முத்தைப்
பழித்திடும் வள்ளியை—ஒரு
பார்ப்பன கோலந் தரித்துக் கரந்
தொட்ட வேலவா!

உ. வெள்ளலைக் கைகளைக் கொட்டி முழக்குங்
கடலினை—உடல்
வெம்பி மருகிக் கருகிப் புகைய
வெருட்டினாய்.
கிள்ளை மொழிச் சிறு வள்ளி யெனும்
பெயர்ச் செல்வத்தை—என்றும்
கேடற்ற வாழ்வினை யின்ப விளக்கை
மருவினாய்.

கொள்ளை கொண்டே யமராவதி வாழ்வு
குலைத்தவன்—பானு
கோபன் தலை பத்துக் கோடிதுணுக்
குறக் கோபித்தாய்!
துள்ளிக் குலாவித் திரியுஞ் சிறுவன
மானைப்போல்—தினைத்
தோட்டத்திலேயொரு பெண்ணை மணங்
கொண்ட வேலவா.

௫. ஆறுசுடர் முகங் கண்டு விழிக்
கின்பமாகுதே—கையில்
அஞ்ச லெனுங்குறி கண்டு மகிழ்ச்சி
யுண் டாகுதே
நீறுபடக் கொடும்பாவம் பிணி பசி
யாவையும்—இங்கு
நீக்கி யடியரை நித்தமுங் காத்
திடும் வேலவா.
கூறுபடப் பலகோடி யவுணரின்
கூட்டத்தைக்—கண்டு
கொக்கரித் தண்டங் குலுங்க* நகைத்
திடுஞ் சேவலாய்
மாறுபடப் பலவேறு வடிவொடு
தோன்றுவான்—எங்கள்
வைரவி பெற்ற பெருங்கனலை
வடி வேலவா!

---

குறிப்பு:—வேலன் அல்லது சுப்பிரமணியக் கடவுள் என்பது ஆத்மாவில் வீர்ய ரூபமாகிய அக்கி தேவனுக்கு பெயர் இஃது வேதப் பொருள். * சிரித்திடும் கோழியாய் என்றொரு பாடம்.

# முருகக் கடவுள்மீது
## கிளித்தூது.

### பல்லவி.

சொல்ல வல்லா யோ?—கிளியே
சொல்ல நீ வல்லாயோ?

### அனுபல்லவி.

வல்ல வேல் முருகன்—தனை யிங்கு
வந்து கலந்து மகிழ்ந்து குலா வென்று
(சொல்ல)

### சரணங்கள்.

க. தில்லை யம்பலத்தே—நடனம்
செய்யு மமரர் பிரான்—அவன்
செல்வத் திரு மகனை—இங்கு வந்து
சேர்ந்து கலந்து மகிழ்ந்திடுவா யென்று
(சொல்ல)

உ. அல்லிக் குளத் தருகே—ஒருநாள்
அந்திப் பொழுதி னிலே—அங்கொர்
முல்லைச் செடி யதன்பாற் செய்த வினை
முற்று மறந்திடக் கற்றதென்னே யென்று
(சொல்ல)

ந. பாலை வனத் திடையே—தனைக் கைப்
பற்றி நடக்கை யிலே—தன் கை
வேலின் மிசை யாணை—வைத்துச் சொன்ன
விந்தை மொழிகளைச் சிந்தை செய்வாயென்று
(சொல்ல)

# புதிய ருஷியா

## ஜார் சகரவர்த்தியின் வீழ்ச்சி.

க. மாகாளி பராசக்தி உருசிய நாட் டினிற்
கடைக்கண் வைத்தாளங்கே
ஆகாவென் றெழுந்தது பார் யுகப்புரட்சி;
கொடுங்காலன் அலறி வீழ்ந்தான்
வாகான தோள்புடைத்தார் வானமரர்
பேய்களெல்லாம் வருந்திக் கண்ணீர்
போகாமற் கண் புகைந்து மடிந்தன வாம்
வையகத்திர் புதுமை காணீர்!

உ. இரணியன்போ லரசாண்டான் கொடுங்கோலன்
ஜாரெனும்பே ரிசைந்த பாவி
சரணின்றித் தவித்திட்டார். நல்லோரும்
சான்றோரும் தருமந் தன்னைத்
திரணமெனக் கருதிவிட்டான் ஜார்மூடன்
பொய், சூது, தீமையெல்லாம்
அரணியத்திற் பாம்புகள் போல் மலிந்துவளர்ந்
தோங்கினவே யந்த நாட்டில்.

௩. உழுதுவிதைத் தறுப்பாருக் குணவில்லை;
பிணிகள் பல வுண்டு; பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்க
ளுண்டுண்மை சொல்வோர்க் கெல்லாம்
எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு
தூக்குண்டே யிறப்பதுண்டு
முழுதுமொரு பேய்வனமாஞ் சிவேரியிலே
யாவிகெட முடிவதுண்டு.

௪. இம்மென்றால் சிறைவாசம்; ஏனென்றால்
வனவாசம் இவ்வாறங்கே
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
யறமாகித் தீர்ந்தபோதில்
அம்மைமனங் கனிந்திட்டாள்; அடி பரவி
யுண்மை சொலும் அடியார் தம்மை
மும்மையிலுங் காத்திடு நல் விழியாலே
நோக்கினாள்; முடிந்தான் காலன்—

௫. இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்து விட்டான்
ஜாரரசன், இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
யறங்கொன்று சதிகள் செய்த
சுமடர் சடசட வென்று சரிந்திட்டார்
புயற்காற்றுச் சூறை தன்னில்
திமு திமென மரம்விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போலே.

௬. குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்தது பார்; குடியரசென்
றுலகறியக் கூறிவிட்டார்
அடிமைக்குத் தளையில்லை. யாருமிப்போ
தடிமையில்லை அறிக! என்றார்
இடிபட்ட சுவர்போலே கலி விழுந்தான்,
கிருதயுகம் எழுக மாதோ!

## "வெல்ஜியம்" நாட்டிற்கு வாழ்த்து.

௧. அறத்தினால் வீழ்ந்துவிட்டாய், அன்னியன்
வலியனாகி
மறத்தினால் வந்து செய்த வன்மையைப்
பொறுத்தல் செய்யாய்
முறத்தினாற் புலியைகாக்கு மொய்வரைக்
குறப்பெண்போல
திறத்தினால் எளியையாகிச் செய்கையால்
உயர்ந்து நின்றாய்

௨. வண்மையால் வீழ்நது விட்டாய், வாரி
போற் பகைவன் சேனை
திண்மையோ டடர்க்கும்போதில் சிந்தனை
மெலிதலின்றி
ஒண்மை சேர் புகழேமேலென் றுளத்திலே
யுறுதி கொண்டாய்
உண்மைதேர் கோல நாட்டார்
உரிமையைக் காத்து நின்றாய்.

௩. மானத்தால வீழ்ந்து விட்டாய், மதிப்பிலாப்
பகைவர் வேந்தன்
வானத்தாற் பெருமை கொண்ட வலிமைதான்
உடையனேனும்
ஊனத்தால் உள்ளமஞ்சி ஒதுங்கிட
மனமொவ் வாமால்'
ஆனத்தைச் செய்வோ மென்றே அவன்வழி
யெதிர்த்து நின்றாய்.

௪. வீரத்தால் வீழ்ந்துவிட்டாய், மேலவரை
யுருளுங்காலை
ஓரத்தே யொதுங்கித் தன்னை யொளித்திட
மனமொவ் வாமல்
பாரத்தை யெளிதாக்கொண்டாய், பாம்பினைப்
புழுவே யென்றாய்
நேரத்தே பகைவன் றன்னை " நில்" லென
முனைந்து நின்றாய்.

௫. துணிவினால் வீழ்ந்துவிட்டாய்; தொகையிலாப்
படைகளோடும்
பிணிவளர் செருக்கினோடும் பெரும்பகை
யெதிர்த்தபோது,
பணிவது கருத மாட்டாய், பதுங்குதல்
பயனென் றெண்ணாய்.
தணிவதை நினைக்கமாட்டாய் "நில்"
லெனத் தடுத்தல் செய்தாய்.

௬. வெருளுத லறிவென்றெண்ணாய், விபத்தையோர்
பொருட்டாக்கொள்ளாய்
சுருளலை வெள்ளம்போலத் தொகையிலாப்
படைகள் கொண்டே
மருளுறு பகைவர் வேந்தன் வலிமையாற்
புகுந்த வேளை
"உருளுக தலைகள் மானமோங்குக"
ன்றெதிர்த்து நின்றாய்.

எ. யாருக்கே பகை யென்றாலும் யார்மிசை
யிவன் சென்றாலும்
ஊருக்கு ளெல்லை தாண்டி யுத்தர
வெண்ணிடாமல்
போருக்குக் கோலம் பூண்டு புகுந்தவன்
செருக்குக் காட்டை
வேருக்கு மிடமில்லாமல் வெட்டுவே
னென்று நின்றாய்.

அ. வேள்வியில் வீழ்வதெல்லாம் வீரமும்
புகழுமிக்கு
மீள்வதுண் டுலகிற கென்றே வேதங்கள்
விதிக்கு மென்பர்
ஆள்வினை செய்யும் போதில், அறத்திலே
யிளைத்து வீழ்ந்தார்
கேள்வியுண் டுடனே மீளக் கிளர்ச்சிகொண்
டுயிர்த்து வாழ்தல்.

கூ. விளக்கொளி மழுங்கிப் போக வெயிலொளி
தோன்று மட்டும்
களக்கமா ரிருளின் மூழ்குங் கனகமா
ளிகையு முண்டாம்
அளக்கருந் தீதுற்றாலும் அச்சமே
யுளத்துக் கொள்ளார்
துளக்கற வோங்கி நிற்பார் துயருண்டோ
துணிவுள்ளோர்க்கே?

# சொல்.

---

(சொல் ஒன்று வேண்டும். தேவ சக்திகளை நம்முள்ளே நிலை பெறச் செய்யும் சொல் வேண்டும்.)

க. தேவர் வருகவென்று சொல்வதோ?—ஒரு
செம்மைத் தமிழ்மொழியை நாட்டினால்
ஆவலறிந்து வருவீர் கொலோ—உம்மை
யன்றி யொரு புகலு மில்லையே

உ. "ஓம்" என்றுரைத்து விடிற்போதுமோ!-அதில்
உண்மைப் பொருளறிய லாகுமோ?
தீமையனைத்து மிறந்தேகுமோ?—என்றன்
சித்தந் தெளிவு நிலை கூடுமோ?

ந. "உண்மை யொளிர்க" வென்று பாடவோ? அதில்
உங்களருள் பொருந்தக் கூடுமோ?
வண்மை யுடையதொரு சொல்லினால்—உங்கள்
வாழ்வு பெற விரும்பி நிற்கிறோம்.

ச. "தீயை யகத்தினிடை மூட்டுவோம்"-என்று
செப்பு மொழி வலிய தாகுமோ?
ஈயைக் கருடநிலை யேற்றுவீர்—எம்மை
என்றுந் துயர மின்றி வாழ்த்துவீர்.

ரு. வான மழை பொழிதல் போலவே—நித்தம்
வந்து பொழியு மின்பங் கூட்டுவீர்.
கானை யழித்து மனை கட்டுவீர்—துன்பக்
கட்டுச் சிதறி விழ வெட்டுவீர்.

௬. விரியு மறிவு நிலை காட்டுவீர்—அங்கு
வீழுஞ் சிறுமைகளை யோட்டுவீர்—அங்கு
தெரியு மொளிவிழியை நாட்டுவீர்—நல்ல
தீரப் பெருந் தொழிலிற் பூட்டுவீர்.

௭. மின்ன லனைய திற மோங்குமே—உயிர்
வெள்ளங் கரையடங்கிப் பாயுமே
தின்னும் பொருளமுத மாகுமே—இங்கு
செய்கை யதனில் வெற்றி யேறுமே.

௮. தெய்வக் கனல் விளைந்து காக்குமே—நம்மைச்
சேரு மிருளழியத் தாக்குமே.
கை வைத்தது பசும்பொன் னாகுமே—பின்பு
காலன் பய மொழிந்து போகுமே.

௯. "வலிமை, வலிமை" யென்று பாடுவோம்-என்
வாழுஞ் சுடர்க் குலத்தை நாடுவோம்— [றும்
கலியைப்பிளந்திடக்கை யோங்கினோம்-நெஞ்சிற்
கவலை யிருளனைத்து நீங்கினோம்.

௧௦. அமிழ்தம் அமிழ்தம் என்று கூவுவோம்-நித்தம்
அனலைப் பணிந்து மலர் தூவுவோம்—
தமிழிற் பழமறையைப் பாடுவோம்—என்றுந்
தலைமை, பெருமை, புகழ் கூடுவோம்.

# இறைவனை வேண்டுதல்.

(ராகம்—தன்யாசி.)

---

## பல்லவி.

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்-எங்கள்
இறைவா! இறைவா! இறைவா! (ஓ--எத்தனை)

## சரணங்கள்.

க. சித்தினை அசித்துடன் இணைத்தாய்-அங்கு
சேருமைம் பூதத்து வியனுல கமைத்தாய்
அத்தனை யுலகமும் வர்ணக் களஞ்சிய
மாக பலபல நல் லழகுகள் சமைத்தாய்.
(எத்தனை)

உ. முக்தி யென்றொரு நிலை சமைத்தாய் அங்கு
முழுதினையு முணரு முணர் வமைத்தாய்
பக்தி யென்றொரு நிலை வகுத்தாய் எங்கள்
பரமா, பரமா, பரமா, (ஓ--எத்தனை)

## மனைத் தலைவிக்கு வாழ்த்து.

வாழ்க மனைவியாங் கவிதைத் தலைவி!
தினமு மிவ்வுலகில் சிதறியே நிகழும்
பலபல பொருளிலாப் பாழ்படு செய்தியை
வாழ்க்கைப் பாலையில் வளர் பல முட்கள் போல்
பேதை யுலகைப் பேதமைப் படுத்தும்
வெறுங் கதைத்திரளை, வெள்ளறி வுடைய
மாயா சக்தியின் மகளே, மனைக்கண்
வாழ்வினை வகுப்பாய், வருடம் பலவினும்
ஓர்நாட் போலமற் றோர்நாள் தோன்றுது
பலவித வண்ணம் வீட்டிடைப் பரவ
நடத்திடுஞ் சக்தி நிலையமே, நன்மனைத்
தலைவி, ஆங்கத் தனிப்பதர்ச் செய்திகள்
அனைத்தையும் பயனிறை யனுபவ மாக்கி,
உயிரிலாச் செய்திகட் குயிர்மிகக் கொடுத்து
ஒளியிலாச் செய்திக் கொளியருள் புரிந்து
வான சாத்திரம் மகமது வீழ்ச்சி
சின்னப் பையல் சேவகத் திறமை
எனவரு நிகழ்ச்சி யாவே யாயினும்
அனைத்தையு மாங்கே யழகுறச் செய்து
இலௌகிக வாழ்க்கையிற்பொருளினையிணைக்கும்
பேதை மாசக்தியின் பெண்ணே, வாழ்க.
காளியின் குமாரி அறங்காத் திடுக!
வாழ்க! மனையகத் தலைவி வாழ்க!

# ஆத்ம ஜயம்.

---

க. கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள்
கவர்ந்திட மாட்டாவோ? அட
மண்ணில் தெரியுது வானம், அது நம்
வசப்பட லாகா தோ?
எண்ணி யெண்ணிப் பலநாளு முயன்றிங்
கிறுதியிற் சோர்வோ மோ?—அட
விண்ணிலும் மண்ணிலும்கண்ணிலும்எண்ணிலு
மேவு பரா சக்தியே.

உ. என்ன வரங்கள், பெருமைகள், வெற்றிகள்,
எத்தனை மேன்மைகளோ!
தன்னை வென்றாலவை யாவும் பெறுவது
சத்திய மாகுமென்றே
முன்னை முனிவர் உரைத்த மறைப் பொருள்
முற்றுமுணர்ந்த பின்னும்
தன்னை வென்றாளும் திறமை பெறா திங்கு
தாழ்வுற்று நிற்போ மோ?

---

# மூன்று காதல்.

## முதலாவது:—ஸரஸ்வதி காதல்.

(ராகம்—ஸரஸ்வதிமனோஹரி. தாளம்—திஸ்ரஏகம்)

க. பிள்ளைப் பிராயத்திலே—அவள்
பெண்மையைக் கண்டு மயங்கிவிட் டேனங்கு
பள்ளிப்படிப்பினிலே—மதி
பற்றிட வில்லை யெனிலுந் தனிப்பட
வெள்ளை மலரணை மேல்—அவள்
வீணையுங் கையும் விரிந்த முகமலர்
விள்ளும் பொருளமுதும்—கண்டேன்
வெள்ளை மனது பறி கொடுத்தேனம்மா!

உ. ஆடிவருகையிலே—அவள்
அங்கொரு வீதி முனையினிற்பாள்; கையில்
ஏடு தரித்திருப்பாள்—அதில்
இங்கித மாகப்பதம் படிப்பாள், அதை
நாடி யருகணைந்தால்—பல
ஞானங்கள் சொல்லி யினிமை செய்வாள் "இன்று
கூடி மகிழ்வ" மென்றால்—விழிக்
கோணத்திலே நகை காட்டிச் செல்வாளம்மா!

ங. ஆற்றங் கரைதனிலே—தனி
யானதோர் மண்டப மீதினிலே, தென்றற்
காற்றை நுகர்ந் திருந்தேன்—அங்கு
கன்னிக் கவிதை கொணர்ந்து தந்தாள்; அதை

ஏற்று மனமகிழ்ந்தே :—"அடி
என்னோ டிணங்கி மணம் புரிவாய்" என்று
போற்றிய போதினிலே—இளம்
புன்னகை பூத்து மறைந்து விட்டாளம்மா !

௪. சித்தந் தளர்ந்த துண்டோ?—கலைத்
தேவியின் மீது விருப்பம் வளர்ந்தொரு
பித்துப் பிடித்ததுபோல்—பகற்
பேச்சு மிரவிற் கனவு மவளிடை
வைத்த நினைவை யல்லால்—பிற
வாஞ்சை யுண்டோ ? வய தங்ஙனமே யிரு
பத்திரண் டாமளவும்—வெள்ளைப்
பண்மகள் காதலைப்பற்றி நின்றேனம்மா ?

---

## இரண்டாவது:—லக்ஷ்மி காதல்.

(ஸ்ரீராகம்—திஸ்ர ஏகம்.)

௧. இந்த நிலையினிலே—அங்கொர்
இன்பப் பொழிலினிடையினில் வேறொரு
சுந்தரி வந்து நின்றாள்—அவள்
சோதி முகத்தின் அழகினைக் கண்டென்றன்
சிந்தை திறை கொடுத்தேன்—அவள்
செந்திரு வென்று பெயர் சொல்லினாள்; மற்றும்
அந்தத் தினமுதலா நெஞ்சம்
ஆரத் தழுவிட வேண்டுகின் றேனம்மா

சு. புன்னகை செய்திடுவாள்—அற்றைப்
போது முழுதும் மகிழ்ந்திருப்பேன் சற்றென்
முன்னின்று பார்த்திடுவாள்—அந்த
மோகத்திலே தலை சுற்றிடுங் காண், பின்னர்
என்ன பிழைகள் கண்டோ—அவள்
என்னைப் புறக்கணித்தேகிடுவா ளங்கு
சின்னமும் பின்னமுமா—மனஞ்
சிந்தியுளமிக நொந்திடு வேனம்மா!

எ. காட்டு வழிகளிலே—மலைக்
காட்சியிலே புனல் வீழ்ச்சியிலே பல
நாட்டுப் புறங்களிலே—நகர்
நண்ணு சில சுடர்மாடத்திலே, சில
வேட்டுவர் சார்பினிலே—சில
வீரரிடத்திலும், வேந்தரிடத்திலும்
மீட்டு மவள் வருவாள்—கண்ட
விந்தையிலே யின்ப மேற்கொண்டு போமம்மா!

---

## மூன்றாவது:—காளிகாதல்.

(ராகம்—புன்னாகவராளி—திஸ்ர ஏகம்.)

அ. பின்னொ ரிராவினிலே—கரும்
பெண்மை யழகொன்று வந்தது கண்முன்பு
கன்னி வடிவ மென்றே—களி
கண்டு சற்றே யருகிற் சென்று பார்க்கையில்

அன்னை வடிவமடா! இவள்
ஆதி பராசக்தி தேவியடா! இவ
ளின்னருள் வேண்டுமடா! பின்னர்
யாவு முலகில் வசப்பட்டுப் போமடா!

௩. செல்வங்கள் பொங்கி வரும்—நல்ல
தெள்ளறி வெய்தி நலம்பல சார்ந்திடும்;
அல்லும் பகலு மிங்கே—இவை
அத்தனை கோடி பொருளினுள்ளே நின்று
வில்லை யசைப்பவளே—இந்த
வேலை யனைத்தையும் செய்யும் வினைச்சியைத்
தொல்லை தவிர்ப்பவளே—நித்தம்
தோத்திரம் பாடித் தொழுதிடுவோமடா!

---

## கடமை

கடமை புரிவா ரின்புறுவார்
என்னும் பண்டைக் கதை பேணோம்
கடமை யறியோம் தொழிலறியோம்
கட்டென் பதனை வெட்டென் போம்
மடமை, சிறுமை, துன்பம், பொய்
வருத்தம், நோவு, மற்றிவை போல்
கடமை நினைவுந் தொலைத் திங்கு
களியுற் றென்றும் வாழ்குவமே.

## மனப் பெண்.

மனமெனும் பெண்ணே!
வாழி நீ கேளாய்!

ஒன்றையே பற்றி யூச லாடுவாய்
அடுத்ததை நோக்கி யடுத்தடுத் துலவுவாய்
நன்றையே கொள்ளெனிற் சோர்ந்துகை நழுவுவாய்
விட்டுவி டென்றதை விடாதுபோய் விழுவாய்
தொட்டதை மீள மீளவுந் தொடுவாய்
புதியது காணிற் புலனழிந் திடுவாய்
புதியது விரும்புவாய் புதியதை யஞ்சுவாய்
அடிக்கடி மதுவினை யணுகிடும் வண்டுபோல்
பழமையாம் பொருளிற் பரிந்துபோய் வீழ்வாய்
பழமையே யன்றிப் பார்மிசை யேதும்
புதுமை காணோமெனப் பொருமுவாய் சீச்சீ!
பிணத்தினை விரும்புங் காக்கையே போல
அழுகுதல், சாதல், அஞ்சுதல், முதலிய
இழிபொருள் காணில் விரைந்ததி லிசைவாய்.
அங்ஙனே:
என்னிடத் தென்று மாறுத லில்லா ;
அன்புகொண் டிருப்பாய் ஆவி காத்திடுவாய்.
கண்ணினோர் கண்ணாய்க் காதின் காதாய்ப்
புலன் புலப்படுத்தும் புலனா யென்னை
உலக வுருளையில் ஒட்டுற வகுப்பாய்
இன்பெலாந் தருவாய் இன்பத்து மயங்குவாய்

இன்பமே நாடி யெண்ணிலாப் பிழை செய்வாய்,
இன்பங் காத்துத் துன்பமே யுழப்பாய்
இன்பமென் றெண்ணித் துன்பத்து வீழ்வாய்
தன்னை யறியாய் சகத்தெலாந் தொளைப்பாய்
தன்பின் னிற்குந் தனிப்பரம் பொருளைக்
காணவே வருந்துவாய் காணெனிற் காணாய்,
சகத்தின் விதிகளைத் தனித்தனி யறிவாய்
பொதுநிலை யறியாய் பொருளையுங் காணாய்,
(மனமெனும் பெண்ணே! வாழி நீ கேளாய்!)

நின்னொடு வாழு நெறியுநன் கறிந்திடேன்
இத்தனை நாட்போல் இனியுநின் னின்பமே
விரும்புவன், நின்னை மேம்படுத் திடவே
முயற்சிகள் புரிவேன் முத்தியுந் தேடுவேன்,
உன் விழிப் படாமல் என்விழிப் பட்ட
சிவமெனும் பொருளைத் தினமும் போற்றி
உன்றனுக் கின்ப மோங்கிடச் செய்வேன்.

# நெஞ்சொடு சொல்வது.

---

க. இன்னுமொரு முறைசொல்வேன், பேதைநெஞ்சே,
எதற்குமினி யுளைவதிலே பயனொன்றில்லை;
முன்னர்நம திச்சையினாற் பிறந்தோமில்லை;
முதலிறுதி யிடைநமது வசத்திலில்லை;
மன்னுமொரு தெய்வத்தின் சக்தியாலே
வையகத்திற் பொருளெல்லாம் சலித்தல் கண்டாய்
பின்னையொரு கவலையுமிங் கில்லை நாளும்
பிரியாதே விடுதலையைப் பிடித்துக் கொள்வாய்.

உ. நினையாத விளைவெல்லாம் விளைந்துகூடி
நினைத்தபயன் காண்பதவள் செய்கையன்றோ?
மனமார வுண்மையினைப் புரட்டலாமோ?
மஹாசக்தி செய்தநன்றி மறக்கலாமோ?
எனையூரு மாதேவி, வீரர் தேவி
இமையவருந் தொழுந்தேவி, யெல்லைத் தேவி,
மனைவாழ்வு பொருளெல்லாம் வகுக்குந் தேவி
மலரடியே துணையென்று வாழ்த்தாய் நெஞ்சே.

௩. சக்தியென்று புகழ்ந்திடுவோம், முருகனென்போம்
சங்கரனென் றுரைத்திடுவோம், கண்ணனென்போம்
நித்தியமிங் கவள்சரணே நிலையென்றெண்ணி
நினக்குள்ள குறைகளெலாந் தீர்க்கச் சொல்லி,

பக்தியினாற் பெருமையெலாங் கொடுக்கச்சொல்லி,
பசி, பிணிக ளில்லாமற் காக்கச் சொல்லி,
உத்தமநன் னெறிகளிலே சேர்க்கச் சொல்லி,
உலகளந்த நாயகிதா ளுரைப்பாய் நெஞ்சே.

௪. செல்வங்கள் கேட்டால் நீ கொடுக்க வேண்டும்,
சிறுமைகளென் னிடமிருந்தால் விடுக்க வேண்டும்
கல்வியிலே மதியினை நீ தொடுக்க வேண்டும்
கருணையினா லையங்கள் கெடுக்க வேண்டும்
தொல்லை தரு மகப்பேயைத்தொலைக்கவேண்டும்
துணையென்று நின்னருளைத் தொடரச் செய்தே
நல்லவழி சேர்ப்பித்துக் காக்கவேண்டும்
நமோ நம ஓம் சக்தியென நவிலாய் நெஞ்சே.

௫. பாட்டினிலே சொல்லுவது மவள் சொல்லாகும்;
பயனன்றி யுரைப்பாளோ ? பாராய் நெஞ்சே
கேட்டது நீ பெற்றிடுவாய், ஐயமில்லை,
கேடில்லை ; தெய்வமுண்டு வெற்றி யுண்டு ;
நீட்டுமுனக் குறைத்திடுவேன், ஆதி சக்தி
வேதத்தின் முடியினிலே விளங்கும் சக்தி,
நாட்டினிலே சனகனைப்போல் நமையுஞ் செய்தாள்
நமோ நம, ஓம் சக்தியென நவிலாய் நெஞ்சே.

## பகைவனுக்கருள்வாய்.

பகைவனுக் கருள்வாய்—நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய்.

க. புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோமே—நன்னெஞ்சே
(பூமியிற் கண்டோமே)
பகைநடுவினில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான்—நன்னெஞ்சே
(பரமன் வாழ்கின்றான்)
(பகைவனு)

உ. சிப்பியிலே நல்ல முத்து விளைந்திடுஞ்
செய்தி யறியாயோ—நன்னெஞ்சே
குப்பையிலே மலர் கொஞ்சுங் குருக்கத்திக்
கொடி வளராதோ?—நன்னெஞ்சே
(பகைவனு)

ங. உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில்
உள்ள நிறைவாமோ?—நன்னெஞ்சே
தெள்ளிய தேனிலோர் சிறிது நஞ்சையும்
சேர்த்தபின் தேனாமோ?—நன்னெஞ்சே
(பகைவனு)

ச. வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது
வாழ்வுக்கு நேராமோ?—நன்னெஞ்சே
தாழ்வு பிறர்க்கெண்ணத் தானழிவானென்ற
சாத்திரங் கேளாயோ?—நன்னெஞ்சே
(பகைவனு)

௫. போருக்கு வந்தங் கெதிர்த்த கவுரவர்
போல வந்தானுமவன்—நன்னெஞ்சே
நேருக் கருச்சுனன் தேரிற் கசை கொண்டு
நின்றதுங் கண்ணனன்றோ?—நன்னெஞ்சே
(பகைவனு)

௬. தின்ன வரும்புலி தன்னையு மன்போடு
சிந்தையிற் போற்றிடுவாய்—நன்னெஞ்சே
அன்னை பராசக்தி யவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய் — நன்னெஞ்சே.
(பகைவனு)

## மனமே.

௧. கண்ணன்—திருவடி - எண்ணுக மனமே
திண்ணம் அழியா - வண்ணந் தருமே.
௨. தருமே நிதியும் - பெருமை புகழும்
கருமா மேனிப் -பெருமா னிங்கே.
௩. இங்கே யமரர் - சங்கந் தோன்றும்
மங்குந் தீமை - பொங்கும் நலமே
௪. நலமே நாடிற் - புலவீர் பாடீர்
நிலமா மகளின் - தலைவன் புகழே
௫. புகழ்வீர் கண்ணன் - தகைசேரமரர்
தொகையோ டசுரப் - பகைதீர்ப்பதையே
௬. தீர்ப்பான் இருளைப் - பேர்ப்பான் கலியை
ஆர்ப்பாரமரர் - பார்ப்பார் தவமே!
௭. தவறா துணர்வீர் - புவியீர் மாலும்!
சிவனும் வானோர் - எவரும் ஒன்றே
௮. ஒன்றே பலவாய் - நின்றோர் சக்தி
என்றுந் திகழும் - குன்றா வொளியே!

# நிலாவும் வான்மீனும் காற்றும்.

## மனத்தை வாழ்த்துதல்.

க. நிலாவையும் வானத்து மீனையுங் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே;
குலாவு மமுதக் குழம்பைக் குடித்தொரு
கோலவெறி படைத்தோம்
உலாவு மனச்சிறு புள்ளினை யெங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்
பலாவின் கனிச்சுளை வண்டியி லோர் வண்டு
பாடுவதும் வியப்போ?

உ. தாரகை யென்ற மணித்திரள் யாவையுஞ்
சார்ந்திடப்போ மனமே
ஈரச்சுவையதி லூறிவருமதில்
இன்புறுவாய் மனமே
சீரவிருஞ்சுடர் மீனொடு வானத்துத்
திங்களையுஞ் சமைத்தே
ஓரழகாக விழுங்கிடு முள்ளத்தை
யொப்பதோர் செல்வமுண்டோ?

ங. பன்றியைப் போலிங்கு மண்ணிடைச் சேற்றிற்
படுத்துப் புரளாதே
வென்றியை நாடியிவ் வானத்தி லோட
விரும்பி விரைந்திடுமே
முன்றிலி லோடுமோர் வண்டியைப் போலன்று
மூன்றுலகுஞ் சூழ்ந்தே
நன்று திரியும் விமானத்தைப் போலொரு
நல்ல மனம் படைத்தோம்.

ச. தென்னையின் கீற்றுச் சலசல வென்றிடச்
செய்து வரும் காற்றே
உன்னைக்குதிரைகொண் டேறித் திரியுமோ
ருள்ளம் படைத்துவிட்டோம்
சின்னப் பறவையின் மெல்லொலி கொண்டிங்கு
சேர்ந்திடு நற் காற்றே
மின்னல் விளக்கிற்கு வானகங் கொட்டுமிவ்
வெட்டொலி யேன் கொணர்ந்தாய்?

ரு. மண்ணுலகத்து நல்லோசைகள் காற்றெனும்
வானவன் கொண்டுவந் தான்
பண்ணி லிசைத்தவ் வொலிக ளனைத்தையும்
பாடி மகிழ்ந்திடுவோம்.
நண்ணிவரு மணியோசையும் பின்னங்கு
நாய்கள் குலைப்பதுவும்
எண்ணுமுன்னே "யன்னக்காவடிப்பிச்சை'யென்
றேங்கிடுவான் குரலும்.

சு. வீதிக் கதவை யடைப்பதுங் கீழ்த்திசை
விம்மிடுஞ் சங்கொலியும்
வாதுகள் பேசிடு மாந்தர் குரலு
மதலை யழுங்குரலும்
ஏதெது கொண்டு வருகுது காற்றிவை
யெண்ணி லகப்படுமோ?
சீதக் கதிர்மதி மேற்சென்று பாய்ந்தங்கு
தேனுண்ணுவாய் மனமே.

## விடுதலை வெண்பா.

---

க. சக்தி பதமே சரணென்று நாம்புகுந்து
பக்தியினாற் பாடிப் பலநாளும்—முக்திநிலை
காண்போ மதனாற் கவலைப் பிணி தீர்ந்து
பூண்போம் அமரப்பொறி.

உ. பொறிசிந்தும்வெங்கனல்போற்பொய்தீர்ந்துதெய்வ
வெறிகொண்டா லங்கதுவேவீடாம்-நெறிகொண்
வையமெலாந் தெய்வ வலியன்றி வேறில்லை [ட
ஐயமெலாந் தீர்ந்த தறிவு.

ங. அறிவிலே தோன்றில் அவனியிலே தோன்றும்
வறிஞராய்ப் பூமியிலே வாழ்வீர்—குறிகண்டு
செல்வமெலாம் பெற்றுச் சிறப்புறவேசக்திதரும்
வெல்வயிரச் சீர்மிகுந்த வேல்.

ச வேலைப் பணிந்தால் விடுதலையாம்வேன்முருகன்
காலைப் பணிந்தாற் கவலைபோம்—மேலறிவு
தன்னாலே தான்பெற்று சக்திசக்தி சக்தியென்று
சொன்னா லதுவே சுகம்.

ரு. சுகத்தினைநான்வேண்டித்தொழுதேன்எப்போதும்
அகத்தினிலே துன்புற்றழுதேன்-யுகத்தினிலோர்
மாறுதலைக் காட்டி வலிமைநெறி காட்டி
ஆறுதலைத் தந்தாளவள்.

# விடுதலை.

---

(பிலஹரி)

விடுதலை! விடுதலை! விடுதலை!

க. பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை
திறமைகொண்டதீமையற்றதொழில்புரிந்துயாவரும்!
தேர்ந்தகல்வி, ஞான மெய்திவாழ்வ மிந்த நாட்டிலே
(விடுதலை)

உ.ஏழையென்றும் அடிமையென்றும எவனுமில்லை !
ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே
வாழி கல்வி செல்வ மெய்தி மனமகிழ்ந்து கூடியே.
மனிதர்யாரு மொரு நிகர் ஸமானமாக வாழ்வமே.
(விடுதலை)

௩.மாதர் தம்மை யழிவு செய்யு மடமையைக்
கொளுத்துவோம்
வையவாழ்வுதன்னிலெந்த வகையிலும் நமக்குளே;
தாதரென்ற நிலைமைமாறி யாண்களோடு
பெண்களும்

சரிநிகர், ஸமானமாக வாழ்வமிந்த நாட்டிலே.
(விடுதலை)

# விடுதலை.

## சிட்டுக் குருவி.

### பல்லவி.

விட்டு விடுதலை யாகி நிற்பா யிந்தச்
சிட்டுக் குருவியைப் போலே. (விட்டு)

### சரணங்கள்.

௧. எட்டுத் திசையும் பறந்து திரிகுவை
ஏறியக் காற்றில் விரைவொடு நீந்துவை
மட்டுப் படாதெங்கும் கொட்டிக் கிடக்குமிவ்
வானொளி யென்னு மதுவின் சுவையுண்டு (விட்டு)

௨. பெட்டையி னோடின்பம் பேசிக் களிப்புற்று
பீடையி லாததோர் கூடு கட்டிக்கொண்டு
முட்டைதருங் குஞ்சைக் காத்து மகிழ்வெய்
முந்த வுணவு கொடுத்தன்பு செய்திங்கு (விட்டு)

௩. முற்றத்தி லேயுங் கழனி வெளியிலு
முன்கண்ட தானியம் தன்னைக் கொணர்ந்துண்டு
மற்றப் பொழுது கதை சொல்லித் தூங்கிப் பின்
வைகறை யாகுமுன் பாடி விழிப்புற்று (விட்டு)

# விடுதலை.

(ராகம்—நாட்டை)

## பல்லவி.

வேண்டுமடி யெப்போதும் விடுதலை—அம்மா!

க. தூண்டு மின்ப வாடை வீசு துய்ய தேன் கடல்
சூழ நின்ற தீவி லங்கு சோதி வானவர்
ஈண்டுநமது தோழ ராகி எம்மோ டமுத
முண்டு குலவ
நீண்ட மகிழ்ச்சி மூண்டு விளையநினைத்திடுமின்ப
மனைத்தும் உதவ. (வேண்டுமடி)

உ. விருத்திராதி தானவர்க்குமெலிவ தின்றியே
விண்ணு மண்ணும் வந்து பணிய மேன்மை
துன்றியே
பொருத்த முறநல் வேத மோர்ந்து பொய்மை
தீர, மெய்மை நேர
வருத்த மழிய வறுமை யொழிய வையமுழுதும்
வண்மைபொழிய. (வேண்டுமடி)

ந. பண்ணில் இனிய பாடலொடு பாயு மொளி
யெலா
பாரில் எம்மை யுரிமை கொண்டு பற்றி நிற்கவே
நண்ணி யமரர் வெற்றி கூற நமது பெண்கள்
அமரர் கொள்ள
வண்ண மினிய தேவ மகளிர் மருவ நாமும்
உவகைதுள்ள. (வேண்டுமடி)

# விடுதலை

க. இந்தப் புவிதனில் வாழு மரங்களும்
இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும்
அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்
ஔடத மூலிகை பூண்டு புல் யாவையும்
எந்தத் தொழில் செய்து வாழ்வன வோ!

உ. மானுட ருழா விடினும் வித்து நடா விடினும்
வரம்புகட்டாவிடினுமன்றிநீர்பாய்ச்சாவிடினும்
வானுலகு நீர் தருமேல் மண்மீது மரங்கள்
வகை வகையா நெற்கள் புற்கள் மலிந் திருக்கு
மன்றே?

யானெதற்கு மஞ்சுகிலேன், மானுடரே நீவிர்
என் மதத்தைக் கைக் கொண்மின்; பாடுபடல்
வேண்டா;

லைவருத்தாதீர் உணவியற்கைகொடுக்கும்
உங்களுக்குத் தொழிலிங்கே யன்பு செய்தல்
கண்டீர்.

அ. கீ. க௦

# பெண்கள் விடுதலைக் கும்மி.

## காப்பு.

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக்களிப்பொடு நாம் பாடக்
கண்களிலே யொளி போல வுயிரில்
கலந்தொளிர் தெய்வநற் காப்பாமே.

---

௧. கும்மியடி தமிழ் நாடு முழுதுங்
குலுங்கிடக் கை கொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி. (கும்மி)

௨. ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை யென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ மென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மி)

௩. மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினி லெம்மிடங் காட்ட வந்தாரதை
வெட்டி விட்டோ மென்று கும்மியடி. (கும்மி)

ச. நல்ல விலைகொண்டு நாயை விற்பாரந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
கொல்லத்துணிவின்றி நம்மையு மந்நிலை
கூட்டி வைத்தார் பழி கூட்டி விட்டார். (கும்மி)

ரு. கற்பு நிலை யென்று சொல்ல வந்தா ரிரு
கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)

சு. பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங்கே பெண்
இளைப் பில்லை காணென்று கும்மியடி. (கும்மி)

எ. வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி
சாதம் படைக்கவுஞ் செய்திடு வோந் தெய்வச்
சாதி படைக்கவுஞ் செய்திடு வோம். (கும்மி)

அ. காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி. (கும்மி)

# ஸூர்ய தர்சனம்.

(காலை வேளையில், கடற்கரையில், சூரியன் மேகங்களால் மூடப்பட்டிருக்க, முகம் காட்டும்படி அவனை வேண்டிப் பாடியபாடல்கள்.)

(பூபாள—ராகம்.)

க. சுருதி யின்கண் முனிவரும் பின்னே,
தூமொ ழிப்புல வோர்பலர் தாமும்,
பெரிது நின்றன் பெருமை யென் றேத்தும்
பெற்றி கண்டுனை வாழ்த்திட வந்தேன்
பரிதி யேபொருள் யாவிற்கு முதலே
பானுவே பொன் செய் பேரொளித் திரளே
கருதி நின்னை வணங்கிட வந்தேன்
கதிர்கொள் வாண்முகம் காட்டுதி சற்றே.

உ. வேதம் பாடிய சோதியைக் கண்டு
வேள்விப் பாடல்கள் பாடுதற் குற்றேன்
நாத வார்கட லின்னொலி யோடு
நற்ற மிழ்ச்சொ லிசையையுஞ் சேர்ப்பேன்
காத மாயிர மோர்கணத் துள்ளே
கடுகியோடும் கதிரினம் பாடி
ஆத வாநினை வாழ்த்திட வந்தேன்
அணிகொள் வாண்முகம் காட்டுதி சற்றே.

# ஞாயிறு - ஸூர்ய ஸ்துதி.

---

க. கடலின் மீது கதிர்களை வீசிக்
கடுகி வான் மிசை யேறுதி யையா,
படரும் வானொளி யின்பத்தைக் கண்டு
பாட்டுப் பாடி மகிழ்வன புட்கள்—
உடல் பரந்த கடலுந் தனுள்ளே
ஒவ் வொர் நுண் டுளியும் விழியாகச்
சுடரு நின்றன் வடிவையுட் கொண்டே
சுருதி பாடிப் புகழ்கின்ற திங்கே.

உ. என்ற னுள்ளங் கடலினைப்போலே
எந்த நேரமு நின்னடிக் கீழே
நின்று தன் னகத் தொவ்வொ ரணுவும்
நின்றன் ஜோதி நிறைந்தது வாகி
நன்று வாழ்ந்திடச் செய்குவை யையா,
ஞாயிற்றின் கணொளி தருந்தேவா
மன்று வானிடைக் கொண்டுல கெல்லாம்
வாழ நோக்கிடும் வள்ளிய தேவா.

ங. காதல் கொண்டனை போலு மண் மீதே!
கண் பிறழ்வின்றி நோக்கு கின்றாயே—
மாதர்ப் பூமியு நின் மிசைக் காதல்
மண்டினா ளிதி லைய மொன் றில்லை—
சோதி கண்டு முகத்தி லிவட்கே
தோன்று கின்ற புதுநகை யென்னே!
ஆதித் தாய் தந்தை நீவி ருமக்கே.
ஆயிரந்தரம் அஞ்சலி செய்வேன்.

# வெண்ணிலா.

---

(வெண்ணிலா என்பது இங்கு சந்திரனுடைய பிரகாசத்தையன்று, சந்திரனையே குறிப்பது.)

க. எல்லை யில்லாததோர் வானக் கடலிடை
வெண்ணிலாவே—விழிக்
கின்ப மளிப்பதோர் தீவென் றிலகுவை
வெண்ணிலாவே,
சொல்லையும் கண்ணையு நெஞ்சையுஞ் சேர்த்திங்கு
வெண்ணிலாவே—நின்றன்
சோதி மயக்கும் வகையது தானென் சொல்
வெண்ணிலாவே,
நல்ல வொளியின் வகை பல கண்டிலன்
வெண்ணிலாவே—
நனவை மறந்திடச் செய்வது கண்டிலன்
வெண்ணிலாவே,
கொல்லு மமிழ்தை நிகர்த்திடுங் கள்ளொன்று
வெண்ணிலாவே—வந்து
கூடி யிருக்குது நின்னொளி யோடிங்கு
வெண்ணிலாவே.

உ. மாதர் முகத்தை நினக்கிணை கூறுவர்
வெண்ணிலாவே—அஃது
வயதிற் கவலையி னோவிற் கெடுவது
வெண்ணிலாவே,

காத லொருத்தி யிளைய பிராயத்தள்
வெண்ணிலாவே—அந்தக்
காமன்றன் வில்லை யிணைத்த புருவத்தள்
வெண்ணிலாவே,

மீதெழு மன்பின் விளைபுன் னகையினள்
வெண்ணிலாவே—முத்தம்
வேண்டி முன் காட்டு முகத்தி னெழிலிங்கு
வெண்ணிலாவே,

சாத லழித லிலாது நிரந்தரம்
வெண்ணிலாவே—நின்
தண்முகந் தன்னில் விளங்குவ தென்னைகொல்
வெண்ணிலாவே.

௯. நின்னொளி யாகிய பாற்கடல் மீதிங்கு
வெண்ணிலாவே—நன்கு
நீயு மமுது மெழுந்திடல் கண்டனன்
வெண்ணிலாவே,

மன்னும்பொருள்க ளனைத்தினு நிற்பவன்
வெண்ணிலாவே—அந்த
மாயனப் பாற்கடல் மீதுறல் கண்டனன்
வெண்ணிலாவே,

துன்னிய நீல நிறத்தள் பராசக்தி
வெண்ணிலாவே—இங்கு
தோன்று முலகவளே யென்று கூறுவர்
வெண்ணிலாவே,

பின்னிய மேகச் சடைமிசைக் கங்கையும்
வெண்ணிலாவே,
பெட்புற நீயும் விளங்குதல் கண்டனன்
வெண்ணிலாவே.

௪. காதலர் நெஞ்சை வெதுப்புவை
நீயென்பர் வெண்ணிலாவே—நினைக்
காதல் செய்வார் நெஞ்சிற் கின்னமு
தாகுவை—வெண்ணிலாவே.
சீத மணிநெடு வானக் குளத்திடை
வெண்ணிலாவே—நீ
தேசு மிகுந்த வெண்டாமரை போன்றனை
வெண்ணிலாவே,
மோத வருங் கருமேகத் திரளினை
வெண்ணிலாவே,
தீது புரிந்திட வந்திடும் தீயர்க்கும்
வெண்ணிலாவே—நலஞ்
செய்தொளி நல்குவர்மேலவ ராமன்றோ
வெண்ணிலாவே.

௫. மெல்லிய மேகத்திரைக்குள் மறைந்திடும்
வெண்ணிலாவே—உன்றன்
மேனி யழகு மிகைபடக் காணுது
வெண்ணிலாவே,

நல்லியலார் யவனத்தியர் மேனியை
வெண்ணிலாவே—மூடு
நற்றிரை மேனி நயமிகக் காட்டிடும்
வெண்ணிலாவே,

சொல்லிய வார்த்தையில் நாணுற்றனை
போலும் வெண்ணிலாவே—நின்
சோதி வதன முழுது மறைத்தனை
வெண்ணிலாவே,
புல்லியன் செய்த பிழைபொறுத்தே
யருள் வெண்ணிலாவே—இருள்
போகிடச் செய்து நினதெழில்
காட்டுதி வெண்ணிலாவே.

## பரசிவ வெள்ளம்.

. உள்ளும் புறமுமா
யுள்ளதெலாந் தானாகும்
வெள்ளமொன் றுண்டா மதனை
தெய்வ மென்பார் வேதியரே.

உ. காணுவன, நெஞ்சிற்
கருதுவன, உட்கருத்தைப்
பேணுவன, யாவும்
பிறப்பதந்த வெள்ளத்தே.

௩. எல்லை, பிரி வற்றதுவாய்,
யாதெனுமோர் பற்றிலதாய்
இல்லையுள தென்றறிஞ
ரென்றுமைய லெய்துவதாய்.

௪. வெட்டவெளி யாயறிவாய்
வேறு பல சக்திகளைக்
கொட்டுமுகி லாயணுக்கள்
கூட்டிப் பிரிப்பதுவாய்.

௫. தூல வணுக்களாய்ச்
சூக்குமமாய்ச் சூக்குமத்திற்
சாலவுமே நுண்ணியதாய்த்
தன்மையெலாந் தானாகி

௬. தன்மையொன் றிலாததுவாய்த்
தானே யொருபொருளாய்த்
தன்மை பலவுடைத்தாய்த்
தான் பலவாய் நிற்பதுவே.

௭. எங்கு முளான் யாவும் வலான்
யாவுமறி வானெனவே
தங்கு பலமதத்தோர்
சாற்றுவது மிங்கிதையே.

௮. வேண்டுவோர் வேட்கையாய்
வேட்பாராய் வேட்பாருக்
கீண்டுபொரு ளாயதனை
யீட்டுவதாய் நிற்குமிதே.

௯. காண் பார்தங் காட்சியாய்க்
காண்பாராய்க் காண் பொருளாய்
மாண்பார்ந் திருக்கும்
வகுத்துரைக்க வொண்ணாதே.

௧௦. எல்லாந் தானாகி
யிருந்திடினு மிஃதறிய
வல்லார் சிலரென்பர்
வாய்மையெலாங் கண்டவரே.

௧௧. மற்றிதனைக் கண்டார்
மலமற்றார் துன்ப மற்றார்
பற்றிதனைக் கொண்டார்
பயனனைத்துங் கண்டாரே.

௧௨. இப்பொருளைக் கண்டா
ரீடருக்கோ ரெல்லைகண்டார்
எப்பொருளுந் தாம்பெற்றிங்
கின்பநிலை யெய்துவரே.

௧௩. வேண்டுவ வெலாம் பெறுவார்
வேண்டா ரெதனையுமற்
றீண்டுபுவி யோரவரை
யீசரெனப் போற்றுவரே.

௧௪. ஒன்றுமே வேண்டா
துலகனைத்தும், ஆளுவர்காண்.
என்றுமே யிப்பொருளோ
டேகாந்தத் துள்ளவரே.

க௫. வெள்ளமடா தம்பி
விரும்பியபோ தெய்திநின
துள்ளமிசைத் தானமுத
வூற்றாய்ப் பொழியு மடா.

க௬. யாண்டுமிந்த, இன்பவெள்ளம்
என்றுநின்னுள் வீழ்வதற்கே
வேண்டு முபாய
மிகவுமெளி தாகுமடா.

கஎ. எண்ணமிட்டா லேபோது
மெண்ணுவதே யிவ்வின்பத்
தண்ணமுதை யுள்ளே
ததும்பப் புரியுமடா.

கஅ. எங்கு நிறைந்திந்த
ஈசவெள்ள மென்னகத்தே
பொங்குகின்ற தென்றெண்ணிப்
போற்றி நின்றாற் போதுமடா.

க௯. யாதுமா மீசவெள்ள
மென்னுள் நிரம்பியதென்
றோதுவதே போதுமதை
யுள்ளுவதே போதுமடா.

உ0. காவித் துணிவேண்டா
கற்றைச் சடைவேண்டா
பாவித்தல் போதும்
பரமநிலை யெய்துதற்கே.

௨௧. சாத்திரங்கள் வேண்டா
சதுமறைக ளேதுமில்லை
தோத்திரங்க ளில்லையுளந்
தொட்டுநின்றாற் போதுமடா.

௨௨. தவமொன்று மில்லையொரு
சாதனையு மில்லையடா
சிவமொன்றே யுள்ளமெனச்
சிந்தைசெய்தாற் போதுமடா.

௨௩. சந்ததமு மெங்குமெல்லாந்
தானாகி நின்றசிவம்
வந்தெனுளே பாயுதென்று
வாய்சொன்னாற் போதுமடா.

௨௪. நித்தசிவ வெள்ள மென்னுள்
வீழ்ந்து நிரம்புதென்றான்
சித்தமிசைக் கொள்ளுஞ்
சிரத்தை யொன்றே போதுமடா.

## பொய்யோ? மெய்யோ?

எல்லா சாஸ்திரங்களும் ஏறக்குறைய உண்மைதான். ஆனால், எல்லாருக்கும், எப்போதும், ஒரே சாஸ்திரம் ஒத்துவராது. சின்ன திருஷ்டாந்தம் சொல்லுகிறேன்:—

ஒரு செல்வர், கிழவனார்; ஒரு வேளை ஆஹாரம் செய்து கொண்டு, லௌகிக விஷயங்களை தான் கவனியாமல், பிள்ளைகள் கையிலே கொடுத்து விட்டு, நியம, நிஷ்டைகள், ஜப, தபங்களுடன் சுந்தர காண்டத்தையும் கடோபநிஷத்தையும், பாராயணம் செய்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறாமலிருப்பதே மேலான வழியென்ற கொள்கை இந்தக் கிழவனாருக்கு சரிப்பட்டு வரும்.

ஒரு 16 வயது ஏழைப்பிள்ளை; தகப்பனில்லை வீட்டிலே தாயாருக்கும் தங்கைக்கும் தனக்குமாக எங்கேனும் போய் நாலு பணம் கொண்டு வந்தால் தான் அன்றன்று அடுப்பு மூட்டலாம். இவன் மேற்படி சுந்தர காண்ட வழியைப்போய்ப் பிடித்தால் நியாயமாகுமா?

'இந்த உலகமே பொய்' என்று நமது தேசத்தில் ஒரு சாஸ்திரம் வழங்கிவருகிறது. ஸந்யாஸிகள் இதை ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்கட்டும். அதைப்பற்றி, இந்த நிமிஷம் எனக்கு வருத்தமில்லை. குடும்பத்திலிருப்போருக்கு அந்த வார்த்தை பொருந்துமா? நடுவீட்டில் உச்சரிக்கலாமா? அவசொல்லன்றோ? நமக்குத் தந்தை வைத்துவிட்டுப் போன

வீடும், வயலும் பொய்யா! தங்கச்சிலைபோலே நிற்கிறாள் மனைவி. நமது துயரத்துக்கெல்லாம் கண்ணீர் விட்டுக் கரைந்தாள். நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள். நமது குழந்தைகளை வளர்த்தாள். அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தானா? பெற்றவரிடம் கேட்கிறேன். குழந்தைகள் பொய்யா? நமது வீட்டில் வைத்துக் கும்பிடும் குலதெய்வம் பொய்யா?

வீடுகட்டிக் குடித்தனம் பண்ணுவோருக்கு மேற்படி சாஸ்திரம் பயன்படாது. நமக்கு இவ்வுலகத்தில் வேண்டியது நீண்டவயது, நோயில்லாமை, அறிவு, செல்வம் என்ற நான்கும் இவற்றைத் தரும்படி தத்தம் குலதெய்வங்களை மன்றாடிக் கேட்க வேண்டும். எல்லா தெய்வங்களும் ஒன்று. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றிலும் தெய்வ ஒளி காணவேண்டும். தெய்வத்தின் ஒளி கண்டால் நான்காம் நிலையாகிய வீடு தானே கிடைக்கும்.

(உலகத்தை நோக்கி வினவுதல்.)

௧. நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே,
நீங்களெல்லாம்
சொற்பனந்தானா?—பல
தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே
நீங்களெல்லாம்
அற்ப மாயைகளோ?—உம்முள்
ஆழ்ந்த பொருளில்லையோ?

உ. வானகமே, இளவெயிலே, மரச்செறிவே
நீங்களெல்லாம்
கானலின் நீரோ ?—வெறுங்
காட்சிப் பிழைதானோ ?
போனதெல்லாம் கனவினைப் போற்புதைந்தழிந்
தே போனதனால்
நானுமோர் கனவோ?—இந்த
ஞாலமும் பொய்தானோ ?

ங. காலமென்றே யொரு நினைவுங் காட்சியென்றே
பல நினைவும்
கோலமும் பொய்களோ ? அங்கு
குணங்களும் பொய்களோ ?
சோலையிலே மரங்களெல்லாம் தோன்றுவ
தோர் விதையிலென்றால்
சோலை பொய்யாமோ ?—இதைச்
சொல்லொடு சேர்ப்பாரோ ?

இயற்கை சொல்லும் விடை:—

ச. காண்பதெல்லாமறையுமென்றால் மறைந்ததெல்லாம்
காண்பமன்றோ
வீண்படு பொய்யிலே—நித்தம்
விதி தொடர்ந்திடுமோ?
காண்பதுவே யுறுதிகண்டாய் காண்பதல்லா
லுறுதியில்லை
காண்பது சக்தியாம்—இந்தக்
காட்சி நித்தியமாம்.

---

(பின்னுரை:—முதற்பாட்டிலே, 'நிற்பது' 'நடப்பது' முதலியன உலகத்தில் தோன்றும் வடிவங்கள். கற்பது, கேட்பது முதலியன செய்கைகள். மூன்றும்பாட்டிலே 'கோலமும் பொய்களோ, அங்கு குணங்களும் பொய்களோ' என்பது தெளிவாகச் சொன்னால் 'தேளின் உருவம் மாத்திரம் பொய்யோ? அது கொட்டுவதும் பொய்தானோ?' என்றகேள்வி.)